
























# வருடாந்த அறிக்கையுடன் கணக்கறிக்கை 2016

## மொறட்டுவைப் பல்கலைக்கழகம், இலங்கை

වාර්ෂික වාර්තාව සහ ගිණුම් වාර්තාව - දෙමළ

வருடாந்த அறிக்கையுடன் கணக்கறிக்கை - தமிழ்

**ANNUAL REPORT & STATEMENT OF ACCOUNTS - TAMIL**

# 2016

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | தொலைநோக்கக் கூற்று | i |
| | செயற்பணிக் கூற்று | i |
| | நிறுவன இலக்குகள் | ii |
| | பல்கலைக்கழக நிருவாக சபை | iii - v |
| | உபவேந்தரின் செய்தி | vi - viii |
| பகுதி 1 | பல்கலைக்கழக செயற்பாடுகள் சார் மீளாய்வு | 01 - 26 |
| பகுதி 2 | மூலவளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய | |
| | பொழிப்பு (மூலவளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய) | 27 |
| | விபரம் (மூலவளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய) | 28 - 29 |
| பகுதி 3 | உள்நாட்டு மாணவர்கள் பற்றிய | |
| | பொழிப்பு (உள்நாட்டு மாணவர்கள் பற்றிய) | 30 - 31 |
| | விபரம் (உள்நாட்டு மாணவர்கள் பற்றிய) | 32 - 38 |
| பகுதி 4 | வெளிநாட்டு மாணவர்கள் பற்றிய விபரம் | 39 - 40 |
| பகுதி 5 | கல்விசார் ஆளணியினர் பற்றிய விபரம் | 41 |
| பகுதி 6 | நிர்வாக ஆளணியினர் பற்றிய விபரம் | 42 |
| பகுதி 7 | கல்விசாரா ஆளணியினர் பற்றிய விபரம் | 43 - 44 |
| பகுதி 8 | ஆய்வு கருத்திட்டங்கள் / ஆக்கவுரிமைகள் பற்றிய | |
| | பொழிப்பு (ஆய்வு கருத்திட்டங்கள் / ஆக்கவுரிமைகள் பற்றிய) | 45 |
| | விபரம் (ஆய்வு கருத்திட்டங்கள் / ஆக்கவுரிமைகள்) | 46 |
| பகுதி 9 | ஆய்வு, புதுமையாக்கம், பிரசுரங்கள் பற்றிய | |
| | பொழிப்பு (ஆய்வு, புதுமையாக்கம், பிரசுரங்கள் பற்றிய) | 47 |
| | விபரம் (ஆய்வு, புதுமையாக்கம், பிரசுரங்கள் பற்றிய) | 48 |
| பகுதி 10 | கருத்தரங்குகள், செயலமர்வுகள், நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய | |
| | பொழிப்பு (கருத்தரங்குகள், செயலமர்வுகள், நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய) | 49 |
| | விபரம் (கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய) | 50 – 51 |
| பகுதி 11 | கிடைத்த விருதுகள் பற்றிய விபரம் | 52 |
| பகுதி 12 | புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாடநெறிகள் பற்றிய விபரம் | 52 |
| பகுதி 13 | மீண்டெழும் செலவினங்கள் பற்றிய விபரம் | 53 |
| பகுதி 14 | மூலதன செலவினங்கள் பற்றிய விபரம் | 53 |
| பகுதி 15 | கருத்திட்ட விபரங்கள் (உள்நாட்டு/ வெளிநாட்டு நிதியிடப்பட்டவை) | 54 - 55 |
| பகுதி 16 | கருத்திட்ட செலவின விபரம் (உள்நாட்டு / வெளிநாட்டு நிதியிடப்பட்டவை) | 56 - 58 |
| பகுதி 17 | நிதிசார் முன்னேற்றம் பற்றிய விபரம் (செலவினம்) | 59 |
| பகுதி 18 | நிதிசார் முன்னேற்றம் பற்றிய விபரம் (உருவாக்கப்பட்ட வருமானம்) | 59 |
| பகுதி 19 | நிதி செயற்திறன் பகுப்பாய்வு | 60 |
| பகுதி 20 | உட்கட்டமைப்பு வசதிகள் பற்றிய விபரம் | 61 |
| பகுதி 21 | நிதிக் கணக்குகள் 2016 | |
| | 21.1 2016.12.31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று | 62 |
| | 21.2 2016.12.31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதி செயற்பாட்டு கூற்று | 63 |
| | 21.3 2016.12.31 இல் முடிவடைந்த ஆண்டின் தேறிய சொத்துக்கள் மாற்றல் கூற்று | 64 |
| | 21.4 2016.12.31 இல் முடிவடைந்த ஆண்டின் காசுப்பாய்ச்சல் கூற்று | 65 |
| | 21.5 நிதி நிலைமைக் கூற்றுக்கான குறிப்புக்கள் | 66 - 69 |
| | 21.6 நிதிச் செயற்திறன் கூற்றுக்கான குறிப்புகள் | 70 – 72 |
| | 21.7 கணக்காய்வாளரின் தலைமையதிபதியின் அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான கருத்துரைகள் | 73 – 94 |
| | 21.8 சட்ட நியாயாதிக்க சபை நிதியியல் முன்னேற்றம் – 2016 | 95 |

## எமது தொலைநோக்கக் கூற்று

உலகளாவிய ரீதியில் அதிகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவுசார் நிறுவனமாக தென் ஆசியாவில் திகழ்வதாகும்.

## எமது செயற்பணிக் கூற்று

- உலக சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் ஆராய்ந்தறியும் மனோபாவத்தையும் அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்வதனையும் போசிக்கக் கூடியதான தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் கல்வியை வழங்குதல்;
- கல்வி வரையறைகளை விருத்திசெய்வதற்காக மற்றும் தேசிய தொழில்நுட்பத் திறமைகளை உயர்வடையச்செய்வதற்காக தேசிய ரீதியில் பொருத்தமான மற்றும் உயர் விளைவுகள் கொண்ட ஆய்வினை மேற்கொள்ளுதல்;
- சர்வதேச ரீதியிலான இடத்தைக் கொண்டதொரு இலங்கைப் பல்கலைக்கழகமாக நாட்டிற்கும் கைத்தொழில் துறைக்கும் சமூகத்திற்கும் நிபுணத்துவ சேவைகளை வழங்குதல்; மற்றும்
- இலங்கையின் நிலைத்திருக்கும், விஞ்ஞான, தொழில்நுட்ப, சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் பங்குபற்றுதல்

என்பன மூலமாக தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் அதிகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அறிவுசார் நிறுவனமாக தென் ஆசியாவில் திகழ்வதாகும்.

## நிறுவன இலக்குகள்

- உயர் கல்வி பயிற்சி நிறுவகமென்ற வகையில் சர்வதேச மட்டத்திலான அங்கீகாரத்தை அடைதல்.
- உலகலாவிய அங்கீகாரத்துடன் உள்நாட்டு மற்றும் சர்வதேச தொடர்புடையதான ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் நிறுவக நிலையில் உயர்நிலையை அடைதல்.
- தேசத்தின் தேவைப்பாடுகள் மற்றும் கைத்தொழில் துறையினதும் சமூகத்தினதும் எதிர்ப்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையிலான கல்வியை வழங்கும் முன்னோடிப் பல்கலைக்கழமாக திகழுதல்.
- பல்கலைகழகங்கள் தமது செயற்பாடுகளில் வினைத்திறனை அடையும் வகையில் கல்வி சார் புலமை மற்றும் பௌதீக சூழலை உயர்த்துதல்.
- முனைப்பான பல்கலைக்கழக கட்டமைப்பின் நிபந்தனைகளை சந்திக்கத்தக்க சிறந்த அறிவுமிக்க, திறமைமிகுந்த மற்றும் திருப்தியடைந்த ஆளணியினர் மற்றும் மாணவர்களை உள்ளடக்கியதுமான சமூகத்தை உருவாக்குதல்.
- உயர் தொழில்நுட்ப மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குவதில் திறமைமிக்க சேவை வழங்கும் முன்னோடியாகத் திகழுதல்.
- இலங்கையில் ஒழுக்க நெறிமுறைகள் மற்றும் உயர்/ தொழில்சார் கல்வி தொடர்பிலான தேசிய அபிவிருத்தி மற்றும் கொள்கை வகுப்பில் அரசாங்கத்திற்கு ஆலோசகராக செயற்படுதல்.
- தர உறுதிப்பாடு மற்றும் வினைத்திறன் மிக்க கூட்டு நல்லாட்சியினை பல்கலைக்கழக கலாசாரத்தில் ஏற்படுத்துதல்.

**உத்தியோகபூர்வ உறுப்பினர்கள்:**

| | |
|---|---|
| உப வேந்தர் (தவிசாளர்) | பேராசிரியர் ஏ.கே.டபிள்யூ. ஜயவர்த்தன |
| பிரதி உப வேந்தர் | பேராசிரியர் ஆர்.ஏ. அட்டலகே |
| பீடாதிபதி, கட்டடக்கலைப் பீடம் | பேராசிரியர் எம்.எல். த சில்வா |
| பீடாதிபதி, பொறியியல் பீடம் | பேராசி. யூ.ஜீ.ஏ. புஷ்வெவல (2016.02.27 வரை)<br>பேராசி. கே.கே.சி.கே. பெரேரா (2016.02.28 முதல்) |
| பீடாதிபதி, தகவல் தொழில்நுட்ப பீடம் | திரு. பீ.எம். கருணாரத்ன |
| பீடாதிபதி, பட்டமேற்படிப்பு கற்கை பீடம் | பேராசிரியர் (திருமதி) எஸ்.ஏ.டீ. டயஸ் |

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்:**

கலாநிதி திலக் சியம்பலாபிட்டிய (2015.04.20 முதல்)

சக்தி பற்றிய சர்வதேச ஆலோசகர் மற்றும் SLEMA பருவ சஞ்சிகையின் ஆசிரியர், இலங்கை சக்தி பற்றிய முகாமையாளர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர், இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தின் கூட்டாண்மை உறுப்பினர், வலுத் திறன் மற்றும் மின்சக்தி உற்பத்தி திட்டமிடல் தொடர்பாக மின்சக்தி, வலு அமைச்சு மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியவற்றில் பணியாற்றியுள்ளார்.

பொறியியலாளர் மங்கள பீ.பி. யாபா (2015.04.20 முதல்)

உத்தேசிக்கப்பட்டுள்ள அபிவிருத்திற்கான முகவராண்மை நிறுவக (AfD) (பெயரிடப்பட்டுள்ள) முகாமைத்துவ பணிப்பாளர், கடல்சார் பொறியியலாளர்/ கப்பல் நிர்மாணக்கலைஞர், பட்டய பொறியியலாளர் மற்றும் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தின் தோழமை உறுப்பினர், கடல்சார் பொறியியலாளர்கள் நிறுவகத்தின் உறுப்பினர் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் விஞ்ஞானியும் தொழில்நுட்பவியலாளரும், இலங்கை பட்டய தொழில்சார் முகாமையாளர்கள் அமைப்பின் ஸ்தாபக தோழமை உறுப்பினரும் ஆவார்.

பொறியியலாளர் சன்ஜீவ சேனாநாயக்க (2015.04.20 முதல்)

சம்பத் வங்கி பீஎல்சி, ஏசியன் ஹோட்டல்ஸ் என்ட் புரொபர்டீஸ் பீஎல்சி மற்றும் ஹேமாஸ் பார்மசுடிகல்ஸ் லிமிடெட் ஆகியவற்றின் பணிப்பாளர், சன்டெல் மற்றும் நேஷன் டிரஸ்ட் வங்கி ஆகியவற்றின் பணிப்பாளராகவும் கொமஷல் பேங் ஒப் சிலோன் நிறுவன மாற்றீட்டு பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார். சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் இலங்கை மற்றும் மாலைத்தீவுகள் ஆகிய நாடுகளுக்கான முன்னாள் வதிவிட பிரதிநிதியும் ஆவார்.

பொறியியலாளர் வஜிர குலதிலக்க (2015.04.20 முதல்)

பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் - NDB கெபிடல் ஹோல்டிங்ஸ் லிமிடெட் (NCAP), தலைவர் – சவுத் ஏசியன் பெடரேஷன் ஒப் எக்சேன்ஜ்ஸ் (SAFE), தோழமை உறுப்பினர் – பட்டய முகாமைத்துவ கணக்காளர்களின் நிறுவகம் – ஐக்கிய இராச்சியம் (FCMA). CFA பட்டயம் பெற்றவர் மற்றும் ஐக்கிய அமொிக்காவின் சர்வதேச அபிவிருத்திற்கான முகராண்மை (USAID), சம்பத் வங்கி மற்றும் CKN நிதி முகாமை உட்பட பிரதான மூலோபாய பதவிகளில் சேவையாற்றியுள்ளார்.

திரு. ஆஷ்லே த வூஸ் (2015.04.20 முதல்)

இலங்கை கட்டடக்கலைஞர்கள் நிறுவகம் மற்றும் பிரித்தானியாவின் கட்டடக்கலைஞர்களது றோயல் நிறுவகம் என்பவற்றின் தோழமை உறுப்பினர். கட்டடக்கலை, நிலத்தோற்ற கட்டடக்கலை மற்றும் பாதுகாப்பும் மரபுரிமையும் சார் முகாமைத்துவ பயிற்சியாளர், தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களத்தின் ஆலோசனை சபை உறுப்பினர் மற்றும் இலங்கையின் வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கத்தின் முன்னாள் தலைவர் மற்றும் ICOMOS (இலங்கை).

திரு. சுரேஷ் ஷா (2015.04.20 முதல்)

பணிப்பாளர் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் – சிலோன் பேவரேஜ் ஹோல்டிங்ஸ் பீஎல்சி. மற்றும் லயன் புரோவரி (சிலோன்) பீஎல்சி., பணிப்பாளர் – கார்சன் கம்பர் பெட்ஜ் பீஎல்சி. மற்றும் புகிட் டாறாஹ் பீஎல்சி., இலங்கை வணிகப் பேரவையின் சென்ற வருடத்திற்கான தலைவர் மற்றும் இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவன தோழமை உறுப்பினர்.

திரு. அஷ்ரப் ஓமர் (2015.04.20 முதல்)

பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் – Brandix இலங்கையின் ஒரே பாரிய ஆடை ஏற்றுமதியாளர். இலங்கையில் ஆடைக் கைத்தொழில் துறையின் வளர்ச்சி சார்பான மூலோபாயத்திற்கு பிரதானமாக சம்பந்தப்பட்ட முக்கிய அமைப்பான கூட்டு ஆடைத் கைத்தொழில் சங்க கூட்டமைப்பை (JAAF) உருவாக்குவதில் மிக முக்கிய காரணகர்த்தாவாக இருந்ததுடன், அவ் அமைப்பின் ஆரம்ப கால தலைவராகவும் பணியாற்றியுள்ளார். அத்துடன், இலங்கை ஆடை ஏற்றுமதியாளர்களது சங்கத்தின் முன்னாள் தலைவரும் ஆடை கைத்தொழில் துறை சார்பாக எப்போதும் குரலெழுப்பக்கூடிய முக்கியத்தரும் ஆவார்.

திரு. மனோஹர த சில்வா (2015.05.12 முதல்)

சனாதிபதி சட்டத்தரணி, சட்ட ஆணைக்குழு மற்றும் சட்டசார் உதவி ஆணைக்குழு ஆகியவற்றின் அங்கத்தவர், சட்டக் கல்வி தொடர்பான கவுன்சிலின் முன்னாள் அங்கத்தவர் மற்றும் மொறட்டுவை பல்கலைக்கழக சட்டம் பற்றிய வருகைதரும் விரிவுரையாளரும் ஆவார்.

திருமதி கீதாஞ்சலி ரூபிகா ரனவக (2015.08.27 முதல்)

2012 இலிருந்து பணிப்பாளர் நாயகம் – இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம், தேசிய சுவடிக்கூட திணைக்களம் மற்றும் இலங்கை சுங்கத் திணைக்களம் ஆகியன சார் சட்டத் திருத்தம் பற்றிய முன்மொழிவுக் குழுக்களின் அங்கத்தவர் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்கள் பலவற்றிலும் குழு அங்கத்தவர் மற்றும் கடந்த 4 ஆண்டு காலப்பகுதியில் உலக புலமைச் சொத்துக்கள் அமைப்பின் (WIPO) ஆதரவுடன் தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் (NIPO) கருத்திட்டங்களை நடைமுறைப் படுத்துவது சார்பாக பணியாற்றியுள்ளார்.

**மூதவையினால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள்** : பேராசிரியர் எம்.எஸ். மானவடு
பேராசிரியர் பீ.ஜீ.ஆர். தர்மரத்ன

**பதிவாளர் (செயலாளர்)** : திரு. ஏ.எல். ஜபர் சாதிக்

**நிதியாளர் (அழைப்பின் மேல்)** : திரு. கே.ஏ.டீ. புஸ்பகீர்த்தி



பேராசி. ஆனந்த ஜயவர்தன

மொறட்டுவை பல்கலைக்கழகமானது யாராலும் மறுக்க முடியாதளவிற்கு இன்று இலங்கையில் **எல்லா வகையிலும் மிகச் சிறந்த** பல்கலைக்கழகமொன்றெனும் கீர்த்தியைப் பெற்றுக் கொண்டுள்ளது. கல்வி அடிப்படையில், ஏற்றுக்கொள்ளப்பட்ட உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகமொன்றில் பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டம் எதிலும் இலகுவாக அனுமதி பெற்றுக்கொள்ளக் கூடிய மற்றும் கற்கைகள் மற்றும் செயற்பாடுகள் ஆகிய இரண்டிலும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த பல்கலைக்கழமொன்றினால் உருவாக்கப்பட்ட பட்டதாரிகளைப் போன்று சிறப்பாகச் செயலாற்றக்கூடிய - தொழில்நுட்பத் துறைகளிலே “உலக தரம் வாய்ந்த பட்டதாரிகளை” உருவாக்குவதற்கு பல்கலைக்கழகம் கடுமையாக உழைக்கின்றது. அதனடிப்படையில், மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பிரதான இலக்கானது கற்கைகள் சார்பாக மிகச் சிறந்த, தன்னம்பிக்கைமிக்க, நெகிழ்வுடைய, அதிகளவில் வேலை பெறக்கூடிய சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரம் வாய்ந்த, பட்டத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் தொழில் செய்யக் கூடிய பட்டதாரிகளை உருவாக்குதல் மற்றும் அதேபோல், அவர்கள் பட்டத்தைப் பெறும்போது எமது மாணவர்கள் அதிகமானோர் “வேலை தேடுபவராக” அன்றி “வேலை உருவாக்குபவர்” எனும் நிலைக்குப் பயிற்றுவிப்பதுமாகும். எமது அதிகமான புதிய பட்டதாரிகளின் வருடாந்த சம்பளத்தை விடக் குறைந்ததொரு தொகையான **ஒரு மாணவருக்கு 9000 அமெரிக்க டொலரை விடவும் குறைந்த செலவில்** (மீண்டுவரும்) பொறியியல், கட்டடக்கலை, கணிய அளவையியல், வடிவமைப்பு, பட்டணமும் நாடும் திட்டமிடல், வசதியளித்தல் முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் போக்குவரத்தும் ஏற்பாட்டு முகாமைத்துவம் போன்ற துறைகளில் உயர்ந்தளவில் தொழில்களில் அமரக் கூடிய, உலக தரம் வாய்ந்த பட்டதாரிகளை மொறட்டுவைப் பல்கலைக்கழகம் உருவாக்குகின்றது என்பதை சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

பல்கலைக்கழகத்தின் மூலோபாய திட்டமிடல் மற்றும் பல பூர்வாங்க வேலைகளை அமுலாக்குதல் மூலமாக இலங்கையை “அறிவியல் கேந்திரநிலையமாக” ஆக்குவதற்கு பங்களிப்புச் செய்யும் அதேவேளை, எமது நாட்டினது பொருளாதார அபிவிருத்தியில் செயற்பாட்டு இயக்கி ஒன்றாக ஆகுவதற்கான சில குறிக்கோள்களை உருவாக்கியுள்ளது.

2016 ஆண்டின் இறுதியில், மொறட்டுவை பல்கலைக்கழகத்தில், பட்டப்படிப்பு மாணவர்கள் 8035 பேர் இருந்ததுடன், இதே வளாகத்தில் ITUM மற்றும் NDT பயிலும் மாணவர்கள் 1050 பேர் இருந்தனர்.

2015 உ./த. மாணவர் தொகுதி மூலம் 2016 நவம்பர் மாதத்தில் மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு 1575 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன், அது, காலப்பகுதி சார்ந்த சிக்கல் மற்றும் பாரிய இடப்பிரச்சினை என்பவற்றை கவனத்தில் கொள்ளாது மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது புதிய அனுமதிகளுக்கான கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் ஏனைய பல பல்கலைக்கழகங்களை விடவும் முன்னனியில் இருந்துமாகும்.

எமது பட்டதாரி நிகழ்ச்சித்திட்டத்திற்கான மாணவர்களினதும், அவர்களின் பெற்றோர்களினதும் அதிகரித்த கேள்வியை எதிர்கொள்வதற்காக பல்கலைக்கழகமானது கடந்த பத்து ஆண்டுகளில் வருடாந்த மாணவர் உள்வாங்கலை சகல விதத்திலும் 39% இற்கு மேலாகவும் தகவல் தொழில்நுட்ப பீட உள்வாங்கல் 180% ஆலும் அதிகரித்துச் சென்றுள்ளது என்பதை இங்கு குறிப்பிட்டுக் கூறுதல் வேண்டும்.

கடந்த பத்தாண்டுகளில் வருடாந்த உள்வாங்கல்கள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து இருப்பதுடன், வரையறுக்கப்பட்ட வசதிகளுடன் மொறட்டுவைப் பல்கலைக்கழகம் எல்லாப் பட்டதாரிகளையும் ஏற்றவகையிலும் தரத்திலும் தடங்களின்றிப் பேணிச் செல்வதையிட்டும் மேம்படுத்தியுள்ளதையிட்டும் பெருமிதம் அடைகின்றது.

2016 இல் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய 1318 மொத்த மாணவர் எண்ணிக்கையில் 1250 (94.8%) பேர் விதிக்கப்பட்ட குறைந்தபட்ச காலவரையறைக்குள் தமது முதாலவது பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்கள். 2016 ஆண்டு பொதுப் பட்டமளிப்புவிழாவில் பட்டமேற்படிப்பு பட்டங்களையும் உள்ளடக்கி மொத்தமாக வழங்கப்பட்ட 1611 பட்டங்களில் 1299 இளமாணிப் பட்டங்களும், 312 பட்டமேற்படிப்பு பட்டங்களும் உள்ளடங்கியிருந்தன. இது கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் முதனிலை பட்ட பட்டதாரிகளில் 9% வளர்ச்சியும் பட்டமேற்படிப்பு பட்டதாரிகளில் 24% வளர்ச்சியுமாகும்.

மொறட்டுவை பல்கலைக்கழகம் 2016 ஆண்டில் பணியாளர்களினதும் மாணவர்களினதும் வினைத்திறன்மிக்க செயலாற்றல் காரணமாக தேசிய ரீதியில் மற்றும் உலகளாவிய ரீதியில் பல துறைகள் சார்பாக அங்கீகாரம் கிடைத்ததன் ஊடாக தொடர்ந்தும் சிறப்பான முன்னேற்றங்களை பெற்று வருகின்றது.

மொறட்டுவை பல்கலைகக்கழகம் 2016 ஆண்டு காலப்பகுதியிலும் தொடர்ந்து சர்வதேசமயப்படுத்துவதற்காக அதிகளவு கவனத்தைச் செலுத்தியது.

அரசாங்கமும், உயர் கல்வி, நெடுஞ்சாலைகள் அமைச்சும் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் மொறட்டுவைப் பல்கலைக்கழகம் சென்ற பல வருடங்களில் அடைந்த குறிப்பிடத்தக்க சாதனைகளை கணக்கிலெடுத்து, அதன் செயல்நுணுக்க முகாமைத்துவ திட்டத்தின் குறிக்கோள்களையும், நோக்கங்களையும், அதன் தூரநோக்கான **"உலகளாவிய ரீதியில் அதிகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கல்வி நிறுவகமாக தென் ஆசியாவில் திகழ்வதாகும்"** என்பதை அடையவும் உதவிபுரியுமென மனப்பூர்வமாக எதிர்பார்க்கின்றோம்.

பேராசிரியர் ஆனந்த ஜயவர்தன
உபவேந்தர்
மொறட்டுவைப் பல்கலைக்கழகம், இலங்கை

மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது (UOM), 1960ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பிரத்தியேக தொழில்நுட்ப நிறுவகம் மற்றும் 1966ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றைத் தொடர்ந்து, 1972ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 15ஆம் திகதி முதல் கட்டுபெத்தைப் பல்கலைக்கழகமாகச் செயற்பட ஆரம்பித்தது.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கட்டுபெத்தைப் பல்கலைக்கழகமானது, அதன் தற்போதய பெயரான “இலங்கை மொறட்டுவை பல்கலைக்கழகம்” எனும் ஒரு சுயாதீனப் பல்கலைக்கழக அந்தஸ்தையும் பெற்றுக்கொண்டது.

2016 ஆண்டில் இறுதியில், மொறட்டுவை பல்கலைக்கழகமானது கட்டடக் கலை, பொறியியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் பட்ட மேற்படிப்புக் கற்கைகள் ஆகிய நான்கு பீடங்களைக் கொண்டிருக்கிறது. பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடம், பட்டமேற்படிப்பு மற்றும் ஆய்வுசார் பட்டங்களை அதிகரிக்கச் செய்வதற்காக 2015 சனவரி மாதம் உருவாக்கப்பட்டது. 2016 இறுதியின் போது பல்கலைக்கழகத்தின் மூலோபாய முகாமைத்துவத் திட்டத்திற்கிணங்க புதிதாக வியாபார பீடமொன்றை உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) மூலம் தெரிவு செய்யப்பட்ட மாணவர் களுக்கான பதினொரு (11) இளமாணிப் பட்டப் பாடநெறிகளை வழங்கும் கல்விசார் பீடங்கள் இருபது (20) (பார்க்க: அட்டவணை - 1) 2016 ஆண்டின் இறுதியில் பல்கலைக்கழகத்தில் காணப்பட்டன. செலவை மீட்கும் அடிப்படையில் இந்த 20 திணைக்களங்களும் ஐம்பதற்கும் (50) மேற்பட்ட பட்டமேற்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துகின்றன. அதில், 2016 ஆண்டில் 44 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளதுடன், புதிய பட்டமேற்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் சில உட்பட 22 நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய புதிய உள்வாங்கல் செயற்பாட்டை மேற்கொண்டுள்ளது.

இப் பின்னணியுடன் இந்த மீளாய்வானது, மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி

**அட்டவணை 1- மொறட்டுவை பல்கலைக்கழக பீடங்கள் மற்றும் திணைக்களங்கள்**

| |
|---|
| **பொறியியல் பீடம்** |
| இரசாயன மற்றும் செயல்முறை பொறியியல் திணைக்களம் |
| சிவில் பொறியியல் திணைக்களம் |
| கணினி விஞ்ஞான, பொறியியல் திணைக்களம் |
| நில மூலவளங்கள் பொறியியல் திணைக்களம் |
| மின் பொறியியல் திணைக்களம் |
| இலத்திரணியல், தொலைத்தொடர்பு பொறியியல் திணைக்களம் |
| தொழில்நுட்பம் சார் முகாமைத்துவ திணைக்களம் |
| பொருட்கள் விஞ்ஞானம் மற்றும் பொறியியல் திணைக்களம் |
| இயந்திரப் பொறியியல் திணைக்களம் |
| கணிதவியல் திணைக்களம் |
| புடவையும் ஆடை தொழில்நுட்பமும் திணைக்களம் |
| போக்குவரத்து மற்றும் தேவை ஒழுங்கமைப்பு விநியோக முகாமைத்துவ திணைக்களம் |
| மொழிகள் திணைக்களம் |
| **கட்டடக்கலை பீடம்** |
| கட்டடக்கலை திணைக்களம் |
| பட்டணமும் நாடும் திட்டமிடல் திணைக்களம் |
| கட்டட பொருளியல் திணைக்களம் |
| ஒருங்கிணைந்த வடிவமைப்பு திணைக்களம் |
| **தகவல் தொழில்நுட்ப பீடம்** |
| தகவல் தொழில்நுட்ப திணைக்களம் |
| கணிப்பீட்டு கணிதவியல் திணைக்களம் |
| பல்துறைசார் கற்கைகள் திணைக்களம் |
| **பட்டமேற்படிப்புக் கற்கைகள் பீடம்** |

பெற்றுக்கொள்ளல் அதிகரிக்கப்பட்டது சார்பாகவும், அதையடுத்து 2016 ஆம் ஆண்டில் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் அடைவுகள் மற்றும் அங்கீகாரங்கள் தொடர்பாக முதலில் நோக்குகின்றது. அதன் பின்னர் அது, மூலோபாயத் திட்டமிடல் அம்சங்கள், முதலீட்டுச் செலவுகள், புத்தாக்கமும் தொழில்முனைவுசார் தன்மையும் கொண்ட பட்டதாரிகளை உருவாக்குதல், பல்கலைக்கழக-கைத்தொழிற்றுறை ஒத்துழைப்புக்கள், தர உத்தரவாதம் என்பவற்றுடன் ஆய்வு விவரக்குறிப்பு மற்றும் சர்வதேசமயப்படுத்தல் சார்பாக முன்னேற்றும் எமது முயற்சி போன்றவற்றை நோக்குகின்றது. பல்கலைக்கழகத்தின் மூலோபாய அபிவிருத்திக்கு இடையூறாக அமைந்த வரையறைகள் பற்றிய ஒரு சுருக்கமான கூற்றுடன் ஆய்வு முடிவடைகின்றது.

### 1.1 பல்கலைக்கழக கல்வி பெற்றுக்கொள்வதை அதிகரித்தல்

2000 ஆம் ஆண்டில் மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது, பல்கலைக்கழகத்தினால் தனிவேறாக தேசிய தொழில்நுட்ப திப்ளோமாவை (NDT) வழங்குவதற்காக மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவகத்தை (ITUM) உருவாக்கியதுடன், இது அப்போது பொறியியல் பீடத்தின் ஒரு பகுதியாக இருந்தது. அதன்போது 2300 மாணவர்களைக் கொண்ட பொறியியல் மற்றும் கட்டடக்கலை ஆகிய இரண்டு பீடங்களே இப் பல்கலைக்கழத்தில் காணப்பட்டன. என்டீரீ பாடநெறியில் 1050 திப்ளோமா மாணவர்கள் இருந்தனர். பொறியியல் பீடமானது, பொறியியல் பி.எஸ்சி. எனும் பட்டத்தினை ஒன்பது துறைகளில் வழங்கிய அதேவேளை, கட்டடக்கலை பீடமானது கட்டட சூழல் பி.எஸ்சி. மற்றும் கணிய அளவையியல் பி.எஸ்சி. ஆகிய இரண்டு பட்ட நிகழ்ச்சிகளை வழங்கியது.

2015 ஆண்டின் இறுதியில், மொறட்டுவை பல்கலைக்கழகத்தில், பட்டப்படிப்பு மாணவர்கள் 7794 பேர் இருந்ததுடன், இதே வளாகத்தில் ITUM மற்றும் NDT பயிலும் மாணவர்கள் 1050 பேர் இருந்தனர். பொறியியல் பீடமானது மூன்று பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றது. அவை, பி.எஸ்சி. பொறியியல் (விசேடமான கற்கைப் பிரிவுகள் பத்து), பி.எஸ்சி. போக்குவரத்து மற்றும் தேவை விநியோக ஒழுங்கமைப்பு முகாமைத்துவம், பீ. வடிவமைப்பு - நவநாகரீக வடிவமைப்பு மற்றும் உற்பத்தி அபிவிருத்தி என்பனவாகும்.

கட்டடக்கலைப் பீடம் ஆறு பட்ட நிகழ்ச்சிகளை வழங்குகின்றது. அவை, பீ. கட்டடக்கலை, பீ. வடிமைப்பு, பி.எஸ்சி. கணிய அளவையியல், பி.எஸ்சி. வசதிகள் முகாமைத்துவம், பி.எஸ்சி. பட்டணமும் நாடும் திட்டமிடல் மற்றும் பி.எஸ்சி. நிலத்தோற்ற வடிவமைப்பு கட்டடக்கலை பட்டங்களுமாகும். தகவல் தொழில்நுட்ப பீடமானது, பி.எஸ்சி. தகவல் தொழில்நுட்பம் மற்றும் பி.எஸ்சி. தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் ஆகிய இரண்டு பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் யாவும் 4 வருடங்கள் கொண்ட கௌரவ பட்ட நிகழ்ச்சித்திட்டங்களாகும். இதற்கு மேலதிகமாக, தகவல் தொழில்நுட்பப் பீடம் தனது பங்காளி நிறுவனங்களின் உதவியுடன் இணைந்து வெளிவாரியாக வழங்கும் நிகழ்ச்சித்திட்டமாக தகவல் தொழில்நுட்ப இளமாணி (BIT) நிகழ்ச்சித்திட்டத்தை வழங்குகின்றது.

2016 நவம்பர் மாதத்தில் 2015 உ./த. மாணவர் தொகுதியிலிருந்து மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு 1575 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன், அது, காலப்பகுதி சார்ந்த சிக்கல் மற்றும் பாரிய இடப்பிரச்சினை என்பவற்றை கவனத்தில் கொள்ளாது மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது புதிய அனுமதிகளுக்கான கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் ஏனைய பல பல்கலைக்கழகங்களை விடவும் முன்னனியில் இருந்துமாகும். இவ்வாறு தாமதித்து சேர்த்துக்கொள்ளல் அரச பல்கலைக்கழக முறைமைக்கே அச்சுறுத்தலனாது என்பதுடன், தாமதங்களை தவிர்த்துக் கொள்ளவும் மற்றும் 2016 உயர் தர மாணவர் உள்வாங்கலை 2017 ஆகஸ்ட்/செப்ரெம்பர் மாதமளவில் மேற்கொள்ளவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் இணைந்து நடவடிக்கைள் எடுக்கப் படுகின்றன.

எமது பட்டதாரி நிகழ்ச்சித்திட்டத்திற்கான மாணவர்களினதும், அவர்களின் பெற்றோர்களினதும் அதிகரித்த கேள்வியை எதிர்கொள்வதற்காக பல்கலைக்கழகமானது கடந்த பத்து ஆண்டுகளில் வருடாந்த மாணவர் உள்வாங்கலை சகல விதத்திலும் 39% இற்கு மேலாகவும் தகவல் தொழில்நுட்ப பீட உள்வாங்கல் 180% ஆலும் அதிகரித்துச் சென்றுள்ளது என்பதைக் இங்கு குறிப்பிட்டுக் கூறுதல் வேண்டும். கடந்த பத்து மாணவர் உள்வாங்கல்கள் தொடர்பாகவும் மூன்று பீடங்களுக்கும் பட்டதாரி அபேட்சகர்கள் உள்வாங்கப்பட்ட முறையினை உரு-1 வெளிக்காட்டுகிறது. Z-புள்ளி பற்றிய பிரச்சினையின் விளைவாக மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை சரி செய்யும் வகையில் வழங்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்பின் காரணமாக பல்கலைக்கழகமானது பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் மேலதிக மாணவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியேற்பட்ட 2011/2012 கல்வியாண்டு விசேடமான ஆண்டாக அமைந்தது.

**உரு 1 – கடந்த பத்து ஆண்டுகள் சார்பாக பீடங்களுக்கான வருடாந்த உள்வாங்கல்**




மொறட்டுவைப் பல்கலைக்கழகம் 2006ம் ஆண்டில் அதனது திறந்த தொலைக் கல்வி (ODL) முறையிலான முதலாவது வெளிவாரி இளமாணி நிகழ்ச்சித்திட்டமான தகவல் தொழில்நுட்ப இளமாணிப் பட்டத்தை (BIT) ஆரம்பித்தது. மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பிரதான

திட்டத்தின் ஊடாக இந்த திறந்த மற்றும் தொலைக்கல்வி முறையானது உயர் தரத்தில் தகுதிபெற்ற, குறிப்பாக கிராமபுர பிரதேசத்தைச் சேர்ந்த அதிக எண்ணிக்கையான மாணவர்களுக்கு இப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் உயர் தரத்தைக் கொண்ட கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கின்ற முறையொன்றாக இனம் காணப்பட்டுள்ளது. திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தின் (CODL) தொழிற்பாடு மற்றும் நிர்வாக தரத்தினை உயர்த்தும் எதிர்பார்ப்புடன் 2012 ஆண்டு செம்ரெம்பர் மாதம் இருபத்தோராம் நூற்றாண்டுக்கான உயர் கல்வி (HETC) திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூ. 20 மில்லியன் மானியத்துடன் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலைய செயற்பாடுகள் விரிவுபடுத்தப்படுத்தப்பட்டன. இம் மானியத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிகள் அதிகமாக 2014 - 2016 ஆண்டுகளில் செலவிடப்பட்டது. இந்த BIT நிகழ்ச்சித் திட்டமானது, பிரதானமாக அங்கீகாரம் பெற்ற பங்காளி நிறுவனங்களின் ஊடாக வழங்கப் படுவதுடன், இந்த முன்மாதிரியானது ஏனைய பல பல்கலைக்கழகங்கள் மூலம் வெளிவாரி பட்டங்கள் வழங்கப்படுகின்ற முறையை விட மாறுபட்டுக்காணப்படுவது அதன் தர உத்தரவாதப்படுத்தல் மற்றும் மாணவர் எண்ணிக்கை சார் கட்டுப்பாடும் ஆகும். 2016 ஆண்டின் போது இந் நிகழ்ச்சித்திட்டத்தை தொடருவதற்காக 280 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன், 2016 ஆண்டின் இறுதியில் 369 பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இந் நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ந்து கொண்டிருந்தனர்.

## 1.2 அடைவுகள் மற்றும் அங்கீகாரங்கள்

கடந்த பத்தாண்டுகளில் வருடாந்த உள்வாங்கல்கள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து இருப்பதுடன், வரையறுக்கப்பட்ட வசதிகளுடன் மொறட்டுவைப் பல்கலைக்கழகம் எல்லாப் பட்டதாரிகளையும் ஏற்றவகையிலும் தரத்திலும் தடங்களின்றிப் பேணிச்செல்வதனாலும் மேம்படுத்தியுள்ளதனாலும் பெருமிதம் அடைகின்றது. 2016 இல் நடாத்தப்பட்ட பட்டதாரிகளின் தொழில் தன்மைகள் பற்றிய டிரஷர் ஆய்வில் (Tracer surveys) மொறட்டுவைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் கைத்தொழில்களாலும், அதன் தொழில் வழங்குநர்களாலும் பெரிதும் வேண்டப்படுகின்றார்கள் என்பதைக் சுட்டிக்காட்டும் வகையில் அவர்களின் பட்டமளிப்பு விழாவின் போது சகல பட்டதாரிகளும் 94.3% மும், பொறியில் பட்டதாரிகள் 95.5% மும், கட்டடக்கலை மற்றும் கணிய அளவையியல் பட்டதாரிகள் 100% மும், தகவல் தொழில்நுட்பப் பட்டதாரிகள் 97.4% மும் தொழிலைப் பெற்றுள்ளனர் எனும் தகவல் பெறப்பட்டுள்ளது. உரு-2 மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் பட்டப்படிப்பு பாடநெறிகள் ஒவ்வொன்றினதும் தொழில்வாய்ப்புத்திறன் வீதத்தைக் காட்டுகிறது.

உரு 2 – பல்வேறுவகையான பாடநெறிகள் சார்பான வேலைவாய்ப்புத்திறன் வீதம்




2016 இல் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய 1318 மொத்த மாணவர் எண்ணிக்கையில் 1250 (94.8%) பேர் விதிக்கப்பட்ட குறைந்தபட்ச காலவரையறைக்குள் தமது முதாலவது பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்கள். 2016 ஆண்டு பொதுப் பட்டமளிப்புவிழாவில் பட்டமேற்படிப்பு பட்டங்ளையும் உள்ளடக்கி மொத்தமாக வழங்கப்பட்ட 1611 பட்டங்களில், 1299 இளமாணிப் பட்டங்களும், 312 பட்டமேற்படிப்பு பட்டங்களும் உள்ளடங்கியிருந்தன. இது கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் முதனிலை பட்ட பட்டதாரிகளில் 9% வளர்ச்சியும் பட்டமேற்படிப்பு பட்டதாரிகளில் 24% வளர்ச்சியும் ஆகும்.

2016 ஆண்டில் பணியாளர்களினதும் மாணவர்களினதும் வினைத்திறன்மிக்க செயலாற்றல் காரணமாக தேசிய ரீதியில் மற்றும் உலகளாவிய ரீதியில் பல துறைகள் சார்பாக அங்கீகாரம் கிடைத்ததன் ஊடாக தொடர்ந்தும் மொறட்டுவை பல்கலைக்கழகம் சிறப்பான முன்னேற்றங்களை பெற்று வருவதுடன், குறிப்பிடத்தக்க சில விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

சர்வதேச விருதுகள்:

- கட்டடக்கலைஞர் கலாநிதி என். பெரேரா அவர்களால் ஆசியா கட்டடக்கலைஞர்களது பிராந்திய கவுன்சிலின் மூலம் வழங்கப்படும் வளர்ந்துவரும் கட்டடக்கலைஞர் – 2016 கட்டடக்கலை ஆசியா விருதை வென்றெடுத்தார். அத்துடன், 2016 ஆண்டுக்கான இந்தியாவின் AD- ARCHITECTURAL DIGEST நிறுவனத்தின் மூலம் வழங்கப்படுகின்ற கட்டடக்கலை மற்றும் வடிவமைப்பு பற்றிய மிகவும் செல்வாக்குள்ள பெயர்களில் ஒருவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- பேராசி. ஏ.கே.டபிள்யூ. ஜயவர்தன அவர்கள், 2016 ஆண்டின் CMO கவுன்சில் உடன் உலக கல்வி காங்கிரஸ், CMO ஆசியா மூலம் வழங்கப்படுகின்ற 7 ஆவது ஆசியாவின் கல்விசார் சிறந்த விருதை வென்றெடுத்தார்.

- கலாநிதி ஆர். ஹல்வதுர அவர்கள், Energy Globe பவுன்டேஷன் மூலம் வழங்கப்படும் 2016 ஆண்டின் Energy Globe தேசிய விருதை வென்றெடுத்தார்.

- முதன்முறையாக பங்குபற்றிய மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் (UOM) அணியொன்றினால் மூன்று விருதுகள் வென்றெடுக்கப்பட்டன. ஐக்கிய இராச்சியத்தின் எந்திர பொறியியாளர்கள் நிறுவகத்தின் மூலம் 2016 ஆண்டின் இலண்டன் நகர் IMechE மாணவர்களது போர்முலா கார் போட்டியில் சிறந்த ஓட்டுநர், சிறந்த புதுமுகம் மற்றும் சிறந்த அணி ஆகிய விருதுகள் வழங்கப்பட்டன.



- கலாநிதி வை.டபிள்யூ.ஆர். அமரசிங்ஹ அவர்களின் ஆலோசனைப்படி மூன்று மாணவர்களைக் கொண்ட குழுவொன்றினால் ஐக்கிய இராச்சியத்தின் எந்திர பொறியியாளர்கள் நிறுவகத்தின் மூலம் நியூசிலாந்தில் நடாத்தப்பட்ட செவிப்புலன் கோளாறுடைய ஆட்களுக்கான 2016 ஆண்டின் IMechE ஆசியா பசுபிக் பிராந்திய வடிவமைப்பு போட்டியின் தெற்காசிய பிராந்திய இறுதிப் போட்டியில் முதலாம் இடம் வென்றெடுக்கப்பட்டது.



- “Bit Masters” பெயருடைய மாணவர் குழுவொன்றின் மூலம் மைக்ரோசொப்ட் நிறுவனத்தினால் வழங்கப் படும் மைக்ரோசொப்ட் இமேஜின் கிண்ண – 2016 உலக மட்ட இறுதிப் போட்டியின் புதுமையாக்க பிரிவில் 2 ஆவது இடம் வென்றெடுக்கப்பட்டது.



- மாணவர் அணியொன்றின் மூலம் IIT காண்பூர் வருடாந்த தொழில்நுட்ப மற்றும் தொழிலுரிமைத்துவ விழாவான சர்வதேச தன்னியக்க ரொபோடிக்ஸ் சவால் - IARC 2016 நிகழ்வில் 1 ஆம் இடம் வென்றெடுக்கப்பட்டது.



- ஸ்பைனில் உள்ள மிகப் பெரிய பொதுமக்கள் ஆய்வு அமைப்பான கொன்சேஜோ சுபீரியர் தி இன்வெஸ்டிகேஷன்ஸ் சைன்டிபிகாஸ் (Consejo Superior de investigaciones Cientificas) (CSIC) நிறுவனத்திற்குரிய ஆய்வுசார் குழுவான Cybermetrics ஆய்வுகூடத்தின் மூலம் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் டிஜிடல் பாதுகாப்பகம் இலங்கையிலுள்ள 1 ஆம் நிலை பாதுகாப்பகமாக பட்டியலிடப்பட்டுள்ளது.




| ranking | World Rank | Instituto | Size | Visibility | Files Rich | scholar |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1124 | University of Moratuwa Digital Collections | 801 | 1536 | 1252 | 474 |
| 2 | 1222 | e Repository University of Kelaniya | 497 | 1672 | 1506 | 462 |
| 3 | 1314 | University of Colombo e-Repository | 1452 | 1452 | 899 | 1276 |
| 4 | 1453 | University of Sri Jayawardenepura Digital Repository | 1499 | 1611 | 1121 | 1249 |
| 5 | 1713 | Research Archive at Open University of Sri Lanka | 1088 | 1762 | 1259 | 1775 |

தேசிய விருதுகள்:

- மொறட்டுவைப் பல்கலைக்கழகம், இலங்கை பொறியியலாளர்களது நிறுவனத்தின் வருடாந்த TECHNO பொறியியல் கண்காட்சியில் பிரதானமாக பொறியியல் பீடத்தின் ஆய்வு மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை செய்துகாட்டி பல்கலைக்கழக பிரிவில் சிறந்த விற்பனைக் கூடத்திற்கான தங்கப் பதக்கத்தை வென்றெடுத்தது.

- பேராசி. (திருமதி) ஜயசிங்ஹ அவர்கள், 2016 ஆண்டின் பொறியியல், கட்டடக்கலை, கணிய அளவையியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் உட்பட தொழில்நுட்பம் மற்றும் அது சார்ந்த விஞ்ஞானங்கள் பற்றிய துறைகளில் மிகச் சிறந்த சிரேஷ்ட ஆய்வாளருக்கான CVCD சிறந்த விருதை வென்றெடுத்தார்.

- கலாநிதி ஆர். ஹல்வதுர அவர்கள், 2016 ஆண்டின் பொறியியல், கட்டடக்கலை, கணிய அளவையியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் உட்பட தொழில்நுட்பம் மற்றும் அது சார்ந்த விஞ்ஞானங்கள் பற்றிய துறைகளில் மிகச் சிறந்த இளம் ஆய்வாளருக்கான CVCD சிறந்த விருதை வென்றெடுத்தார்.

- மாணவர்கள் குழுவொன்றின் மூலம் மொபிடெல் ஸ்ரீலங்கா நிறுவனத்தினால் நடாத்தப்படும் Google IO Extended Hackathon – 2016 போட்டியில் 1 ஆவது இடத்துக்கான விருது வென்றெடுக்கப்பட்டது.

- மாணவர்கள் அணியொன்றின் மூலம் இலங்கை கணினி அவசர தயார்படுத்தல் குழு ஒருங்கிணைப்பு நிலையத்தின் (CERT/CC) மூலம் இலங்கை பல்கலைக்கழக மாணவர்களுக்கு நடாத்தப்படும் CSE 2016 – தகவல் பாதுகாப்பு வினாவிடை போட்டியில் 1 ஆவது இடம் வென்றெடுக்கப்பட்டது.

- மாணவர்கள் குழுவொன்று மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் மூலம் நடாத்தப்படும் மைக்ரோசொப்ட் இமேஜின் கிண்ணம் 2016 – இலங்கை போட்டியின் கணினி கேம்ஸ் பிரிவில் 1வது இடம் வென்றெடுக்கப்பட்டது.

- எமது மாணவர்கள் hackX 2k 16 – பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான Hackathon – 2016 போட்டியில் சம்பியன்ஸ் ஆகினர்.

- மாணவர்கள் குழுவொன்று மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் மூலம் நடாத்தப்பட்ட இமேஜின் கிண்ணம் 2016 – இலங்கை போட்டியின் உலக பிரஜை பிரிவில் 3 ஆம் இடத்தை வென்றெடுத்தது.

- மாணவர் குழுவொன்று BCS இலங்கை பிரிவின் மூலம் நடாத்தப்பட்ட தேசிய சிறந்த தர ICT விருது - NBQSA 2016 போட்டியில் மூன்றாம்நிலை (தொழில்நுட்ப) பிரிவில் தங்கப் பதக்கத்தை வென்றெடுத்தது.



அங்கீகாரம் சார் பயணம்

ஐக்கிய இராச்சியத்தின் பட்டய அளவையிலாளர்கள் றோயல் நிறுவகத்தின் வெளிவாரி பரீட்சையாளர்கள், கணிய அளவையியல் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடர்ந்தும் "உலகின் மிகவும் சிறந்த கணிய அளவையியல் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் ஒன்று" என மதிப்பீடு செய்துள்ளனர். இந் நிகழ்ச்சித்திட்டமானது, சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உலகப் புகழ்பெற்ற மூன்று நிறுவனங்கள் உட்பட தொழிற்றுறை சார்ந்த நான்கு நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பட்டத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் வெகுசீக்கிரமாக 100% தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக இந்த நிகழ்ச்சித்திட்டதின் தரமானது பிரதிபளிக்கப்படுகிறது.

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் சீரான கல்விசார் நடவடிக்கைகளின் விளைவாகவும், அதன் கைத்தொழிலினை அடிப்டையாகக் கொண்ட ஆய்வு, தாக்கச் செயல்கள், சாதனைகள் ஆகியவற்றினால், கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள், பல்கலைக்கழக முறைமையிலுள்ள கல்விசார் சமூகங்கள், மாணவர்கள் ஆகியோர்களிடையே மொறட்டுவைப் பல்கலைக்கழகம் இலங்கையில் "மிகவும் சிறந்ததொரு பல்கலைக்கழகம்" என்னும் தோற்றப்பாட்டினை ஏற்படுத்தியுள்ளது.

## 1.3 பிரதான திட்டம் மற்றும் செயல்நுணுக்க முகாமைத் திட்டம்

மொறட்டுவைப் பல்கலைகழகத்தின் 2020, 2030ஆம் ஆண்டுக்கான பிரதான திட்டம் கட்டடக்கலை பீடத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர் குழுவொன்றினால் தயாரிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் தற்போதைய சகல பௌதிக அபிவிருத்தி செயற்பாடுகளும் இந்த பிரதான திட்டத்திற்கும் செயல்நுணுக்க முகாமைத் திட்டத்திற்கும் (SMP) 2014-2018 ஏற்ப மேற்கொள்ளப்படுகிறது. பல்கலைக்கழகம் சார் துரித விரிவாக்கத்துடன், 2020 மற்றும் 2030 தொடர்பான திருத்தப்பட்ட பிரதான திட்டங்கள் பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நிபுணத்துவக் குழுவொன்றின் மூலம் தேசிய அபிவிருத்தித் திட்டம் மற்றும் உயர் கல்வி அமைச்சினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் கூட்டுத்திட்டம் ஆகியவற்றுடன் இணைந்ததாக மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் சார்பான துரித அபிவிருத்தி திட்டங்கள் உள்ளடக்கப்பட்டு மேம்படுத்தப்படுகின்றது.

முன்னைய 2010–2015 கூட்டுத் திட்டம் திருத்தியமைக்கப்படுவதன் மூலம், செயல்நுணுக்க முகாமைத் திட்டம் (SMP) 2014-2018 அபிவிருத்தி செய்யப்பட்டதுடன், 2013 ஆண்டின் பிற்பகுதியில் அதன் பங்காளிகள் எல்லோருடனும் பரந்தளவில் கலந்துரையாடியதன் பின்னர், 2014 மார்ச் மாதத்தில் பல்கலைக்கழக நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. செயல்நுணுக்க முகாமைத்துவத் திட்டத்தை (2014-2018) மீளாய்வு செய்தல் மற்றும் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தை (2015/2016) அபிவிருத்தி செய்தல் தொடர்பாக சகல பிரதான பணியாளர்களினதும் பங்குபற்றலுடன் இரண்டு நாள் வதிவிட செயலமர்வொன்று 2015 யூன் மாதத்தில் நடாத்தப்பட்டது.

2014-2018 செயல்நுணுக்க முகாமைத்துவத் திட்ட (SMP) மீளாய்வின் போது, மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் நிதித் தேவைப்பாடுகள் பெருமளவு அவசியமற்ற அதன் இலக்குகள் மற்றும் நோக்கங்கள் பெரும்பாலானவற்றை தற்போது அடைந்துள்ளது என்பதையும் எஞ்சிய இலக்குகளையும் அடைந்துகொள்ளும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது என்பதையும் வெளிக்காட்டியது. 2017 – 2021 சார்பான செயல்நுணுக்க முகாமைத்துவத் திட்டத்தை (SMP) இற்றைப்படுத்துவதற்காக மற்றுமொரு சிந்தனைகிளறல் செயலமர்வொன்று 2017 சனவரி மாதம் நடத்தப்படவுள்ளது.



SMP செயலமர்வு 2017 சனவரி

## 1.4 மூலதன முதலீடுகள்

மொறட்டுவை பல்கலைக்கழகம் அதன் பௌதிக உட்கட்டமைப்பு வசதிகளைள அபிவிருத்தி செய்வதற்காக மிக விசேட நிதிகளைப் பெற்றுக்கொண்டது. மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களின் விரிவாக்கத்திற்கு இணைவாக கடந்த ஐந்தாண்டு காலப்பகுதியினுள் பூர்த்திசெய்யப்பட்ட நிர்மாணக் கருத்திட்டங்கள் பற்றிய விபரங்களை அட்டவணை-2 காட்டுகிறது.

2016 ஆண்டின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) ஊடாக திறைசேரியிலிருந்து மூலதன முதலீடாக கட்டட நிர்மானிப்புக்காக ரூ. 361 மில்லியன் கிடைத்ததுடன், மூலதனச் சொத்துக்களை புனரமைப்புச் செய்வதற்காக ரூ. 82 மில்லியனும், பல்கலைக்கழக குடியிருப்புக் கருத்திட்டத்திற்காக ரூ. 40 மில்லியனும், மனித மூலதன அபிவிருத்தி கருத்திட்டத்திற்காக ரூ. 2.3 மில்லியனும், ஆய்வு வலுவூட்டுதல் சார்பாக ரூ. 34.7 மில்லியனும் மற்றும் பல்கலைக்கழக வரலாற்றிலே கூடிய தொகையான - நிலையான சொத்துக்களை கையேற்பதற்காக ரூ. 843 மில்லியனும் பெறப்பட்டன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) மூலம் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை பல்கலைக்கழகம் முழுமையாகப் பயன்படுத்திய போதிலும், செலவிடப்பட்ட ரூ. 191.5 மில்லியனை திறைசேரி தொழிற்பாடுகள் பிரிவினால் விடுவிப்புச் செய்யப்படவில்லை. இதற்கு மேலதிகமாக, பிற மூலங்கள் மற்றும் பல்கலைக்கழக அபிவிருத்தி நிதி, திணைக்களம் சார்ந்த அபிவிருத்தி நிதி ஆகியவற்றிலிருந்து கிடைத்த ரூ. 34.8 மில்லியனை பொது நிர்வாக சுற்றுநிருபம் இல. 380 இன் பிரகாரம் 2016 ஆண்டில் புதிய மூலதன உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக பல்கலைக்கழகத்தின் மூலம் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 2 – கடந்த 5 வருடத்திலான மூலதன உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்கள்**

| கருத்திட்டம் | [illegible] (ரூ.மில்லியன்) | தற்போதய நிலை |
|---|---|---|
| மதன்ஜீத் தெற். நீர் முகா. நிலை.(வெளிவாரி நிதியிடல்) | 50 | 2012 ல் பூ.செ.பட்டது |
| புட. ஆடை தொ.நு.திணை.வட.கிழ. விரிவாக்கம் | 83 | 2012 ல் பூ.செ.பட்டது |
| போக்குவரத்தும் ஏற்பாட்டு முகாமை. கட்டடம் | 148.2 | 2014 ல் பூ.செ.பட்டது |
| கட்டடக்கலை பீடம் – கட். II (பட்டணமும் நாடும் திட்டமிடல்) | 140 | 2015 ல் பூ.செ.பட்டது |
| மாணவ நிலையம் மற்றும் சிற்றுண்டிச்சாலை விரிவாக்கல் | 57 | 2015 ல் பூ.செ.பட்டது |
| நெடுஞ்சாலை சார் பரிசோதனை ஆய்வுகூடம் - கட்டம் I | 6.7 | 2015 ல் பூ.செ.பட்டது |
| விடுதி கருத்திட்டத்தின் கீழ் விடுதிக் கட்டடம் - 1 (Pre-fabricated) (உயர் கல்வி அமைச்சின் நேரடி நிதியளி.) | 196.4 | 2016 ல் பூ.செ.பட்டது |
| விடுதி கருத்திட்டத்தின் கீழ் விடுதிக் கட்டடம் - 2 (Pre-fabricated) (உயர் கல்வி அமைச்சின் நேரடி நிதியளி.) | 196.4 | 2016 ல் பூ.செ.பட்டது |
| தகவல் தொழில்நுட்ப பீடக் கட்டடம் - கட்டம் II | 205 | 2016 ல் பூ.செ.பட்டது |
| கட்டடக்கலை பீடம் – கட்டம் III (ஒருங்கிணைந். வடிவமைப்பு) | 110 | 90% பூ.செ.பட்டுள்ளது |
| கட்டடக்கலை பீடம் – கட்டம் IV (கட்டடக்கலை) | 150 | 98% பூ.செ.பட்டுள்ளது |
| நிருவாக அலகுக் கட்டிடத்தொகுதி | 282 | 90% பூ.செ.பட்டுள்ளது |
| கட்டடக்கலை பீட விரிவுரை அறை கட்டடம் (உருக்கு) | 164 | 85% பூ.செ.பட்டுள்ளது |
| பொறியியல் பீட பலநோக்குக் கட்டடம் (உருக்கு) | 184 | 85% பூ.செ.பட்டுள்ளது |
| பெண்கள் விடுதி (400 மாணவிகளுக்கானது) | 194 | நடைபெறுகின்றது |
| விடுதி கட்டடம் 3 (Pre-fabricated) விடுதிக் கருத்திட்டத்தின் கீழ் (உயர் கல்வி அமைச்சின் நேரடி நிதியளி.) | 196.4 | நடைபெறுகின்றது |
| நெடுஞ்சாலை சார் பரிசோதனை ஆய்வுகூடம் - கட்டம் II | 23.7 | நடைபெறுகின்றது |
| கட்டட பொருளியல் திணைக்கள கட்டடம் | 75 | நடைபெறுகின்றது |
| பொருட்கள் விஞ். மற்றும் பொறியியல் திணைக்க. கட்டடம் | 439 | நடைபெறுகின்றது |
| புடவையும் ஆடை தொழில்நுட்பமும் திணைக்கள கட்டடம் | 307 | நடைபெறுகின்றது |



தொழில்நுட்ப நிறுவகம் - மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்திற்கென (ITUM) தியகம பகுதியில் புதிதாக கையேற்புச் செய்யப்பட்ட காணியில் நிர்மாணிக்கப்படவுள்ள கட்டடத்தொகுதி சம்பந்தமாக 2013 ஆகஸ்ட் மாதத்தில் அடிக்கல் நாட்டப்பட்டதன் பின்பு, நிதியினைப் பெற்றுக்கொள்வதற்கும் கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கும் பாரியளவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான காரணம், அது பல்கலைக்கழகத்தின் சாந்தமான சூழலை பேணுவது மற்றும் மாணவர் உள்வாங்கலை அதிகரிப்பது எனும் முக்கியமான விடயங்களினால் ஆகும். ஆரம்பத்தில் இக் கருத்திட்டமானது சீனாவின் எக்சிம் வங்கியின் (Exim Bank) நிதியளிப்பு மூலம் CATIC எனும் சீன ஒப்பந்தக்காரரைக் கொண்டு நிர்மாணிக்கப்பட இருந்தபோதிலும், அது பின்னர் கைவிடப்பட்டது. இக் கருத்திட்டமானது இன்டர்நெஷனல் கன்ஸ்ட்ரெக்ஸன் கன்ஸ்ஸோடியம் (International Construction Consortium) (ICC) எனும் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மொத்தக் கருத்திட்டத்திற்குமான செலவு ரூ. 10.3 பில்லியன் ஆகும். இதில், 75% உள்நாட்டு வங்கிகள் மூலமாக ICC நிறுவனமும், 25% திறைசேரியும் நிதியளிப்புச் செய்யும் மூலங்களாக உள்ளன. இவ் அபிவிருத்தியினை தொடர்ந்து மொறட்டுவைப் பல்கலைக்கழகத்திற்கு அதன் உள்வாங்கலினை மேலும் அதிகரித்துக்கொள்ள இயலுமாவதுடன், மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்திற்கும் (ITUM) அதன் வருடாந்த உள்வாங்கலை கருத்திட்டம் முடிவடைந்ததன் பின்னர் தற்போதய எண்ணிக்கையான 350 இலிருந்து 1000 வரை அதிகரித்துக்கொள்ளலாம். இதனை மிகவும் குறிப்பிடத்தக்கதொரு சாதனையொன்றாக கருதலாம். 2016 ஆண்டு காலப்பகுதி முழுவதும் நிர்மாணிப்பு வேலைகள் செய்யப்பட்டுவருவதுடன், 2017 ஆண்டின் முற்பகுதியில் ITUM நவீன அமைப்பிலான பிரதான கட்டடத்திற்கு இடமாற்றம் செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

உலக வங்கி மூலம் நிதியளிப்பு செய்யப்பட்ட கருத்திட்டமான இருபத்தோராம் நூற்றாண்டிற்கான உயர் கல்வி திட்டத்தின் (HETC) பல்கலைக்கழக அபிவிருத்தி மானியம் (UDG), வெளிவாரிப் பட்டமாணி நிகழ்ச்சித்திட்டங்கள் (EDP) மற்றும் தரம், புத்தாக்க மானியம் (QIG) எனும் அம்சங்களின் அடிப்படையில் நிதியைப் பெற்றுக்கொள்வதற்கும், மனித வள அபிவிருத்தி விடயத்தின் கீழ் கல்விசார் பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பீஎச்டீ (PhD) மற்றும் ஆய்வினை அடிப்படையாகக் கொண்ட முதுநிலை தராதரங்களைப் பெற்றுக்கொள்ளும் புலமைப் பரிசில்களை பெறுவதில் வெற்றியீட்டியுள்ளது.



IT பீட கட்டடம்




நிருவாக கட்டடம்



பெண்கள் விடுதி

அத்துடன், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) தேர்ச்சிகளை உயர்த்துதல், ஆங்கில மொழித் தேர்ச்சியை மேம்படுத்துதல், மென்பொருள் தேர்ச்சியினை வலுப்படுத்துதல் மற்றும் இன ஒற்றுமையை மேம்படுத்துதல் ஆகிய 4 செயற்பாடுகளின் கீழ் உத்தேச பங்குபற்றலை நிறைவேற்றுவதற்காக பல்கலைக்கழக அபிவிருத்தி மானிய (UDG) திட்ட Iஆவது சுற்றின் கீழ் ரூ. 40 மில்லியனை பல்கலைக்கழகம் பெற்றுக்கொண்டது. இக் கருத்திட்டம் 2011 யூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன், புத்தகங்கள், கற்பிப்பதற்கான மென்பொருள் மற்றும் இலத்திரணியல் மூலவளங்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்வதற்காக HETC கருத்திட்டத்தின் கீழ் ரூ. 9.0 மில்லியன் மானியமும் பல்கலைக்கழகத்திற்கு கிடைத்ததுடன், அந் நிதி முழுமையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. QIG மானியத்தின் கீழ் நான்கு திணைக்களங்கள் மானியங்களைப் பெற்றுக்கொள்வதில் திறமையாகச் செயற்பட்டன - முதலாவது சுற்றில் புடைவை, ஆடைத் தொழில்நுட்பத் திணைக்களம் மற்றும் பட்டணமும் நாடும் திட்டமிடல் திணைக்களம் என்பனவும், இரண்டாவது சுற்றில் மின்னணு, தொலைத்தொடர்பு பொறியியல் திணைக்களம் மற்றும் மின் பொறியியல் திணைக்களம் என்பனவும் ஒவ்வொன்றும் ரூ. 25 மில்லியன் பெறுமதி கொண்ட மானியத்தைப் பெற்றன. முன்மொழிவுக் கட்டப் போட்டியில் பல்கலைக்கழக அமைப்பு முழுவதிலும் அதிகபட்ச புள்ளிகளைப் பெற்று இத் திணைக்களங்கள் இப் பரிசில்களை வென்றதுடன், இரண்டாவது சுற்றில் இரு விசேட பரிசில்களையும் பெற்றுக்கொண்டன என்பதை குறிப்பிடுதல் வேண்டும்.

மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது ஆண்டுக்கான அதன் ஒதுக்கீடுகளை முழுமையாக பயன்படுத்தியுள்ளது என்பது 2016 ஆண்டுக்கான மூலதன கருத்திட்டங்களின் செயற்பாடுகள் தொடர்பான மீளாய்வு கலந்துரையாடலின் போது தெரியவந்தது. கட்டடங்களினதும் நிர்மாணிப்புக்களினதும் புனரமைப்புக்கள் மற்றும் மேம்படுத்தல்கள் என்பவற்றுக்காக பாதீடுபடுத்தப்பட்ட ரூ. 75 மில்லியனில், 109% ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது. நிலையான சொத்துக்களை கைகொள்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 809 மில்லியனில் 97% இற்கும் அதிகமாக செலவிடப்பட்டுள்ளது. ஒதுக்கப்பட்ட மூலதன நிதி ரூ. 1,364 மில்லியனில் ஒதுக்கீடு செய்யப்பட்ட சகல நிதியும் 2016 ஆண்டின் போது செலவிடப்பட்டன.

### 1.5 புதுமையாக்க, தொழிலுரிமைத்துவ பட்டதாரிகளை உருவாக்குதல்

மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது, மூன்று வருடங்களுக்காக தேசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் பல்கலைக்கழக முறைமையில் முதன்முதலாக ஏற்படுத்திய கைத்தொழில் ஆதரவு தலைமைத்துவத்துடன் கூடிய “தொழிலுருமைத்துவம் பற்றிய NDB

வங்கியின் அறக்கொடையுடனான பேராசிரியர்/உறுப்பினர்” எனும் கௌரவ பதவியை உருவாக்கியுள்ளது. இதன் கீழ் முதலாவது அறக்கொடையுடனான பேராசிரியர் 2010 ஆண்டு அக்டோபரில் நியமிக்கப்பட்டதுடன், இதன் கீழ் எடுக்கப்பட்ட தொழில்முனைவோர் சார் முன்னெடுப்புக்களால் பிரதானமாக இளம் தொழில்முனைவோர் ஸ்ரீலங்கா (YESL) நிகழ்ச்சித்திட்டத்துடன், பல்கலைக்கழக தொழிலுரிமைத்துவ கலாச்சாரம் குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தப்பட்டதுடன், பொறியியல் பட்ட பாடவிதானத்துக்கு தொழிலுரிமைத்துவம் தொடர்பாக சிறு விசேடத்துவமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

பல்கலைக்கழகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட மற்றுமொரு முக்கியமான செயற்றிட்டம், மூன்றாண்டு காலப்பகுதியினுள் ரூ. 16 மில்லியனுக்கும் கூடுதலான தொகையுடன் கைத்தொழிற்துறை நிதிசார் சேவைகள் (IFS) மூலமான முதலீட்டுடன் “புத்துருவாக்கம் மற்றும் தொழிலுரிமைத்துவம்” பற்றிய அறக்கொடையுடனான பதவியொன்று உருவாக்கப்பட்டது. இந் நோக்கத்திற்காக 2014 நவம்பரில் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டதுடன், புத்துருவாக்கம் மற்றும் தொழிலுரிமைத்துவம் தொடர்பான சிரேஷ்ட தோழமை உறுப்பினரொருவரின் நியமனத்துடன், 2015 செப்ரெம்பரில் புதிய தொழிலுரிமைத்துவம் பூர்வாங்க செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளன.

புதிய கண்டுபிடிப்புக்கள், புத்தாக்கம் மற்றும் தொழிலுரிமைத்துவம் ஆகியவற்றுக்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கான பொறிமுறையை உருவாக்குதல் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், பணியாளர்கள் ஆகியோர்கள் இடையே தொழிலுரிமைத்துவம் பற்றி அறிவுசார் பண்பாடொன்றை ஊக்குவித்தல் தொடர்பான பல்கலைக்கழகத்தின் மூலோபாயத்தின் அடிப்படையில் 2016 ஆண்டின் போது முக்கியமான நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் மற்றும் பணியாளர்களின் முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் பணிப்பாளர்/ தொழிலுரிமைத்துவம் கீழ் 2015 காலப்பகுதியில் “தொழில்முயற்சியாண்மை” – புத்தாக்கம், கருவாக்கம் மற்றும் தொழில்முணைவு பற்றிய நிலையம் (“The Enterprise” – Centre for Innovation, Incubation and Entrepreneurship) உருவாக்கப்பட்டது, கைத்தொழிற்துறை நிதிசார் சேவைகள் (IFS) சிரேஷ்ட தோழமையினது வழிகாட்டுதலின் கீழ் அதன் செயற்பாடுகளை தொடரும் அதேவேளை கைத்தொழில்துறையின் உதவியுடன் அபிவிருத்தி செய்யப்படும் 180 சதுர மீற்றர் விஸ்தீரணத்துடன் உகந்த பௌதிக இடத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கருத்துக்களுக்கு வடிவமைத்தல், வியாபார முன்மொழிவுசார் அபிவிருத்தி போன்ற பல்வேறு தொழிலுரிமைத்துவம் சார் விடயங்கள் தொடர்பான அதிதி சொற்பொழிவுத் தொடர்கள், பல்கலைக்கழகம் முழுவதும் பல்வேறுபட்ட பதாகைகள் மற்றும் சுவரொட்டிகள் மூலம் கண்காட்சிப்படுத்தி விழிப்புணர்வூட்டல் செயற்பாடுகள், மூலோபாய பங்குதாரர்களுடன் ஒத்துழைப்புக்களை ஏற்படுத்துதல் தொடர்ந்து செயற்படுத்தப்படுகின்றன.









Lion's Den Start Ups Pitch நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ந்து செயற்படுத்தியதுடன், 30 முயற்சிகளை உருவாக்கும் நோக்கத்தோடு "Mora Ventures" புதிய முயற்சியானது 2016 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 2015 ஆண்டில் உருவாக்கப்பட்ட தொழிலுரிமைத்துவ சங்கம் சார் இம் முயற்சிகளுக்கு பெருமளவு உதவி வழங்கப்பட்டது. 2018 ஆண்டளவில் அமெ. டொ. 1 மில்லியன் வரையிலான பெறுமதிக்கு குறைந்தபட்சம் இம் முயற்சிகள் 10 ஐ கொண்டு செல்ல முடியுமென சங்கம் நம்புகின்றது. 2016 ஆண்டினுள் பல்கலைக்கழகம் புதிய ஆக்கவுரிமை சான்றிதழ்கள் 4 தொடர்பாக தேசிய புலமைச்சொத்து அலுவலகத்திற்கு (NIPO) விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளதுடன், அதில் 2 ஆக்கவு ரிமை சான்றிதழ்கள் 2016 ஆண்டில் வழங்கப்பட்டன. இவற்றுடன் சேர்த்து NIPO அலுவலகத்தினால் 13 விண்ணப்பங்களுக்கு ஆக்கவுரிமை சான்றிதழ் வழங்கலை மேற்கொண்டுள்ளது.

தொழிலுரிமைத்துவம் சார் சூழலொன்றை உருவாக்குவதற்கான பல்கலைக்கழகத்தின் முயற்சி தொடர்பான செயற்பாடுகள் ஊடாக ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள புலமைச் சொத்து பற்றிய ஆலோசனை குழு (IPAC), பல்கலைக்கழக கைத்தொழில்துறை இணைப்புக் குழு (UIIC), கருவாக்கல் சார் திணைக்களங்கள் மற்றும் பீடங்களில் உள்ள கருவாக்கல்சார் நிறுவனங்களை வலுவூட்டிப் பாதுகாக்கும். இவ் அனைத்து அடிப்படை அம்சங்களும் குறிப்பாக எமது பட்டதாரிகள் "வேலை தேடுபவராக அல்லாது வேலை உருவாக்குபவர்" எனும் நிலையை உருவாக்கவும் மற்றும் எமது பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்கு வணிகமயப்படுத்தக்கூடிய அவர்களின் புத்தாக்கங்களுக்கு ஆக்கவுரிமை சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கும் இம் முயற்சிகள் பங்களிப்புச் செய்யும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

### 1.6 பல்கலைக்கழக - கைத்தொழில் இணைப்பு

பயனுறுதிமிக்க பல்கலைக்கழக – கைத்தொழில் பிணைப்பு மொறட்டுவை பல்கலைக்கத்தின் பலம்வாய்ந்த காரணிகள் ஒன்றாகும். பொதுமுயற்சிகள் கைத்தொழில்துறையில் உள்ளோர்களுக்கான பகுதிநேர பட்டப்பின்படிப்பு பாடநெறிகள், குறுங்கால குறுங்கால பாடநெறிகள், பயிற்சியும் தொடர் தொழில்சார் அபிவிருத்தி (CPD) பாடநெறிகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள், ஆலோசனை மற்றும் பரிசோதனை ஒப்படைகள், கைத்தொழில் நிதியிடப்பட்ட ஆய்வு மற்றும்

அபிவிருத்தி (R & D) ஆய்வுகூடங்கள், அறக்கொடையுடனான தலைமைகள், திணைக்கள கைத்தொழில்துறை ஆலோசனை சபைகள், பீட கைத்தொழில் ஆலோசனை சபைகள் மற்றும் கூட்டிணைந்த சமூக பொறுப்பு நடவடிக்கைகள் மூலமாக மொறட்டுவைப் பல்கலைக்கழகம் கைத்தொழில் துறைகளுடனும், சமூகத்துடனும் குறிப்பிடத்தக்க வகையில் பரஸ்பர செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. கைத்தொழிலுடனும் சமூகத்துடனும் காணப்படும் பரஸ்பர இணைப்புக்கள் மூலம் கைத்தொழிற்சாலைகளின் முன்னேற்றம் மற்றும் அதற்கேற்ப நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ளல் என்பதுடன், அதற்கு மேலாக அதனூடாக பல்கலைக்கழக பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்கும், மாணவர்களுக்கும் மற்றும் அதற்கு இணையாக நிறுவகத்திற்கும் பாரிய நன்மைகள் பெருமளவில் கிடைப்பதனால் இந்த பரஸ்பர செயற்பாடுகள் பல்கலைக்கழகத்திற்கு தீவிரமாக ஊக்கமளிக்கின்றது.

கைத்தொழில்துறை மூலம் நிதியளிக்கும் ஆராய்ச்சி மையங்கள் வெற்றிகரமான பல்கலைக்கழக கைத்தொழிற்துறை ஒத்துழைப்பு சார் மற்றுமொரு முக்கியமான பொறிமுறையாகும். சுமார் ஒரு தசாப்தத்துக்கு முன் அமைக்கப்பட்ட தொடர்பாடலுக்கான டயலொக் - UoM ஆய்வுகூடம், தொலைத்தொடர்பாடல் துறையினுள் கைத்தொழில் அடிப்படையிலான ஆய்வு மற்றும் உற்பத்தி அபிவிருத்தி தொடர்பான மிகவும் வெற்றி பெற்ற மாதிரியாக அமைந்துள்ளது. இந்த ஆய்வுகூட வெற்றியானது, இலத்திரணியல் சார்ந்த புதிய தொழில்நுட்பங்களுக்கான “Zone 24X7 UoM ஆய்வுகூடம்”, இறப்பர் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி மற்றும் செயன்முறை அபிவிருத்திக்கான “SIL-UOM ஆய்வுகூடம்”, உயிரியில் மருத்துவ தொழில்நுட்பத்துக்கான “Premium International - UoM”, எழுதுபொருள் தொழில்நுட்பத்துக்கான சிலோன் பென்சில் கோப்பரேஷன் ATLAS - UoM மற்றும் பொருட்கள் ஆய்வுக்கான INSEE – UOM, மாணவர்களை கைத்தொழிற்துறையில் அமர்த்துதல் மற்றும் வெளிநாட்டு பயிற்சி உட்பட பயிற்சியளிப்பு, ஆய்வு, வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பத் திறன்கள் என்பவற்றை வலுவூட்டுதல், உற்பத்தி அபிவிருத்தி மற்றும் வருடாந்த நவநாகரீக வடிவமைப்புக் கண்காட்சிக்கு ஆதரவளித்தல் என்பவற்றுக்காக Textured Jersey ஐ அமைப்பதற்கு இயலுமாகியுள்ளது. “Epic-UOM புதுமையாக்க ஆய்வுகூடம்” அமைப்பதற்கான அத்தகைய மற்றுமொரு முயற்சியொன்று 2016 ஆண்டில் எடுக்கப்பட்டது.

கல்விசார் பணியாளர் உறுப்பினர்கள் அரச, நன்கொடை முகவர்கள் மற்றும் கைத்தொழில் ஆகியவற்றின் சார்பாக புத்தாக்க ஆய்வு, ஆலோசனைத் திட்டங்கள் தொடர்ந்தும் பொறுப்பேற்று, தேசிய அபிவிருத்திக்கு பாரியளவில் பங்களிப்புச் செய்வதுடன்,



EPIC ஒக்குமைப்ப

பல்கலைக்கழகத்திற்கும் வருமானத்தை ஈட்டித்தந்துள்ளார்கள். அவ்வாறான விசேட சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஆர்வமுள்ள பிரிவினரின் அதி உச்ச கவனத்தை மொறட்டுவைப் பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

சகல பணியாட்டொகுதி உறுப்பினர்களும் பல்கலைக்கழக துறை, கைத்தொழில் பரஸ்பர இணைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அதேநேரம், அரசாங்க திரட்டு நிதியிலிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக வழங்கப்படும் நிதி ஏற்பாடுகளுக்காக அவர்கள் கல்வித்துறை சார்பாக பொறுப்புக் கூறுவதை உறுதிப்படுத்துவதற்காக அவர்களால் பட்டதாரி கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக தம்மீது ஒப்படைக்கப்பட்ட கல்வி வேலை பணிகள் மற்றும் கல்விசார் அலுவல்களையும் நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துதல் பல்கலைக்கழக நிருவாக சபையின் கொள்கையாகும். பட்டதாரி மாணவர்களுக்கான உயர் பயிற்சி மற்றும் தராதரங்களை மேம்படுத்துவதற்காக வழங்கப்படும் பாடநெறிகள், அறிவு மற்றும் தொழில்நுட்ப விருத்திசெய்யவும் மாற்றம் செய்யவும் நடாத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், CPD பாடநெறிகள், ஆய்வு மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் ஏனைய கல்விசார் ஒப்படைகள், கைத்தொழிலுக்கான ஆலோசனை மற்றும் ஆய்வு ஒப்படைகள் மற்றும் கூட்டிணைந்த சமூக பொறுப்பு நடவடிக்கைகள் ஆகியன பொது நிதிச் சுற்றுநிருபம் இல. 380 இற்கு இணங்க **செலவு மீட்பு** (சுய நிதியிடல்) அடிப்டையில் செயற்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களாகும். அதற்கேற்ப, மொறட்டுவைப் பல்கலைக்கழக சமூகம், கைத்தொழில் சார்ந்து காணப்படும் அதன் கடற்பாடுகளை அரசாங்கத்திற்கு எவ்வித **செலவுமின்றி** நிறைவேற்றி வருகின்றது.

இச் செயற்பாடுகள் மூலம் 2016 ஆண்டில் மொறட்டுவைப் பல்கலைக்கழகம் தனது **செலவு மீட்பு** (சுய நிதியிடல்) செயற்பாடு மற்றும் தொழிலுரிமைத்துவ நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கான தனது **கைத்தொழி**ல் முன்னெடுப்பின் ஊடாக 2016 ஆண்டினுள் ரூ. 638.17 மில்லியன் தொகையை உருவாக்கியுள்ளதுடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 67% **அதிக**ரிப்பாகும். பொது நிதி சுற்றுநிருபம் இல. 380 இன் பிரகாரம் உருவாக்கப்பட்ட வருமானம் இலாபமற்ற அடிப்படையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 1.7 தர உத்தரவாதம்

மொறட்டுவைப் பல்கலைக்கழத்தின் தர உத்தரவாதம் அதன் சேவைகள் மற்றும் உற்பத்திகள் ஆகியவற்றின் தரம் தொடர்பாக மாணவர்கள், பணியாட்டொகுதி உத்தியோகத்தர், ஊழியர்கள் மற்றும் மொத்தச் சமூகம் போன்றவற்றுக்கும் உத்தரவாதப்படுத்துவதற்காக அதன் கற்றலுக்கான உள்ளீடுகள், கல்விப் பெறுபேறுகள், ஆராய்ச்சிக்கான தளம், செயற்றிறன் மதிப்பிடல், நிருவாக கட்டமைப்பை கொண்ட மாணவர் சேவைகள் மற்றும் பாடவிதானங்களுக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளை உள்ளடங்கிய பிரதான நடவடிக்கைகளின் தரம், வெளிப்படைத்தன்மை, திறனாற்றல், நம்பிக்கைமிகு அடைவுகள் எனும் வகையில் செயலுறுதிப்படுத்தியதாக பல்கலைக்கழக முகாமைத்துவத்தின் செயற்பாடு அமையப் பெற்றுள்ளது. பல்கலைக்கழகத்தின் QA கொள்கை மூலம் நிறுவகத்தின் கீழ்வரும் கல்விசார், கல்விசாரா மற்றும் நிருவாகம் சார் சகல பணியாட்தொகுதி உறுப்பினர்கள் அதேபோல் மாணவர்கள் ஆகியோர்களால் ஏற்றுக்கொள்ளத்தக்க QA அடிப்படையிலான கலாச்சாரமொன்றை அபிவிருத்திசெய்து கடைப்பிடிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தர உத்தரவாத உபாயம் (QAS) மூலம் பல்கலைக்கழகத்தின் செயல்நுணுக்க முகாமைத்துவ திட்டத்தில் (SMP) குறிப்பிடப்பட்ட தொலைநோக்கு மற்றும் செயற்பணி ஆகியவற்றுடன் இணைந்ததாக செல்கின்றது. SMPஐ செயற்படுத்தும் போது,

பல்கலைக்கழக முகாமைத்துவம் அதன் சேவைகளும் உற்பத்திகளும் அவற்றுக்கு ஏற்படுத்தப்பட்ட வரையறைகள் மற்றும் இலக்குகள் சார் அதிசிறந்த தரத்தை உத்தரவாதம் செய்யத் தேவையான முறைமைகள், செயற்பாடுகள் மற்றும் கண்காணிப்பு பொறிமுறைகள் ஆகியவற்றை ஸ்தாபிக்கின்றது. அதற்கிணங்க, SMP இல் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்கள் தரம் சார் கொள்கைளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன், அவை பல்கலைக்கழக உள்ளக தரம் சார் அலகின் (IQAU) தலைமையின் கீழ் நோக்கங்களாக வடிகட்டப்பட்டு, மேலும் அவைகள் ஒவ்வொன்றும் முதன்மைச் செயற்பாடுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இவ் ஒவ்வொரு செயற்பாடுகளை முன்னேற்றச் செய்வதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்/ பங்காளர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், தர உறுதிப்படுத்தல் மற்றும் ஒப்படைத்தல் சபையின் (QAAC) வழிகாட்டுதல் அம்சங்களுக்கு இணங்க நியமிக்கப்பட்ட காலப்பகுதிகளில் வெளிவாரி மற்றும் உள்ளக மீளாய்வு முறைகள் மூலம் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுகின்றது. பல்கலைக்கழக செனட் சபை மற்றும் நிருவாக கவுன்சில் மூலம் அவர்களது மாதந்த கூட்டங்களில் IQAU செயற்பாடுகள் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன.

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் அதன் முதன்மை ஆர்வமிக்க பங்காளர்கள், ஆளணியினர் மற்றும் மாணவர்கள் ஆகியோர்களுக்கு மிகப் பயனளிக்கத்தக்க அனுபவத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு பல்கலைக்கழகம் செயலாற்றுவதுடன், தர உத்தரவாத உபாயம் (QAS) மூலம் அதன் கருத்துப் பற்றிய வரைவிலக்கணத்தையும் வழங்குகின்றது. அது, சர்வதேச மட்டத்திலான மதிப்புமிக்கதொரு பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொள்ள இயலுமான சிறப்பான கற்பித்தல், கற்றல் என்பன யாதென்பது பற்றி தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது. தர உத்தரவாத உபாயம் (QAS) மூலம் பட்டமேற்படிப்பு மற்றும் ஆய்வு உட்பட கற்பித்தலின் உள்ளீடுகள் மற்றும் கற்றலின் வெளியீடுகள் ஆகியவற்றின் வெளிவாரி மற்றும் உள்வாரி அம்சங்களை நோக்குவதுடன், அதன் மூலம் தர நியமங்களை மேம்படுத்தவும் பேணிச்செல்லவும் பீட மட்டத்தில் புதிய பொறிமுறையையும் அதனூடாக விபரிக்கின்றது. தனியான கல்விசார் திணைக்களங்கள் மற்றும் பிரிவுகள் வரை விரிவடையும் அதன் வலையமைப்புடன் இது தொடர்பாக பீட மட்டத்தில் தர உத்தரவாத குழுவுடன் (QA Cells) இணைந்து செயலாற்றுகின்றது.

அதேபோல், பல்வேறு பின்புலத்தில் வரும் ஆளணியினர்களுக்கும், மாணவர்களுக்கும் கிடைக்கக்கூடிய வாய்ப்புக்களின் சாதகங்களைப் பெறவும், கல்விசார்ந்த வகையிலும் ஆளுமையிலும் சிறப்படையவும் அதேபோல், உலகலாவிய சவால்களுக்கு ஏற்றவகையில் அவசியமான அறிவுசார் மற்றும் திறன்கள் சார் அபிவிருத்தியின் ஊடாக தொழிலுக்கும் பரந்த உலகின் பணிசார் வெற்றிக்குப் பங்களிக்கவும் மற்றும் பட்டமேற்படிப்பு தகைமை மற்றும் ஆய்வு ஊடாக தொழிலொன்றை தேடிச்செல்ல முடியுமாக இருந்தால், அவர்களுக்கு தேவைப்படுவது

யாதென்பது பற்றி தர உத்தரவாத உபாயம் (QAS) தன் கவனத்தைச் செலுத்துகின்றது. கற்றலின் தரம், ஆய்வு, வழிகாட்டல் மற்றும் அதன் மீது நிறுவகம் வைக்கின்ற பெறுமதியும் இதன் பகுதியாவதுடன், மொறட்டுவைப் பல்கலைக்கழகச் செயற்பாடுகள் இது தொடர்பாகவுள்ள துறைசார்ந்த சிறப்படைதலுக்கு இணைந்ததாக உள்ளதென்பதை உறுதிப்படுத்த, திட்டமிடுவதற்கான செயற்பாடு தர உத்தரவாத உபாயத்தில் (QAS) உள்ளடங்குகின்றது.

மேலும், கற்பித்தலின் உள்ளீடுகள், கற்றலின் வெளியீடுகள், செயற்றிறன் மதிப்பீடு, ஆய்வு, புலமைப்பரிசில் மற்றும் தொழில்முயற்சி என்பன ஒன்றுக்கொன்று இணைந்த அம்சங்கள் எனவும் அவைகளின் உள்வாரி தொடர்பினைப் பற்றித் தெளிவான நோக்கினை நிறுவதற்கும் உதவுகின்றது எனவும் தர உத்தரவாத உபாயம் (QAS) கருதுகின்றது. உலகலாவிய சவால்களை எதிர்கொள்ளும் வகையில் அதிகரித்துவரும் போட்டி மிகுந்த சூழலில், தனி நபர்களினதும், சமூகங்களினதும் தேவை யாதென அறிந்து, அவைகளை வழங்குவதற்காக வளர்ச்சியடையும் அழுத்தங்களுடன், போட்டியாளர்களிடமிருந்து நிறுவகத்தை வேறுபடுத்தி இனங் காணுவதற்காக பிரிவுகளை வகைப்படுத்திக் காட்டும் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் செயற்பணியின் வெவ்வேறு தரங்களை மீண்டும் உறுதிப்படுத்தவும் தர உத்தரவாத உபாயம் (QAS) உதவுகின்றது. குறிப்பாக மதிப்பீட்டுத் தரம் மற்றும் சகல கல்விசார் ஆவணங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஆவணக் கருத்து திருட்டுடன் தொடர்புபட்டதாக மொறட்டுவை பல்கலைக்கழகம் இச் சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட பல கொள்கைகளை அபிவிருத்திசெய்தது. அது, எப்போதும் நீடித்து நிலைத்திருக்க கூடிய மதிப்புடனும் பல்கலைக்கழக மாற்றங்களுடனும் மிகச் சிறப்பாக செயலாற்றுவதற்கு சந்தேகத்திற்கு இடமின்றி வழியமைக்கும்.

உலகலாவிய அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகமாகும் எமது தொலைநோக்கின் பொருட்டு, மொறட்டுவைப் பல்கலைக்கழகம் உலக தரப்படுத்தலில் மேலே செல்வதற்கு முயற்சி எடுத்து வருவதுடன், 2016 இல் மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது, இலங்கையில் மிகச் சிறந்த மூன்றாவது நிலையை தக்கவைத்துக்கொண்டு, தெற்காசியாவில் 56 வது ஆகவும், 2016 திசம்பரில் உலக பல்கலைக்கழகங்கள் சார் வெபோமெற்றிக்ஸ் (Webometrics) தரப்படுத்தலில் உலக ரீதியாக 2401 ஆவது (உயர் 20%) நிலையையும் பெற்றுக்கொண்டது. வெபோமெற்றிக்ஸ் மதிப்பீட்டு அளவுகோள்களின் தன்மை காரணமாக மொறட்டுவை பல்கலைக்கழகத்தைப் போன்ற நடுத்தர அளவிலான பல்கலைக்கழகமொன்றுக்கு தனது நிலையை மேம்படுத்துவது கடினமானதாகும்.

இது, CILT, IMechE, CText, IChemE, RIBA, RICS, CICES, PAQS போன்ற பல பட்டதாரி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு சர்வதேச அங்கீகாரத்தை பேணிச்செல்வதற்கு மேலதிகமானதாகும். பொறியியல் கல்விசார் தகைமைகளுக்கான அங்கீகாரத்தை வழங்கும் நிறுவனமான இலங்கை பொறியியலாளர்களின் நிறுவனத்துடன் (IESL) 2014 யூனில் வொசிங்டன் உடன்பாட்டின் (Washington Accord) முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டு, தற்போது

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற பொறியியல் பட்ட பாடநெறிகள் யாவும் தர ரீதியில் உலகின் சிறந்த பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படுகின்ற அத்தகைய பட்ட பாடநெறிகளுக்கு இணையானதாக கருதப்படுகின்றது.

முக்கியமாக தற்போது பெற்றுக்கொண்டுள்ள அங்கீகாரங்களை புதுப்பித்துக் கொள்வதற்காக 2016 ஆண்டு காலப்பகுதியில் பல அங்கீகாரங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், புதிய அங்கீகாரங்கள் சில பெற்றுக்கொள்ளப்பட்டன. இலங்கை பொறியியலாளர்களின் நிறுவகம் (IESL) பொறியியல் திணைக்களம், கணினி விஞ்ஞான மற்றும் பொறியியல் திணைக்களம், மின் பொறியியல் திணைக்களம், இலத்திரணியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் திணைக்களம் மற்றும் எந்திரப் பொறியியல் திணைக்களம் ஆகியவற்றின் மூலம் வழங்கப்படுகின்ற பொறியியல் சார் பி.எஸ்சி. பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் சார்பாக மீள் அங்கீகாரத்திற்கு/ அங்கீகாரத்திற்கு உட்படுத்தியது.

உப வேந்தரின் தலைமையில், பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் சகல தொழிற்சங்க பிரதிநிதிகள் ஆகியோர்களிடையே மாதாந்தம் நடாத்தப்படும் "பசுவிபரம" கலந்துரையாடல் 2006 மார்ச் மாதத்திலிருந்து நடாத்தப்பட்டு வருவதுடன், பல்கலைக்கழகத்தின் நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு பல்கலைக்கழகத்தினதும் பணியாட்டொகுதியினரதும் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் வழிவகைகள் மற்றும் முறைகள் அதில் கலந்துரையாடப்படும். மேலும், சம்பந்தப்பட்ட மாதத்தினுள் தீர்க்கப்படவேண்டிய மாணவர் சமூகம் தொடர்பான முக்கிய பிரச்சினைளை கலந்துரையாடுவதற்காக உபவேந்தரின் தலைமை வகிக்கும் பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் எல்லா மாணவர் சங்கங்களின் குழு உறுப்பினர்கள் ஆகியோர் இடையே நடாத்தப்படும் இணைப்புக் கூட்டமொன்றும் ஒவ்வொரு மாதமும் நடாத்தப்படுகிறது. அத்துடன், பீட மட்டத்தில் நிலவும் மாணவர்களின் பிரச்சினைகளை கலந்தாலோசித்து தீர்ப்பதற்காக பீடாதிபதியின் தலைமையில் ஆளணியினர், மாணவர் தொடர்புக் கூட்டம் மாதாந்தம் பீட மட்டத்தில் சகல பீடங்களிலும் நடாத்தப்படுகின்றது. இக் கூட்டங்கள் யாவும் பல்கலைக்கழகத்தின் வருடாந்த நாட்காட்டி திட்டத்திலுள்ள விடயங்களாகும்.

2016 ஆண்டின் போது, முறைமைசார் மேம்படுத்தல்களுக்காக இன்னும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மாணவர் பதிவு, பெறுபேறுகளை தயாரித்தல், பிரதிகளை வழங்கல், மாணவர் நலன்புரி, வழங்கல் செயற்பாடுகள், வாகன முன்பதிவுகள், சொத்து முகாமை, ஆவணக் கட்டுப்பாடு, தாபன விடயங்கள், பணியாளர் அபிவிருத்தி விடயங்கள் போன்ற நிருவாகம் சார்ந்த பணிகளுக்கான முகாமைத்துவ தகவல் முறைமையை அபிவிருத்தி செய்வதன் முக்கியத்துவம் இதில் உள்ளடங்குகின்றது. 2016 ஆம் ஆண்டின் இறுதியில் சில மொடியூல்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதுடன், ஏனையவை அபிவிருத்திசெய்தல், அமுல்படுத்துதல் மற்றும் சோதனைசெய்தல் செயல்முறைகளில் இருந்தன. ஏனைய முயற்சிகளில் முதன்முறையாக 653 கல்விசாரா பதவியணி பணியாளர் அங்கத்தவர்களது முழுமையான தொழில் விவரம், பல்வேறு நிருவாக பணிகள் சார் நடைமுறைகள் பற்றிய கையேடு, சகல புதிய நிருவாக மற்றும் கல்விசாரா பணியாளர்களுக்கான திசைமுகப்படுத்தல் பயிற்சி மற்றும் ஏனைய அதுபோன்ற நடவடிக்கைகள் உள்ளடங்கியுள்ளன.

## 1.8 ஆய்வு செயற்பாடுகள்

மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது சகல கல்விசார் பணியாளர்களுக்கும் ஆய்வு அத்தியாவசியமான செயற்பாடொன்றாக கருதுகின்றது. 2015 ஆண்டினுள் பணிப்பாளர்/ஆய்வு அலுவலகம் மூலம் ஆதரவு தெரிவிக்கப்பட்ட குறிப்பாக ஆய்வு செயற்பாடுகளுக்காக கவனம் செலுத்தி பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடமொன்று உருவாக்க முடிந்தமை பல்கலைக்கழக ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் ஆய்வு கலாச்சாரம் குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகமானது மூன்று ஆய்வு பட்ட கற்கைகளை வழங்குகின்றது. விஞ்ஞான முதுமாணி (ஆராய்ச்சியை பிரதான கூறாகக் கொண்டு), தத்துவவியல் முதுமாணி (MPhil) மற்றும் தத்துவக் கலாநிதி (PhD) ஆகியவற்றை கட்டடக்கலை, பொறியியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப (IT) பீடங்களின் மூலம் வழங்குகின்றது.

FGS இந் நிகழ்ச்சித்திட்டத்தின் நிருவாக நடைமுறைகளை ஒருமுகப்படுத்துதல், உயர் தரத்திலான மாணவர்களை ஈர்த்தெடுத்தல், புதிய ஆராய்ச்சி பங்காளர்கள் மற்றும் நிதியிடல் வாய்ப்புக்களை கண்டறிதல் மற்றும் பல்கலைக்கழகத்தினுள் ஆராய்ச்சி திறனை உயர்த்துதல் சார்பாக மூலோபாயங்கள் மூலம் இந் நிகழ்ச்சித்திட்டங்களை அதிகரிக்க முற்படுகின்றது. FGS இம் முயற்சிகளில் ஆராய்ச்சி அலுவலகம் மற்றும் சர்வதேச உறவுகள் அலுவலகம் ஆகியவற்றுடன் நெருக்கமாகச் செயற்படுகின்றது. 2016 ஆண்டில் 13 கலாநிதி (PhD) பட்ட மாணவர்கள் உட்பட 87 புதிய ஆய்வு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் கூட்டு கலாநிதி (PhD) பட்டங்களை வழங்குவதற்கு PhD சட்டதிட்டத்தின் கீழ் புதிய ஒழுங்குவிதியை உருவாக்கும்போது FGS கருவியாக இருந்தது. இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முதலாவது கலாநிதி பட்டத்திற்கான அபேட்சகர் மொறட்டுவை பல்கலைக்கழகம் மற்றும் அவுஸ்திரேலியாவின் வொல்லொங்கொங் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் மூலம் வழங்கப்படும் கூட்டு கலாநிதி பட்டத்திற்கு 2016 ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

2016 ஆண்டில் மேலும் ஆய்வை அதிகரிப்பது மற்றும் ஆய்வு விளைவுகளை பரப்புதல் சார்பாக ஏனைய பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இவற்றில் உள்ளடங்குவன: சர்வதேச மாநாடுகளை ஒழுங்குசெய்வதற்கான மானியங்கள் (பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடத்தின் ஊடாக வழங்கப்பட்ட ரூ. 5 மில்லியன்); கீர்த்திமிக்க வெளிநாட்டு கல்வியாளர்களை வரவழைத்து உபசரிப்பதற்கான மானியம் (பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடத்தின் ஊடாக வழங்கப்பட்ட ரூ. 3.5 மில்லியன்); மாநாடுகளுக்கு பங்குபற்றுவதற்காக உப வேந்தரவர்களின் திட்டம் மற்றும் உருவாக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி திறந்த அணுகுதல் வெளியீடு (செனட் ஆய்வு குழுவின் ஊடாக); மற்றும் மேம்படுத்தப்பட்ட தரப்புள்ளிகளுடன் மற்றும் தனி வருட செயல்திறன் அடிப்படையில் திருத்தப்பட்ட விருதுகள் திட்டம். இது தவிர, 2016 ஆண்டின் போது ஆய்வு நிருவாகம் மற்றும் முகாமைத்துவ முறைமை மேம்படுத்துதல், கல்வியாளர்களது ஆய்வு மற்றும் பரப்புதல் திறன் ஆகியவற்றை அதிகரிப்பதற்காக செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் பல நடாத்துதல் உட்பட பல்கலைக்கழக ஆய்வு கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்காக FGS மூலம் பல முயற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

சர்வதேசரீதியாக மற்றும் உள்நாட்டுரீதியாக எனும் இரண்டிலும் வெளிவாரி நிதியிடல் முகவராண்மைகள் மூலம் ஆய்வுக்கான நிதியளிப்பை பாதுகாப்பதற்கு கல்வியாளர்கள்

ஊக்குவிக்கப்படுகின்றர். 2016 ஆண்டில் பல்கலைக்கழகமானது வெளிவாரி நிதியளிப்பு முகவராண்மைகள் மூலம் ரூ. 23.3 மில்லியனை பெற்றுக்கொண்டதுடன், இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் மிகவும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும். இது தவிர, செனட் சபை ஆய்வு குழு (SRC) மூலம் கல்விசார் பணியாளர்களது பல்கலைக்கழக ஆய்வு கருத்திட்டங்களுக்கு நிதியளிப்பு செய்யப்பட்டது. 2016 ஆண்டின் போது SRC மூலம் 32 குறுங்கால மானியங்களும், 23 நீண்டகால மானியங்களும், 8 தேசிய அபிவிருத்தி மானியங்களும் மற்றும் 1 ஊக்கப்படுத்தல் மானியமும் உட்பட மொத்தம் ரூ. 64 மில்லியன் வழங்கப்பட்டது.

59 விருதுகளில் 21 அதிவிசேட விருதுகளுடன் ஆய்வு சிறப்பு விருதுகளின் அதிகரிப்பு மூலம் மேலுள்ள முயற்சிகள் மற்றும் செயற்பாடுகள் ஆய்வு செயலாற்றலை குறிப்பிடத்தக்கவகையில் மேம்படுத்தியுள்ளது. அத்துடன், 2013 ஆண்டில் 12 இல் இருந்து 2014 ஆண்டில் 21, 2015 ஆண்டில் 40, 2016 ஆண்டில் 61 வரை (கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 65% அதிகரிப்பு) சூசிகைபடுத்தப்பட்ட சஞ்சிகைகளில் உயர் தர வெளியீடுகள் மேம்படுத்தப்பட்டுள்ளது. வெளியீடுகளின் மொத்த எண்ணிக்கையும் 2015 ஆண்டில் 140 இல் இருந்து 2016 ஆண்டில் 240 வரை அதிகரித்தது (71% அதிகரிப்பு).

இம் முயற்சிகள் மற்றும் செயற்பாடுகள் ஆய்வு வெளியீடுகளில் – ஆய்வு பட்டங்கள் மற்றும் பிரசுரங்களின் எண்ணிக்கை, ஆய்வுகள் மற்றும் பிரசுரங்களின் தரம், ஆய்வு நிதியிடல் மற்றும் ஆய்வு ஒத்துழைப்புக்கள் என்பவற்றில் குறிப்பிடத்தக்க துரித அதிகரிப்பை உண்டாக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### 1.9 சர்வதேசமயப்படுத்துதல்

மொறட்டுவை பல்கலைகக்கழகம் 2016 ஆண்டு காலப்பகுதியில் சர்வதேசமயப்படுத்துவதற்காக அதிகளவு கவனத்தை தொடர்ந்தும் செலுத்தியது. மொறட்டுவை பல்கலைகக்கழகம் சார்பான சர்வதேச பார்வையை அதிகரிப்பதற்காக பல்வேறு வழிமுறைகளை பயன்படுத்துவதற்கு கவனத்தைச் செலுத்தும் நோக்கத்துடன் 2015 செப்ரெம்பர் மாதம் பணிப்பாளர்/ சர்வதேச உறவுகள் எனும் பதவிக்கான நியமனத்தை மேற்கொண்டது. கூட்டு பட்டங்களை ஆரம்பித்தல், சர்வதேச மாணவர்களை கவர்ந்திழுத்தல், சர்வதேச சுற்றுப் பயணங்களுக்கு ஏற்பாடு செய்தல், எமது மாணவர்களுக்கு சர்வதேச பல்கலைக்கழகங்களில் இணைவதற்கு உதவியளித்தல், சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் (MOUs) என்பவற்றில் ஈடுபடுதல் போன்ற முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. 2016 ஆண்டின் போது சில செயற்பாடுகளுக்கு சாத்தியமான ஒத்துழைப்புசார் முயற்சியாக மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு சர்வதேச பல்கலைக்கழகங்கள் 15 இல் இருந்து பார்வையிட வருகைதந்தமை மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய பணிப்பாளரது 11 பல்கலைக்கழகங்களுக்கு பார்வையிட சென்றமை உள்ளடங்குகின்றது. தற்போது மொறட்டுவை பல்கலைக்கழகத்திடம் சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் 21 ஒப்பந்தங்களும் 09 புரிந்துணர்வு உடன்படிக்கைகளும் (MOU) காணப்படுவதுடன், அவற்றில் சில மிகுந்த செயலூக்கமுடையதாகும்.

2016 ஆண்டில், பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவகங்கள் 10 உடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளது. குறிப்பிடத்தக்க செயலூக்கமுள்ள ஒத்துழைப்புக்களாக, மெக்காரோனிக்ஸ் பிரிவு சார்பான விஞ்ஞானம் மற்றும தொழில்நுட்பவியல் பற்றிய ஷன்டோங் பல்கலைக்கழகம்; லட்வியா நாட்டின் தொழில்நுட்பம் பற்றிய றிகா நிறுவகத்துடனான பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு மாணவர்கள்

பரிமாற்றத் திட்டம்; அவுஸ்திரேலியாவின் வொலொங்கொங் பல்கலைக்கழகம் மற்றும் மொறட்டுவை பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கிடையிலான கூட்டு கலாநிதி (PhD) நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்குதல்; கட்டட பொருளியல் திணைக்களம் மற்றும் லிவர்பூல் ஜோன் மூவர்ஸ் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கிடையிலான ஒத்துழைப்பு; வெஸ்டர்ன் அவுஸ்திரேலியா பல்கலைக்கழகத்துடன் கழிவு பிளாஸ்டிக் பெறுமதி கூட்டுதல் கருத்திட்டம்; பிரயோக விஞ்ஞானம் சார் முன்ஸ்டர் பல்கலைக்கழகத்துடன் மாணவர் மற்றும் பணியாளர் பரிமாற்றத் திட்டம் என்பன 2016 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகளாக உள்ளடங்குகிறது.

2016 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட புலைமைப்பரிசில் திட்டத்தின் கீழ் மாணவர்கள் 5 பேர் மற்றும் கட்டணம் அறவிடும் அடிப்படையிலான மாணவர்கள் 03 பேர் உட்பட சர்வதேச மாணவர்கள் 8 பேர் பொறியியல் பீடத்திற்கு சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மேலும், பல்கலைக்கழகத்தினால் பட்டமேற்படிப்பு கற்கைகள் சார்பாக சர்வதேச மாணவர்கள் 08 பேர் 2016 இல் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். தற்போது மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் முழுநேர சர்வதேச மாணவர்கள் 35 பேருக்கும் அதிகமானோர் கல்வி கற்றுவருகின்றனர். இது தவிர, பல்வேறு மாணவர் மாற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சர்வதேச மாணவர்கள் மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் குறுங்கால பாடநெறிகளை கற்பதற்கான சில நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்படுத்தப்பட்டுள்ளன.




### 1.10 விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள்

2016 ஆண்டின் போது மொறட்டுவை பல்கலைக்கழகமானது 2016 - இலங்கை பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டியில் பல சம்பியன்ஷிப் விருதுகளை வென்றெடுத்ததுடன், பல்கலைக்கழகங்களுக்கிடையிலான பட்மின்டன் ஆண்கள் சம்பியன்ஷிப், பல்கலைக்கழகங்க ளுக்கிடையிலான கரம் ஆண்கள் சம்பியன்ஷிப், பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கராத்தே ஆண்கள் சம்பியன்ஷிப், பல்கலைக்கழகங்களுக்கிடையிலான படகோட்டுதல் ஆண்கள் சம்பியன்ஷிப், பல்கலைக்கழகங்களுக்கிடையிலான படகோட்டுதல் பெண்கள் சம்பியன்ஷிப் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான றக்பி கால்பந்து சம்பியன்ஷிப் என்பன உள்ளடங்குகின்றது. இது தவிர, 2016 ஆண்டில் பொறியியல் பீடத்தின் மாணவரொருவர் ரஷ்யாவில் நடைபெற்ற உலக பல்கலைக்கழக பெட்மின்டன் சம்பின்ஷிப் போட்டியில் இலங்கை பல்கலைக்கழக பென்மின்டன் அணியை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், பொறியியல் பீடத்தின் மாணவர்கள் இருவர் 2016 இல் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடாத்தப்பட்ட உலக பல்கலைக்கழக செஸ் (சதுரங்க) சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை பல்கலைக்கழக செஸ் அணியை பிரதிநிதித்துவப்படுத்தினர். பொறியியல் பீடத்தின் மாணவரொருவர் 2016 இல் போர்த்துக்கல் நாட்டில் நடாத்தப்பட்ட உலக பல்கலைக்கழக செஸ் சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை பல்கலைக்கழக செஸ் அணியை பிரதிநிதித்துவப்

படுத்தியதுடன், மொறட்டுவை பல்கலைக்கழக மாணவியொருவர் 2016 இல் தெற்காசிய கராத்தே பெண்கள் சம்பியன்ஷிப் போட்டியில் பங்குபற்றியதுடன், வெண்கலப் பதக்கத்தையும் வென்றெடுத்தார்.

'UMiSF', பாடசாலை வயது பிரிவு போட்டித்தொடருடன் மொறட்டுவை பல்கலைக்கழக சர்வதேச ஷட்டலர்ஸ் பெஸ்ட் பட்மின்டன் சம்பியன்ஷிப் போட்டி மற்றும் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான தனி நபர் போட்டி மற்றும் குழு சம்பியன்ஷிப் 2016, MORA அழைப்புரீதியான கூடைப்பந்து போட்டித்தொடர் 2016, அழைப்புரீதியான சர்வதேச பல்கலைக்கழக கிரிக்கட் அறுவர் அணி போட்டித்தொடர் உட்பட அதிக எண்ணிக்கையிலான விளையாட்டு நிகழ்வுகள்.

MORA கிண்ண சர்வதேச பல்கலைக்கழக கால்பந்துப் போட்டித்தொடர் – 2016, இந் நிகழ்வில் பங்களூர் PESIT பல்கலைக்கழகம் 2016 இல் பங்குபற்றியது, MORA கிண்ண அழைப்புரீதியான பல்கலைக்கழக அறுவர் அணி ஹொக்கி ஆண்கள் மற்றும் பெண்கள் போட்டித்தொடர் – 2016, **13**வது கல்விசார் றக்பி ஏழுபேர் போட்டி 2016, பாடசாலை வயது பிரிவு போட்டித்தொடருடன் 'MORA Smashes' டேபல் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி மற்றும் பல்கலைக்கழகங்களுக் கிடையிலான தனி நபர் மற்றும் குழு சம்பியன்ஷிப் – 2016, 'UOM டென்னிஸ் பெஸ்ட்' வயது பிரிவு டென்னிஸ் சம்பியன்ஷிப் 2016 போட்டி மற்றும் கெமுனு ரத்நாயக்க ஞாபகர்த்த அழைப்புரீதியிலான பல்கலைக்கழக கரப்பந்தாட்ட சம்பியன்ஷிப் – 2016 ஆகிய விளையாட்டு நிகழ்வுகளில் மாணவர்களது பங்களிப்பை அதிகரிப்பதற்காக மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் மூலம் ஒழுங்குசெய்து நடாத்தப்பட்டன.

டோஸ்மாஸ்டர்ஸ் இன்டர்நெஷனல் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் மொறட்டுவை பல்கலைக்கழக கேவல் கழகத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட கேவல் மாநாடு – 2016 நிகழ்வு 200 இற்கும் மேற்பட்ட மாணவர்களின் பங்குபற்றலுடன் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

## 1.11 கட்டுப்படுத்தல்கள்

2010-2015 கூட்டிணைந்த திட்டத்தின் 1-8 குறிக்கோள்களின் அதிகமான நோக்கங்கள் கணிசமானளவு அடையப்பட்டுள்ளன. ஆயினும், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் அரசாங்க நிதிகளில் தங்கியிருக்கும் விடயங்களில், மற்றும் தீர்மானம் எடுக்கும் தன்னாட்சி அதிகாரம் இல்லாததனால், குறிக்கோள்களும், நோக்கங்களும் முழுமையாக இன்னும் அடையப்பட வேண்டியுள்ளது.

- ஊதியங்கள் மற்றும் ஏனைய ஊக்கப்படுத்தல் கொடுப்பனவுகள் குறைவு காரணமாக கருத்திட்ட முகாமையாளர் மற்றும் வேலை பொறியியலாளர் ஆகிய பதவிகளுக்கு தகைமைபெற்ற மற்றும் திறனுள்ள தொழில்வாண்மையாளர்களை ஆட்சேர்த்துக்கொள்வது சார்பாக பல்கலைக்கழகத்திற்கு அதிக சிக்கல்மிக்கதாக இருப்பதனால் கருத்திட்ட முகாமை மற்றும் பராமரிப்பு பணிகள் என்பவற்றை பயனுறுதிமிக்க வகையில் நிறைவேற்றுவது பாரிய சிரமமாகவுள்ளது. இதே நிலை மின் மேற்பார்வையாளர் போன்ற துணை பதவிகளுக்கும் பொருந்தும். பல முயற்சிகளின் பின்னரும் கூட பல்கலைக்கழகத்தினால் ஆட்சேர்ப்புச் செய்யயியலாது போனதுடன், இதற்கான தீர்வினைக் காணுவது கட்டாயமானதாகும்.

- உயர் கல்வித் துறையில் மாறிவரும் சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்காக அரச பல்கலைக்கழங்களில் ஏற்படும் தேவைகளை பூர்த்திசெய்ய புதிய பதவியணியினரை அறிமுகப்படுத்துவது அத்தியாவசியமானதாகும். பல்கலைக்கழக வியாபார தொடர்புகள், ஏற்பாட்டுவசதிகள் முகாமைத்துவம், தகவல் தொடர்பாடல் சேவைகளும் தலைமைத்துவமும், ஈ-கற்றல் ஊக்குவிப்பு, சந்தைப்படுத்தல் மற்றும் ஊடக அலுவல்கள் போன்ற புதிய பணிகள் சார்பாக திறன்வாய்ந்த தொழில்வாண்மையாளர்களின் தேவை இதில் உள்ளடங்குகின்றது. இவ்வாறு ஏற்படும் தேவைகள் சார்பாக பல்கலைக்கழகம் அத்தகைய பதவியணியினர் இன்றி பல்கலைக்கழகம் திணறி வருவதுடன் அலுவல்சார் அங்கீகரிப்புச் செயற்பாடுகளும் வலி மிகுந்ததாகவுள்ளது.

- கொள்வனவு முறை சம்பந்தமான பிரச்சினைகள் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் மோசமான செயற்பாடுகள் காரணமாக பல கட்டட நிர்மாணிப்பு கருத்திட்டங்கள் குறிப்பிடத்தக்களவு பின்னடைந்துள்ளன. பல்வேறு பிரச்சினைகள் காரணமாக திறமையான நிர்மாண ஒப்பந்தக்காரர்களது சேவையைப் பெற்றுக்கொள்ளல் கடினமாகவுள்ளது. ஆலோசனையாளர்களும் திறமையற்றவர்களாக உள்ளனர். பல்கலைக்கழகத்தின் தரப்பில் நல்ல கருத்திட்ட முகாமையாளரொருவர் இல்லாததனால் பிரச்சினைகள் குவிந்துள்ளதுடன், தவிர்க்க முடியாத காலதாமதங்களும் விளைவுகளாக உள்ளன.

- தங்குமிட விடுதிகளை அதிகரிப்பது பாராட்டத்தக்க விடயமாகும். எனினும், சகல மீண்டுவரும் தேவைகளை நிறைவேற்றுவதற்கு பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் மீண்டுவரும் நிதி போதுமானதாக இல்லையென்பதுடன், நியம நிலைகளுடன் விடுதிகளை பராமரிப்பதற்காக போதுமானளவு செயல்பாட்டு மற்றும் பராமரிப்பு நிதி இருத்தல் அவசியமாகும். அரசாங்கத்தினால் அவ்வாறான நிதி வழங்கப்படாவிட்டால், அத்தகைய பராமரிப்பு தேவைகளுக்காக குறைந்தபட்சம் பகுதியளவு நிதியை பூர்த்திசெய்து கொள்வதற்காக ஓரளவு விடுதிக் கட்டணங்களை உயர்த்துவதற்கு அதிகாரத்தையுடையோர்களால் கூட்டு தீர்மானமொன்றை எடுப்பது அவசியமாகும்.

- பல்கலைக்கழகமானது மொறட்டுவையிலுள்ள கட்டுப்பெத்தையில் 53 ஏக்கர் காணியில் அமைந்துள்ளது. பல வருடங்களாக நடைபெற்றுவரும் விரிவாக்கல் நடவடிக்கைகளினால் இக் காணியின் இடவசதி நிறைவடையும் நிலையில் உள்ளது. இடவசதி தொடர்பாக காணப்படும் சங்கடங்களை நிவர்த்தி செய்வதற்காக பல்கலைக்கழகம் நிலைக்குத்தான கட்டடங்களை நிர்மாணிக்கும் உபாய முறையை செயற்படுத்த முயற்சியெடுத்துள்ளது. பல்கலைக்கழகத்தின் உகந்த சூழலினை பேணிச்செல்வதற்குத் தேவையான சூழ்நிலையின் கீழ் இவ் உபாய முறையானது அப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வொன்றினை வழங்குமென எதிர்பார்க்க முடியாது. இவ்வாறு விடுதி வசதிகள் விரிவாக்கம் செய்தல் மற்றும் கல்விச் செயற்பாடுகள் இரண்டிலும் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்திற்கு புதிதாக காணி சுவிகரிப்புச் செய்தல் அத்தியாவசியத் தேவையாகும். 2014இன் ஆரம்பத்தில் பல்கலைக்கழகத்திற்கு அண்மையிலுள்ள 125 பேர்ச் சிறிய காணித் துண்டை அயராத முயற்சியின் பயனாக விடுதிக்காக கொள்வனவு செய்துகொள்ள பல்கலைக்கழகத்திற்கு இயலுமாக இருந்ததுடன், இதற்காக உயர் கல்வி அமைச்சு, அமைச்சரவை மற்றும் பொதுத் திறைசேரி என்பற்றுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களின் விரிவாக்கல் சம்பந்தமாக குறைந்தது 10 -15 ஏக்கர் பரப்பளவு கொண்ட பெரியதொரு காணியொன்று நெருங்கிய சுற்றுவட்டாரத்தில் தேவைப்படுகிறது.

- 2016 ஆண்டில் அங்கீகாரம் சார் தேவைப்பாடுகளை எதிர்கொள்வது சார்பாக உபகரணங்களை மேம்படுத்துவதற்காக பொறியியல் பீடத்திற்கு உபகரணங்களை கொள்வனவு செய்ய ரூ. 500 மில்லியன் விசேட நிதியளிப்பு ஒதுக்கீட்டை மேற்கொண்டதற்காக மொறட்டுவை பல்கலைக்கழகம் அரசாங்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. எனினும், உலக தரத்திலான பல்கலைக்கழகமொன்றாக ஆகுவதற்கு அவசியமான சர்வதேச அங்கீகாரத்தை தக்கவைத்து உறுதிசெய்து கொள்வதற்காக இவ்வாறான நிதியைப் பேணிச்செல்லுதல் வேண்டும். 2017 இல் மூலதன நிதிசார் ஒதுக்கீடுகள் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்துள்ளதால், வசதிகள் சார் இற்றைப்படுத்தலைச்செய்து பராமரிப்பது கடினமாகியுள்ளது. அதேபோல், செயல்நுணுக்க முகாமைத்துவ திட்டத்திற்கு ஏற்ப பல்கலைக்கழகத்தின் முன்னேற்றத்தை தாமதப்படுத்தவும் இது காரணமாகியுள்ளது. 2011 இலும் (ரூ. 100 மில்லியன்) மற்றும் 2012 இலும் (ரூ. 75 மில்லியன்) மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தை உண்மையான சர்வதேச பல்கலைக்கழகமாக படிப்படியாக மாறுவதற்காக வழங்கப்பட்ட மேலதிக நிதியளிப்பு, அதனைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் மேலதிகமாக வழங்கப்படவில்லை. எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அத்தகைய மேலதிக நிதியளிப்பு அத்தியாவசியமானதாகும்.

- துரித பொருளாதார வளர்ச்சிக்கான உபாயங்களாக துவக்க நிலைகளை புதுமையாக்குதல், அதனோடு இணைந்த தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்தல், வணிகமயமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் தொடர்பாக பல்கலைக்கழகங்களுக்கு சர்வதேச புகழ் பெற்ற ஏனைய பல்கலைக்கழகங்களில் உள்ளவாறு வளர்ச்சிமையங்கள் நிறுவக் கூடியதாக இருத்தல் வேண்டும். பல்கலைக்கழகங்களில் உள்ள வளர்ச்சிமையங்களுக்கு நட்டங்களை ஏற்க முடியாதபடியால் அவற்றுக்கு சட்டபூர்வமாக அனுமதி தரப்படுவதில்லை. வித்து நிதிகள் மற்றும் வெற்றிகள் தொடர்பான உத்தரவாதமில்லாமல் ஆதரவு, சொந்த உடமைக்கான சட்டப்பொறி ஆகியன வளர்ச்சிமையங்களுக்குத் தேவையாகவுள்ளன. இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக்குழு மாத்திரமே இடர்களை ஏற்கலாம். அதேபோல், பல்கலைக்கழகங்கள் அவைகளின் சொந்த வணிகமயமாக்கப்பட்ட தொழில்நுட்பங்களைக் கொண்டு வணிகமுயற்சி பணிகளுக்கு பல்கலைக்கழகங்களே பங்காளராக இருக்கமுடியாது. அவ்வாறான கண்டுபிடிப்புகளுக்கான உரிமைக் கொடுப்பனவைப் பெறவோ அல்லது தொழில்நுட்பங்களை விற்கவோ மட்டுமே அவைகளால் முடியும். புதிய பிரதான முன்னேற்ற குறிகாட்டிகளாக பெருமளவான ஆக்கவுரிமைகள், வணிகமயப்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் மற்றும் வணிகங்களை ஆரம்பித்தல் என்பன பல்கலைக்கழகத்தினால் செயற்படுத்தப் பட்டதனால் கொள்கை ரீதியான மாற்றமொன்று அவசியமாகும்.

- விசேடமாக ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை அடிப்படையாகக்கொண்ட ஆய்வுகளையும், அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள பல்கலைக்கழகங்களால் ஊக்கப்படுத்தப்படுகின்றன. கைத்தொழில் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை இலக்காகக் கொண்ட ஆய்வுகளுக்கும், அபிவிருத்திகளுக்கும் அதிகமான கேள்விகள் உள்ளன. எவ்வாறிருப்பினும், பல்கலைக்கழகங்கள் அநேகமாக தாமதங்களுக்காக விமர்சிக்கப் படுவதுடன், சில சந்தர்ப்பங்களில் உரிய நேரத்தில் விநியோகிப்பதில் ஏற்படும் சிக்கல்களினால் அவ்வாறான கருத்திட்டங்கள் பல்கலைக்கழகங்களுக்கு கையளிக்கப் படுவதில்லை. அதிகமான நேரத்தை எடுக்கும் அரசாங்க கொள்வனவு செயல்முறைமைகளை கடைப்பிடித்தல் இதற்கான காரணங்களில் ஒன்றாகும். ஆய்வு செயற்பாடுகளுக்கான

கொள்வனவுகளை முன்னரே திட்டமிட முடியாதபடியால், அதனை அச்சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்வதற்கான தேவையேற்படுகின்றது. வழமையான வழிகாட்டல்களிலிருந்து விலகிச் செயற்படுவதனால் அதிகமான கணக்காய்வு விசாரணைகள் தோன்றுகின்றன. ஆய்வு செயற்பாடுகளுக்கு கொள்வனவு செய்வதற்கான விசேட வழிகாட்டல்கள் பல நாடுகளில் காணப்படுகின்றன. இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்காக மொறட்டுவைப் பல்கலைக்கழகம் தனித்துவமான கொள்வனவு வழிகாட்டல் நியமங்களை நிதி, திட்டமிடல் அமைச்சின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்ததுடன், பின்பு இவ் வழிகாட்டல் முறையை மீளாய்வு செய்து, சுமார் மூன்று வருடங்களுக்கு முன்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது இப் பிரச்சினையை தீர்ப்பதற்காக வேறு முன்மொழிவொன்றை முன்வைத்துள்ளது. இத்தகைய தாமதங்களை தவிர்ப்பதற்காக அவ்வாறான தடங்கல்கள் மிக விரைவில் நீக்கப்படுமென நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருக்கிறது.

## 2. மூலவளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய

### (அ) பொழிப்பு

| பீடம்/ பிரிவு/ நிலையம் | மொத்த மாணவர்கள்* | | கல்விசார் ஆளணியினரின் மொத்த எண்ணிக்கை | | | | நிர்வாக ஆளணியினரின் மொத்த எண்ணிக்கை** | | கல்விசார் துணை ஆளணியினரின் மொத்த எண்ணிக்கை*** | | கல்விசாரா ஆளணியினரின் மொத்த எண்ணிக்கை**** | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நிரந்தரம் | | ஒப்பந்தம் | | | | | | | |
| | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 |
| கட்டடக்கலை பீடம் | **1907** | **1950** | **75** | **78** | **15** | **16** | **1** | **1** | **16** | **7** | **73** | **59** |
| பொறியியல் பீடம் | **4566** | **4663** | **228** | **243** | **39** | **36** | **2** | **2** | **90** | **78** | **214** | **195** |
| தகவல் தொழில்நுட்ப பீடம் | **1347** | **1422** | **28** | **28** | **3** | **1** | - | **1** | **28** | **26** | **44** | **37** |
| பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | **3** |
| பிரிவுகள் மற்றும் நிலையங்கள் | - | - | **7** | **7** | - | - | **22** | **21** | **6** | **8** | **369** | **372** |
| கூட்டு மொத்தம் | **7820** | **8035** | **338** | **355** | **57** | **53** | **25** | **26** | **140** | **119** | **700** | **669** |

## (ஆ) விபரம்

| பீடம்/ பிரிவு/ நிலையம் | பாடநெறி | மொத்த மாணவர்கள்* | | கல்விசார் ஆளணியினரின் மொத்த எண்ணிக்கை | | | | நிர்வாக ஆளணியினர் மொத்த எண்.** | | கல்விசார் துணை ஆளணியினர் மொத்த எண்.*** | | கல்விசாரா ஆளணியினர் மொத்த எண்.**** | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | நிரந்தரம் | | ஒப்பந்தம் | | | | | | | |
| | | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 |
| கட்டடக்கலை பீடம் | AT [1] | 377 | 370 | 75 | 78 | 15 | 16 | 01 | 01 | 16 | 7 | 73 | 59 |
| | AD [2] | 217 | 203 | | | | | | | | | | |
| | QS [3] | 546 | 573 | | | | | | | | | | |
| | TCP [4] | 321 | 321 | | | | | | | | | | |
| | FM [5] | 281 | 276 | | | | | | | | | | |
| | BLA[6] | 165 | 207 | | | | | | | | | | |
| உப மொத்தம் | | **1907** | **1950** | **75** | **78** | **15** | **16** | **01** | **01** | **16** | **7** | **73** | **59** |
| பொறியியல் பீடம் | MPR [7] | 3517 | 3587 | 228 | 243 | 39 | 36 | 02 | 02 | 90 | 78 | 214 | 195 |
| | EM [8] | 264 | 266 | | | | | | | | | | |
| | TM [9] | 290 | 302 | | | | | | | | | | |
| | TLM [10] | 281 | 283 | | | | | | | | | | |
| | FD [11] | 214 | 225 | | | | | | | | | | |
| உப மொத்தம் | | **4566** | **4663** | **228** | **243** | **39** | **36** | **02** | **02** | **90** | **78** | **214** | **195** |
| தகவல் தொழில்நுட்ப பீடம் | IT [12] | 895 | 928 | 28 | 28 | 03 | 1 | | 01 | 28 | 26 | 44 | 37 |
| | ITM [13] | 452 | 494 | | | | | | | | | | |
| உப மொத்தம் | | **1347** | **1422** | **28** | **28** | **03** | **1** | **-** | **01** | **28** | **26** | **44** | **37** |
| பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடம் | | | | | | | | | | | | - | 03 |
| உப மொத்தம் | | | | | | | | | | | | - | **03** |
| பிரிவுகள் மற்றும் நிலையங்கள் | | - | - | 07 | 7 | - | - | 22 | 21 | 06 | 8 | 369 | 372 |
| உப மொத்தம் | | **-** | **-** | **07** | **7** | **-** | **-** | **22** | **21** | **06** | **8** | **369** | **372** |
| கூட்டு மொத்தம் | | **7820** | **8035** | **338** | **355** | **57** | **53** | **25** | **26** | **140** | **119** | **700** | **669** |

குறிப்புக்கள் -

[1] கட்டடக்கலை இளமாணி

[2] வடிவமைப்பு இளமாணி

[3] கணிய அளவையியல் சார் விஞ்ஞான இளமாணி

[4] பட்டனமும் நாடும் திட்டமிடல் சார் விஞ்ஞான இளமாணி

[5] வசதிகள் முகாமைத்துவம் சார் விஞ்ஞான இளமாணி

[6] நிலத்தோற்ற கட்டடக்கலை இளமாணி

[7] பொறியியல் (MPR) சார் விஞ்ஞான இளமாணி

[8] பொறியியல் சார் விஞ்ஞான இளமாணி (நில மூலவளங்கள்)

[9] பொறியியல் சார் விஞ்ஞான இளமாணி – புடவை மற்றும் ஆடை தொழில்நுட்பம்

[10] போக்குவரத்து, தேவைகள் விநியோக ஒழுங்கமைப்பு முகாமைத்துவ சார் விஞ்.இளமாணி

[11] நவநாகரீக வடிவமைப்பு மற்றும் உற்பத்தி அபிவிருத்தி சார் வடிவமைப்பு இளமாணி

[12] தகவல் தொழில்நுட்பம் சார் விஞ்ஞான இளமாணி

[13] தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும்

* வழங்கப்பட்ட காலத்தில் ஓர் ஆண்டின் அதிகூடிய மாணவர் எண்ணிக்கை

** பதிவாளர், நிதியாளர், பிரதி பதிவாளர்/நிதியாளர், சிரேஷ்ட உதவி பதிவாளர்/நிதியாளர், உதவி பதிவாளர்/நிதியாளர், பிரதி உள்ளகக் கணக்காய்வாளர், பணிப்பாளர்/ உடற் கல்வி, சுகாதார சேவை உத்தியோகத்தர், வேலைப் பொறியியலாளர், காப்பாளர், பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர் (2016.12.31 ஆம் திகதியில்)

*** நிரந்தர கல்விசார் துணை ஆளணி, ஒப்பந்த கல்விசார் துணை ஆளணி, தற்காலிக போதனாசிரியர்கள் (2016.12.31 ஆம் திகதியில்)

**** நிரந்தர கல்விசாரா ஆளணி, ஒப்பந்த மற்றும் தற்காலிக கல்விசாரா ஊழியர்கள் (2016.12.31 ஆம் திகதியில்)

| பணியாளர் வகை | சம்பள அளவுத்திட்டம் | அங்கீகரிக்கப் பட்ட பதவியணி | நிரந்தரம் | தற்காலிக அடிப்படை | ஒப்பந்த அடிப்படை | நிரந்தர பதவியணி வெற்றிடங்கள் | உள்ளபடி பதவியணி வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| கல்விசார் பணியாளர் | U-AC 3 to U-AC 5 | 453 | 348 | - | 53 | 105 | 52 |
| | U-AC 1 to U-AC 2 | 127 | 0 | 81 | | 127 | 46 |
| நூலகம் (தொழில்சார் பணியாளர்) | U-AC 5 | 1 | 1 | - | - | - | - |
| | U-AC 4 | - | - | - | - | - | - |
| | U-AC 3 | 6 | 6 | - | - | - | - |
| நிருவாக பணியாளர் | U-EX 3 | 2 | 2 | - | - | - | - |
| | U-EX 2 | 17 | 13 | - | - | 4 | 4 |
| | U-EX 1 | 12 | 11 | - | - | 1 | 1 |
| | U-MO 2 | 1 | 1 | - | - | - | - |
| | U-MO 1 | 3 | 1 | - | - | 2 | 2 |
| கல்விசார் துணை பணியாளர் | U-AS 2 | 62 | 30 | - | 6 | 32 | 26 |
| | U-AS 1 | 6 | 1 | - | - | 5 | 5 |
| தொழில்நுட்ப பணியாளர்*1 | U-EX 2 | 0 | 2 | - | - | 0 | - |
| | U-EX 1 | 8 | 6 | - | - | 0 | - |
| | U-MN 4 | 36 | 35 | - | - | 0 | - |
| | U-MN 3 | - | | - | - | 0 | - |
| | U-MN 2 | 1 | 1 | - | - | 0 | - |
| | U-MN 1 | 1 | 1 | - | - | 0 | - |
| | U-MT 1 | 107 | 91 | - | - | 17 | - |
| எழுதுவினைஞர் மற்றும் இணைந்த சேவை | U-MN 4 | 32 | 40 | - | - | 4 | - |
| | U-MN 3 | 5 | 6 | - | - | 0 | - |
| | U-MN 2 | 3 | 2 | - | - | 1 | - |
| | U-MN 1 | 174 | 149 | - | - | 12 | - |
| ஆரம்ப பணியாளர் | U-PL 3 | 173 | 155 | - | - | 19 | - |
| | U-PL 2 | 42 | 38 | - | - | 4 | - |
| | U-PL 1 | 130 | 124 | - | - | 5 | - |
| மொத்தம் | | 1402 | 1064 | - | - | 338 | 136 |

3. உள்நாட்டு மாணவர்கள் பற்றிய

(அ) பொழிப்பு

(i) இளமாணிப் பட்டங்கள் (பட்டதாரி மாணவர்கள்)

| பீடம் | உள்வாங்கல் (மாணவர்கள் எண்ணிக்கை) | | 1ம் வருட மாணவர்கள் | | 2ம் வருட மாணவர்கள் | | 3ம் வருட மாணவர்கள் | | 4ம் வருட மாணவர்கள் | | 5ம் வருட மாணவர்கள் | | 6ம் வருட மாணவர்கள் | | பட்டம்பெற்றோர் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 |
| கட்டடக்கலை பீடம் | **358** | **354** | **360** | **358** | **357** | **360** | **466** | **357** | **305** | **466** | **61** | **55** | - | - | **121** | **265** |
| பொறியியல் பீடம் | **928** | **938** | **897** | **928** | **896** | **897** | **1004** | **896** | **841** | **1004** | - | - | - | | **718** | **801** |
| தகவல் தொழில்நுட்ப பீடம் | **288** | **283** | **302** | **288** | **275** | **302** | **274** | **275** | **208** | **274** | - | - | - | - | **115** | **184** |
| கூட்டு மொத்தம் | **1574** | **1575** | **1559** | **1574** | **1528** | **1559** | **1744** | **1528** | **1354** | **1744** | **61** | **55** | - | | **954** | **1250** |

(ii) பட்டப்பின்படிப்பு பட்டங்கள் (பாடநெறி சார்பாக)

| பீடம் | உள்வாங்கல் (மாணவர்கள் எண்ணிக்கை) | | தற்போதுள்ள மாணவர்கள் எண்ணிக்கை | பட்டம்பெற்றோர் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | எம்.எஸ்சி./ எம்.பொறியி. / எம்.பிஏ. | | பட்டப்பின்படிப்பு திப்ளோமா | |
| | 2015 | 2016 | | 2015 | 2016 | 2015 | 2016 |
| கட்டடக்கலை பீடம் | 86 | 57 | 300 | 20 | 19 | 30 | 18 |
| பொறியியல் பீடம் | 380 | 652 | 1764 | 169 | 151 | 56 | 111 |
| தகவல் தொழில்நுட்ப பீடம் | 43 | 59 | 125 | 7 | 33 | 6 | 2 |
| மொத்தம் | **509** | **768** | **2189** | **196** | **252** | **156** | **132** |

(iii) பட்டமேற்படிப்பு பட்டங்கள் (ஆய்வு சார்பாக)

| பீடம் | உள்வாங்கப்பட்ட மாணவர்கள் எண். | | | | | | தற்போதுள்ள மாணவர்கள் எண்ணிக்கை | | | | | | பட்டம்பெற்றோர் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எம்.எஸ்சி. (M.Sc.) | | எம்.பில். (M.Phil.) | | பீ.எச்டீ. (PhD) | | எம்.எஸ்சி. (M.Sc.) | | எம்.பில். (M.Phil.) | | பீ.எச்டீ. (PhD) | | எம்.எஸ்சி. (M.Sc.) | | எம்.பில். (M.Phil.) | | பீ.எச்டீ. (PhD) | |
| | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 |
| கட்டடக்கலை பீடம் | - | - | - | - | - | - | - | 1 | 15 | 8 | 4 | 6 | - | 1 | 1 | 3 | 1 | 1 |
| பொறியியல் பீடம் | 37 | - | 10 | - | 15 | - | 100 | 77 | 52 | 52 | 61 | 68 | 20 | 14 | 3 | 5 | 4 | 2 |
| தகவல் தொழில்நுட்ப பீடம் | 1 | - | 1 | - | - | - | 1 | 1 | 6 | 4 | 2 | 2 | - | - | - | - | - | - |
| பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடம் | - | 45 | - | 32 | - | 13 | - | 77 | - | 43 | - | 30 | - | 4 | - | - | - | - |
| மொத்தம் | **38** | **45** | **11** | **32** | **15** | **13** | **101** | **156** | **73** | **107** | **67** | **106** | **20** | **19** | **4** | **8** | **5** | **3** |

## (ஆ) விபரம்

### (i) இளமாணிப் பட்டங்கள் (பட்டதாரி மாணவர்கள்)

| பீடம் | பாடநெறி | மொழி | உள்வாங்கல் (மாணவர்கள் எண்ணிக்கை) | | 1ம் வருட மாணவர்கள் | | 2ம் வருட மாணவர்கள் | | 3ம் வருட மாணவர்கள் | | 4ம் வருட மாணவர்கள் | | 5ம் வருட மாணவர்கள் | | 6ம் வருட மாணவர்கள் | | பட்டம்பெற்றோர் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 |
| கட்டடக்கலை பீடம் | AT [1] | ஆங்கிலம் | 55 | 54 | 57 | 55 | 57 | 57 | 92 | 57 | 55 | 92 | 61 | 55 | - | - | 45 | 43 |
| | AD [2] | ஆங்கிலம் | 44 | 37 | 35 | 44 | 46 | 35 | 41 | 46 | 51 | 41 | - | - | - | - | 37 | 37 |
| | QS [3] | ஆங்கிலம் | 128 | 124 | 116 | 128 | 89 | 116 | 116 | 89 | 97 | 116 | - | - | - | - | - | 93 |
| | TCP [4] | ஆங்கிலம் | 47 | 51 | 64 | 47 | 73 | 64 | 86 | 73 | 51 | 86 | - | - | - | - | 39 | 49 |
| | FM [5] | ஆங்கிலம் | 47 | 46 | 48 | 47 | 54 | 48 | 81 | 54 | 51 | 81 | - | - | - | - | - | 43 |
| | BLA [6] | ஆங்கிலம் | 37 | 42 | 40 | 37 | 38 | 40 | 50 | 38 | - | 50 | - | - | - | - | - | - |
| **உப மொத்தம்** | | | **358** | **354** | **360** | **358** | **357** | **360** | **466** | **357** | **305** | **466** | **61** | **55** | - | - | **121** | **265** |
| பொறியியல் பீடம் | MPR [7] | ஆங்கிலம் | 727 | 723 | 708 | 727 | 684 | 708 | 745 | 684 | 653 | 745 | - | - | - | - | 563 | 626 |
| | EM [8] | ஆங்கிலம் | 48 | 50 | 50 | 48 | 53 | 50 | 65 | 53 | 48 | 65 | - | - | - | - | 45 | 43 |
| | TM [9] | ஆங்கிலம் | 54 | 61 | 49 | 54 | 59 | 49 | 79 | 59 | 49 | 79 | - | - | - | - | 36 | 41 |
| | TLM [10] | ஆங்கிலம் | 55 | 51 | 49 | 55 | 61 | 49 | 67 | 61 | 49 | 67 | - | - | - | - | 43 | 48 |
| | FD [11] | ஆங்கிலம் | 44 | 53 | 41 | 44 | 39 | 41 | 48 | 39 | 42 | 48 | - | - | - | - | 31 | 43 |
| **உப மொத்தம்** | | | **928** | **938** | **897** | **928** | **896** | **897** | **1004** | **896** | **841** | **100 4** | - | - | - | | **718** | **801** |
| தகவல் தொழில்நுட்ப பீடம் | IT [12] | ஆங்கிலம் | 189 | 188 | 189 | 189 | 164 | 189 | 198 | 164 | 155 | 198 | - | - | - | - | 84 | 140 |
| | ITM [13] | ஆங்கிலம் | 99 | 95 | 113 | 99 | 111 | 113 | 76 | 111 | 53 | 76 | - | - | - | - | 31 | 44 |
| **உப மொத்தம்** | | | **288** | **283** | **302** | **288** | **275** | **302** | **274** | **275** | **208** | **274** | **-** | **-** | - | - | **115** | **184** |
| **கூட்டு மொத்தம்** | | | **1574** | **1575** | **1559** | **1574** | **1528** | **1559** | **1744** | **1528** | **1354** | **1744** | **61** | **55** | - | | **954** | **1250** |

குறிப்புக்கள் -

[1] கட்டடக்கலை இளமாணி

[2] வடிவமைப்பு இளமாணி

[3] கனிய அளவையியல் சார் விஞ்ஞான இளமாணி

[4] பட்டனமும் நாடும் திட்டமிடல் சார் விஞ்ஞான இளமாணி

[5] வசதிகள் முகாமைத்துவம் சார் விஞ்ஞான இளமாணி

[6] நிலத்தோற்ற கட்டடக்கலை இளமாணி

[7] பொறியியல் (MPR) சார் விஞ்ஞான இளமாணி

[8] பொறியியல் சார் விஞ்ஞான இளமாணி (நில மூலவளங்கள்)

[9] பொறியியல் சார் விஞ்ஞான இளமாணி – புடவை மற்றும் ஆடை தொழில்நுட்பம்

[10] போக்குவரத்து, தேவைகள் விநியோக ஒழுங்கமைப்பு முகாமைத்துவ சார் விஞ்.இளமாணி

[11] நவநாகரீக வடிவமைப்பு மற்றும் உற்பத்தி அபிவி. சார் வடிவமை. இளமாணி

[12] தகவல் தொழில்நுட்பம் சார் விஞ்ஞான இளமாணி

[13] தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் சார் விஞ்ஞான.இளமாணி

## (ii) பட்டப்பின்படிப்பு பட்டங்கள் (பாடநெறி சார்பாக)

| பீடம் | பாடநெறியின் பெயர் | மொழி | உள்வாங்கல் (மாணவர்கள் எண்ணிக்கை) | | தற்போதுள்ள மாணவர்கள் எண்ணிக்கை | பூர்த்திசெய்தோர் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | எம்.எஸ்சி./எம்.பொறியி. / எம்.பிஏ. | | எம்.எஸ்சி./எம்.பொறியி./ எம்.பிஏ. | |
| | | | 2015 | 2016 | | 2015 | 2016 | 2015 | 2016 |
| கட்டடக்கலை பீடம் | எம்.எஸ்சி./பீஜீ நகர வடிவமைப்பு | ஆங்கிலம் | 04 | - | 24 | 02 | 02 | 04 | 03 |
| | எம்.எஸ்சி./பீஜீ இடஞ்சார் திட்டமிடல் முகாமையும் வடிவமைப்பும் | ஆங்கிலம் | 09 | 20 | 37 | - | 01 | - | - |
| | உள்ளக வடிவமைப்பு எம்.எஸ்சி கற்றலுக்கான பீஜீ உள்ளக வடிவமைப்பு | ஆங்கிலம் | 17 | 15 | 34 | - | - | - | - |
| | எம்.எஸ்சி./பீஜீ தொழில்சார் பாதுகாப்பும் சுகாதாரமும் | ஆங்கிலம் | - | 11 | 32 | - | 03 | - | 01 |
| | எம்.எஸ்சி./பீஜீ கருத்திட்ட முகாமை | ஆங்கிலம் | 28 | - | 36 | 13 | 05 | 13 | 11 |
| | எம்.எஸ்சி./பீஜீ நிலத்தோற்ற வடிவமைப்பு | ஆங்கிலம் | - | - | 09 | - | - | 03 | - |
| | கட்டடக்கலை முதுமாணி | ஆங்கிலம் | - | - | 24 | - | 01 | - | - |
| | எம்.எஸ்சி./பீஜீ திப்ளோமா - ACOMAS | ஆங்கிலம் | - | 11 | 21 | 01 | - | 03 | - |
| | எம்.எஸ்சி./பீஜீ திப்ளோமா - நிர்மாண சட்டமும் முரண்பாடு தீர்த்தலும் | ஆங்கிலம் | 28 | - | 83 | 01 | 03 | 01 | 02 |
| | எம்.எஸ்சி./பீஜீ திப்ளோமா - பட்டணமும் நாடும் திட்டமிடல் | ஆங்கிலம் | - | - | - | 03 | 04 | 06 | 01 |

| பீடம் | பாடநெறியின் பெயர் | மொழி | உள்வாங்கல் (மாணவர்கள் எண்ணிக்கை) | | தற்போதுள்ள மாணவர்கள் எண்ணிக்கை | பூர்த்திசெய்தோர் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | எம்.எஸ்சி./எம்.பொறியி. / எம்.பிஏ. | | எம்.எஸ்சி./எம்.பொறியி. / எம்.பிஏ. | |
| | | | 2015 | 2016 | | 2015 | 2016 | 2015 | 2016 |
| பொறியியல் பீடம் | எம்.எஸ்சி./பீஜீ திப்ளோமா - கணினி விஞ்ஞானம் | ஆங்கிலம் | 63 | 79 | 220 | 13 | 10 | 01 | 02 |
| | எம்.பி.ஏ./பீஜீ திப்ளோமா - தகவல் தொழில்நுட்பம் | ஆங்கிலம் | 40 | 43 | 36 | 07 | 39 | 05 | 04 |
| | எம்.பி.ஏ./பீஜீ திப்ளோ. - தொழில்நுட்ப முகாமை | ஆங்கிலம் | 41 | 39 | 114 | 21 | 22 | 04 | 11 |
| | எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ. - அடித்தள பொறியி. நில தக்கவைத்தல் முறைமை | ஆங்கிலம் | - | 40 | 100 | - | 04 | 03 | - |
| | எம்.எஸ்சி./பீஜீ திப்ளோமா - வியாபார புள்ளிவிபரவியல் | ஆங்கிலம் | 17 | 25 | 84 | 07 | 11 | 04 | 02 |
| | எம்.எஸ்சி./பீஜீ திப்ளோமா - தொழிற்பாட்டு ஆய்வு | ஆங்கிலம் | 12 | 16 | 50 | 01 | 02 | 02 | - |
| | பொறி. முதுமாணி/பீஜீ திப்ளோ.-நெடுஞ் சாலை மற்றும் வீதிப்போக்குவர. பொறி. | ஆங்கிலம் | 12 | 20 | 77 | 09 | 09 | - | 05 |
| | எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ. போக்குவரத்து | ஆங்கிலம் | 05 | 03 | 16 | 01 | 02 | - | - |
| | எம்.எஸ்சி./பீஜீ தி. கருத்திட்ட முகாமை | ஆங்கிலம் | - | 48 | 82 | 07 | - | 05 | 01 |
| | எம்.எஸ்சி./பீஜீ திப்ளோமா – இலத்திரணியல் மற்றும் தன்னியக்கம் | ஆங்கிலம் | - | 36 | 56 | 03 | 06 | 01 | 04 |
| | எம்.எஸ்சி./பீஜீ திப்ளோமா - சூழல் பொறியியலும் முகாமையும் | ஆங்கிலம் | - | 20 | 37 | - | 11 | 07 | 04 |

| பீடம் | பாடநெறியின் பெயர் | மொழி | உள்வாங்கல் (மாணவர்கள் எண்ணிக்கை) | | தற்போதுள்ள மாணவர்கள் எண்ணிக்கை | பூர்த்திசெய்தோர் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | எம்.எஸ்சி./எம்.பொறியி. / எம்.பிஏ. | | எம்.எஸ்சி./எம்.பொறியி. / எம்.பிஏ. | |
| | | | 2015 | 2016 | | 2015 | 2016 | 2015 | 2016 |
| பொறியியல் பீடம் | எம்.எஸ்சி./பீஜீ திப். - சூழல் முகாமை | ஆங்கிலம் | - | 17 | 65 | - | 01 | - | - |
| | பொறி.முதுமாணி/பீஜீ திப்ளோமா - கட்டமைப்பு பொறியியல் வடிவமைப்பு | ஆங்கிலம் | - | 36 | 61 | 06 | 09 | 04 | 17 |
| | எம்.எஸ்சி./பீஜீ திப்ளோமா - நிர்மாண கருத்திட்ட முகாமை | ஆங்கிலம் | 43 | 48 | 85 | 05 | - | 18 | 06 |
| | எம்.எஸ்சி./பீஜீ திப். - நிதிசார் கணிதம் | ஆங்கிலம் | 12 | 21 | 84 | 10 | 05 | 07 | 07 |
| | பொறி.முதுமாணி/பீஜீ திப்ளோமா - உற்பத்தி முறைமை பொறியியல் | ஆங்கிலம் | - | - | 55 | 04 | 07 | 05 | 03 |
| | எம்.எஸ்சி./பீஜீ திப்ளோமா - பொலிமர் தொழில்நுட்பம் | ஆங்கிலம் | - | - | 23 | 01 | - | - | 01 |
| | எம்.எஸ்சி./பீஜீ திப்ளோமா - அகழ்தல் மற்றும் கனிப்பொருள் ஆராய்ச்சி | ஆங்கிலம் | - | - | 11 | - | - | - | - |
| | எம்.எஸ்சி./பீஜீ திப். – மின் பொறியியல் | ஆங்கிலம் | 28 | 38 | 60 | 21 | 19 | 19 | 09 |
| | எம்.எஸ்சி./பீஜீ திப்ளோ. – மின் நிறுவுதல் | ஆங்கிலம் | 34 | 35 | 66 | 10 | 05 | 02 | 15 |
| | எம்.எஸ்சி./பீஜீ திப். - கைத்தொழில் தன்னியக்கம் | ஆங்கிலம் | 16 | 31 | 44 | 10 | 03 | 09 | 02 |

| பீடம் | பாடநெறியின் பெயர் | மொழி | உள்வாங்கல் (மாணவர்கள் எண்ணிக்கை) | | தற்போதுள்ள மாணவர்கள் எண்ணிக்கை | பூர்த்திசெய்தோர் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | எம்.எஸ்சி./எம்.பொறியி. / எம்.பிஏ. | | எம்.எஸ்சி./எம்.பொறியி. / எம்.பிஏ. | |
| | | | 2015 | 2016 | | 2015 | 2016 | 2015 | 2016 |
| பொறியியல் பீடம் | எம்.எஸ்சி./பீஜீ திப். - பொருட்கள் விஞ்ஞானம் பொறியியல் | ஆங்கிலம் | 24 | - | 33 | 05 | 01 | - | - |
| | எம்.எஸ்சி./பீஜீ திப். - நிலைபேறான செயல்முறை அபிவிருத்தி | ஆங்கிலம் | 19 | - | 50 | 03 | 03 | - | 01 |
| | எம்.பி.ஏ./பீஜீ திப். ஈ-அரசாட்சி | ஆங்கிலம் | - | - | 08 | 02 | - | - | - |
| | எம்.எஸ்சி./பீஜீ திப். - கட்டட சேவைகள் பொறியியல் | ஆங்கிலம் | - | 22 | 54 | 03 | 03 | 13 | 07 |
| | பொறி.முதுமாணி/பீஜீ திப். - சக்தி தொழில்நுட்பம் | ஆங்கிலம் | - | - | 14 | 04 | 06 | 01 | 01 |
| | எம்.எஸ்சி./பீஜீ திப். - புடைவை, ஆடை முகாமை | ஆங்கிலம் | - | 12 | 40 | 02 | - | - | - |
| | எம்.பி.ஏ./பீஜீ திப். - உட்கட்டமைப்பு | ஆங்கிலம் | - | - | 09 | - | - | - | - |
| | எம்.எஸ்சி./பீஜீ திப். - தொடர்பாடல் | ஆங்கிலம் | 14 | 13 | 39 | 09 | 12 | 06 | 04 |
| | எம்.எஸ்சி./பீஜீ திப். – இலத்திரனியல் தொடர்பாடல் | ஆங்கிலம் | - | - | 63 | - | 01 | - | 01 |
| | எம்.எஸ்சி./பீஜீ திப். நீர் வள பொறியியல் | ஆங்கிலம் | - | - | 18 | 05 | 09 | 04 | - |
| | எம்.பிஏ./பீஜீ திப். – தொழிலுரிமைத்துவம் | ஆங்கிலம் | - | 10 | 10 | - | - | - | - |

| பீடம் | பாடநெறியின் பெயர் | மொழி | உள்வாங்கல் (மாணவர்கள் எண்ணிக்கை) | | தற்போதுள்ள மாணவர்கள் எண்ணிக்கை | பூர்த்திசெய்தோர் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | எம்.எஸ்சி./எம்.பொறியி. / எம்.பிஏ. | | எம்.எஸ்சி./எம்.பொறியி. / எம்.பிஏ. | |
| | | | 2015 | 2016 | | 2015 | 2016 | 2015 | 2016 |
| தகவல் தொழில்நுட்ப பீடம் | எம்.எஸ்சி./பீஜீ செயற்கை புலனாய்வு | ஆங்கிலம் | 12 | 15 | 47 | 04 | 06 | 03 | 01 |
| | பீஜீ கற்கைசார் தகவல் தொழில்நுட்பம் | ஆங்கிலம் | - | - | - | - | - | - | - |
| | எம்.எஸ்சி./பீஜீ தகவல் தொழில்நுட்பம் | ஆங்கிலம் | 31 | 44 | 78 | 03 | 27 | 03 | 01 |
| மொத்தம் | | | **509** | **768** | **2189** | **196** | **252** | **156** | **132** |

குறிப்பு: எம்.எஸ்சி./பொறியி. முதுமாணி/எம்.பி.ஏ. மற்றும் பட்டப்பின்படிப்பு திப்ளோமா கற்கைநெறிகள் என்பன வழக்கமாக பகுதி நேர பாடநெறிகள் என்பதுடன், சாதாரணமாக முறையே இரு வருட, ஒரு வருட காலப்பகுதியைக் கொண்டுள்ளன.

(iii) பட்டமேற்படிப்பு பட்டங்கள் (ஆய்வு சார்பாக)

| பீடம் | உள்வாங்கப்பட்ட மாணவர்கள் எண். | | | | | | தற்போதுள்ள மாணவர்கள் எண்ணிக்கை | | | | | | பட்டம்பெற்றோர் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எம்.எஸ்சி. (M.Sc.) | | எம்.பில். (M.Phil.) | | பீ.எச்டி. (PhD) | | எம்.எஸ்சி. (M.Sc.) | | எம்.பில். (M.Phil.) | | பீ.எச்டி. (PhD) | | எம்.எஸ்சி. (M.Sc.) | | எம்.பில். (M.Phil.) | | பீ.எச்டி. (PhD) | |
| | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 |
| கட்டடக்கலை பீடம் | - | - | - | - | - | - | - | 01 | 15 | 08 | 04 | 06 | - | 01 | 01 | 03 | 01 | 01 |
| பொறியியல் பீடம் | 37 | - | 10 | - | 15 | - | 100 | 77 | 52 | 52 | 61 | 68 | 20 | 14 | 03 | 05 | 04 | 02 |
| தகவல் தொழில்நுட்ப பீடம் | 01 | - | 01 | - | - | - | 01 | 01 | 06 | 04 | 02 | 02 | - | - | - | - | - | - |
| பட்ட மேற்படிப்பு கற்கைகள் பீடம் | - | 45 | - | 32 | - | 13 | - | 77 | - | 43 | - | 30 | - | 04 | - | - | - | - |
| மொத்தம் | **38** | **45** | **11** | **32** | **15** | **13** | **101** | **156** | **73** | **107** | **67** | **106** | **20** | **19** | **04** | **08** | **05** | **03** |

## 4. வெளிநாட்டு மாணவர்கள் பற்றிய விபரம்

### (அ) வெளிநாட்டு பட்டதாரி மாணவர்கள் பற்றிய விபரம் (புலமைப்பரிசிலுடையவர்கள் உட்பட)

(i) வெளிநாட்டு பட்டதாரி மாணவர்கள் பற்றிய விபரம் (100 புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்)

| பீடம் | பாடநெறி | உள்வாங்கல் | | 1ம் வருட மாணவர்கள் | | 2ம் வருட மாணவர்கள் | | 3ம் வருட மாணவர்கள் | | 4ம் வருட மாணவர்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 |
| பொறியியல் பீடம் | பொறியியல் சார் விஞ்ஞான இளமாணி (எம்பீஆர்) | 5 | - | - | 5 | 3 | - | 2 | 3 | 3 | 2 |
| கட்டடக்கலை பீடம் | கட்டடக்கலை இளமாணி | - | - | - | - | 1 | - | - | 1 | - | - |
| | கணிய அளவையியல் சார் விஞ்ஞான இளமாணி | - | - | 1 | - | - | 1 | - | - | - | - |
| | பட்டணமும் நாடும் திட்டமிடல் சார் விஞ்ஞான இளமாணி | - | - | 2 | - | 1 | 2 | - | 1 | - | - |
| **மொத்தம்** | | **5** | **-** | **-** | **5** | **5** | **3** | **2** | **5** | **3** | **2** |

(ii) வெளிநாட்டு பட்டதாரி மாணவர்கள் பற்றிய விபரம் (வெளிநாட்டு தகைமைகளைகொண்ட ஏனைய மாணவர்கள்)

| பீடம் | பாடநெறி | உள்வாங்கல் | | 1ம் வருட மாணவர்கள் | | 2ம் வருட மாணவர்கள் | | 3ம் வருட மாணவர்கள் | | 4ம் வருட மாணவர்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 |
| பொறியியல் பீடம் | பொறியியல் சார் விஞ்ஞான இளமாணி (எம்பீஆர்) | 3 | 1 | 1 | 3 | 3 | 1 | 3 | 3 | - | 3 |
| கட்டடக்கலை பீடம் | கட்டடக்கலை இளமாணி | - | 1 | - | - | - | - | - | - | - | - |
| மொத்தம் | | **3** | **2** | **1** | **3** | **3** | **1** | **3** | **3** | **-** | **3** |

(ஆ) வெளிநாட்டு பட்டமேற்படிப்பு மாணவர்கள் பற்றிய விபரம்

| பீடம் | பாடநெறி | மொழி | மாணவரின் நாடு | உள்வாங்கல் | | தற்போதுள்ள மாணவர்கள் எண்ணிக்கை | | பட்டம்பெற்றோர் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 |
| கட்டடக்கலை பீடம் | எம்.எஸ்சி./பீஜீ திப். கருத்திட்ட முகாமை | ஆங்கிலம் | ஈரான் | 02 | - | 02 | 02 | - | - |
| | | | கொரியா | 01 | - | 01 | 01 | - | - |
| | | | மாலைத்தீவு | - | - | - | 01 | - | - |
| | இடஞ்சார் திட்டமிடல் முகாமையும் வடிவமைப்பும் சார் முதுமாணி | ஆங்கிலம் | அவுஸ்திரேலியா | 02 | - | 02 | - | - | 02 |
| பொறியியல் பீடம் | எம்.எஸ்சி./பீஜீ திப். - நிலைபேறான செயல்முறை அபிவிருத்தி | ஆங்கிலம் | - | - | - | - | - | - | |
| | எம்.எஸ்சி./பீஜீ திப். - கருத்திட்ட முகாமை | ஆங்கிலம் | - | - | - | - | - | - | |
| | எம்.எஸ்சி. கணினி விஞ்ஞானம் | ஆங்கிலம் | மாலைத்தீவு | 01 | - | 01 | - | - | 01 |
| | எம்.எஸ்சி./பீஜீ திப். நீர் வள பொறியியல் மற்றும் முகாமைத்துவம் | ஆங்கிலம் | பூட்டான் | 02 | - | 02 | 03 | - | - |
| | | | ஆப்கானிஸ்தான் | - | - | - | 01 | - | - |
| | | | பாகிஸ்தான் | - | - | - | 01 | | |
| மொத்தம் | | | | **08** | - | **08** | **09** | - | **03** |

## 5. கல்விசார் ஆளணியினர் பற்றிய விபரம்

| பீடம் | சிரேஷ்ட பேராசிரியர் | | பேராசிரியர் | | இணை பேராசிரியர் | | சிரேஷ்ட விரிவுரையாளர் | | விரிவுரையாளர் (மாற்றத்துக்குரிய) | | விரிவுரையாளரர் (தகுதிகாண்) | | கல்விசார் ஒப்பந்த பணியாளர் | | போதனாசிரியர் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 |
| கட்டடக்கலை | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | 41 | 43 | 01 | 01 | 30 | 31 | 15 | 16 | 15 | 6 |
| பொறியியல் | 13 | 13 | 23 | 25 | 04 | 05 | 131 | 141 | 02 | 02 | 55 | 56 | 39 | 36 | 73 | 59 |
| தகவல் தொழில்நுட்பம் | 01 | 01 | - | - | - | - | 16 | 16 | 01 | 01 | 10 | 10 | 03 | 1 | 17 | 16 |
| மொத்தம் | **15** | **15** | **24** | **26** | **05** | **06** | **188** | **200** | **04** | **04** | **95** | **97** | **57** | **53** | **105** | **81** |

| நூலகம் | நூலகர் | | சிரேஷ்ட உதவி நூலகர் தரம் 11 | | சிரேஷ்ட உதவி நூலகர் தரம் 1 | | உதவி நூலகர் தரம் 11 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 |
| நூலக பணியாளர்* | 01 | 01 | 03 | 02 | 01 | 02 | 02 | 02 |
| *மொத்தம் | **01** | **01** | **03** | **02** | **01** | **02** | **02** | **02** |

* கல்விசார் ஆளணி வகையின் கீழ் கணிப்பிடப்பட்டுள்ளனர்

## 6. நிர்வாக ஆளணியினர் பற்றிய விபரம்

| நிர்வாக உத்தியோகத்தர்கள் | பதிவாளர்/நிதியாளர் | | பிரதி பதிவாளர்/ நிதியாளர் | | சிரேஷ்ட உதவி பதிவாளர்/நிதியாளர் | | உதவி பதிவாளர்/ நிதியாளர் | | ஏனைய நிர்வாக உத்தியோகத்தர்கள்* | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 |
| பொது நிர்வாகம் | 01 | 01 | 02 | 02 | 07 | 05 | 02 | 07 | 08 | 06 |
| நிதி நிர்வாகம் | 01 | 01 | - | - | 04 | 04 | - | 02 | - | - |
| மொத்தம் | **02** | **02** | **02** | **02** | **11** | **09** | **02** | **09** | **08** | **06** |

* பிரதி உள்ளக கணக்காய்வாளர், சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் பணிப்பாளர்/ உடற் கல்வி, சுகாதார சேவை உத்தியோகத்தர், வேலை பொறியியலாளர், காப்பாளர், பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர்

## 7. கல்விசாரா ஆளணியினர் பற்றிய விபரம்

| பீடம் / கிளை | சிரேஷ்ட பணியாளர்* | | கனிஷ்ட பணியாளர்** | | சிற்றூழியர்கள் | | ஒப்பந்த பணியாளர்கள்*** | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 |
| கட்டடக்கலை பீடம் | 08 | 09 | 38 | 31 | 20 | 19 | 07 | 01 |
| பொறியியல் பீடம் | 37 | 38 | 78 | 79 | 93 | 86 | 06 | 02 |
| தகவல் தொழில்நுட்ப பீடம் | 03 | 01 | 20 | 18 | 16 | 17 | 05 | 01 |
| பட்டமேற்படிப்பு கற்கை பீடம் | - | - | - | 01 | - | 01 | 02 | 01 |
| மூலதன வேலைகளும், சேவைகளும் | 01 | 01 | 04 | 04 | 01 | 01 | 01 | 01 |
| தொழில் வழிகாட்டல் அலகு | - | - | 01 | 01 | - | - | - | - |
| தகவல் தொழில்நுட்ப நிறுவகம் | 01 | 01 | 02 | 01 | 01 | 01 | - | - |
| மின் விநியோகம் | - | - | 03 | 01 | 02 | 08 | 01 | 01 |
| பரீட்சை சேவைகள் | - | 01 | 12 | 12 | 06 | 06 | 02 | - |
| நிதி நிர்வாகம் | 07 | 07 | 14 | 14 | 04 | 04 | 05 | 04 |
| பொது நிர்வாகம் | 03 | 04 | 25 | 30 | 19 | 16 | 07 | 05 |
| சுகாதார சேவைகள் | - | - | 05 | 05 | 09 | 09 | - | - |
| விடுதிகள் | - | - | 06 | 06 | 09 | 10 | 03 | 02 |
| உள்ளகக் கணக்காய்வு | - | - | 04 | 04 | 01 | 01 | - | - |
| காணியும் கட்டடங்களும் | - | - | 06 | 06 | 28 | 31 | 04 | 01 |

| பீடம் / கிளை | சிரேஷ்ட பணியாளர்* | | கனிஷ்ட பணியாளர்** | | சிற்றூழியர்கள் | | ஒப்பந்த பணியாளர்கள்*** | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 |
| நூலக சேவைகள் | 10 | 10 | 17 | 19 | 11 | 13 | 04 | - |
| உடற்பயிற்சிக் கல்வி | - | - | 01 | 01 | 07 | 07 | 01 | 01 |
| பாதுகாப்பு சேவைகள் | - | - | 03 | 04 | 16 | 12 | - | - |
| களஞ்சியங்களும், விநியோக சேவைகளும் | 01 | 04 | 09 | 07 | 02 | 02 | 01 | - |
| மாணவர், ஊழியர் சேமநலம் | 01 | 02 | 02 | 02 | 01 | 01 | 01 | - |
| போக்குவரத்துச் சேவைகள் | - | - | - | - | 25 | 26 | 07 | 08 |
| நீர் விநியோகம் | - | - | - | - | 09 | 09 | - | - |
| வேலைத் தளம் | - | - | 11 | 08 | 30 | 34 | - | - |
| மொத்தம் | **72** | **79** | **261** | **257** | **310** | **314** | **57** | **28** |

குறிப்பு: கல்விசாரா பணியாளரின் விபரங்கள்

* சிரேஷ்ட கல்விசாரா ஆளணி

** சிற்றூழியர்கள் தவிர்ந்த கல்விசாரா பணியாளர்கள்

*** அனைத்து வகையான ஒப்பந்த கல்விசாரா பணியாளர்கள்

## 08. ஆய்வு கருத்திட்டங்கள் / ஆக்கவுரிமைகள் பற்றிய

### (அ) பொழிப்பு

| பீடம் | நடைபெறும் ஆய்வு கருத்திட்டங்கள் | பூர்த்தியான ஆய்வு கருத்திட்டங்கள் | ஆக்கவுரிமை கோரப்பட்டவை | ஆக்கவுரிமை பெறப்பட்டவை | ஆக்கவுரிமை வணிகமயமாக்கல் |
|---|---|---|---|---|---|
(ii) நியமத்தின் 86 ஆம் பந்தியின் (உ) பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பிலான ஒப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02**

ஏனைய பெறுவனவுகள் ரூபா 23,497,499 மற்றும் ஆய்வு விரிவுரையின் தேறிய பெறுகைகள் ரூபா 13,462,742 ஆகியன நிதிச் செயற்பாட்டிலிருந்து உருவான காசுப் பாய்ச்சலினுள் காசு உட்பாய்ச்சலாக பொய்யாக உள்ளடக்கப்பட்டு காசுப் பாய்ச்சல் கூற்று சமபடுத்தப்பட்டிருந்ததுடன். அந்த வருமானங்களிற்குரிய விபரமான பட்டோலைகள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான திறைசேரி மானியமாக ரூபா 1,353,500,000 கிடைத்திருந்த போதிலும், முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறான பெறவேண்டிய மானியமாக ரூபா 66,947,711 கழிக்கப்பட்டு எஞ்சிய ரூபா 1,286,552,289 தொகை மீளாய்வாண்டிற்கு திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெற்ற மானியம் என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக திறைசேரியடமிருந்து கிடைத்திருந்த தொகையினை விஞ்சி செய்யப்பட்டிருந்த ரூபா 77,406,825 செலவினம் தவறாக மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகையாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழகத்தினால் நடாத்திவரப்படுகின்ற பட்டப்பின் படிப்பு பாடநெறிகள், செயற்திட்டங்கள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான நிதியக் கணக்குகள் செயற்பாடற்றுக் காணப்படுமாயின், பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டுக் கொள்கையின் படி தொடர்புடைய தரப்பினரின் பரிந்துரைகள் மற்றும் ஆளுகைச் சபையின் அங்கீகாரத்துடன் தீர்வுசெய்யப்பட வேண்டிய போதிலும், 03 ஆண்டுகளாக செயற்பாடற்றுக் காணப்படுகின்ற 03 நிதியக் கணக்குகளின் இறுதிச் செலவு மீதியான ரூபா 772,525 கூட்டுத்தொகையினையும், 10 ஆண்டுகளிற்கும் மேலாக செயற்பாடற்றுக் காணப்படுகின்ற 02 நிதியக் கணக்குகளின் இறுதிச் செலவு மீதியான ரூபா 1,940,487 கூட்டுத்தொகையினையும் வருமானமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக அட்டுறு வருமானம் எனக் கணக்கீடு செய்யப்பட்டு நிதி நிலைமைக் கூற்றில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

(ஈ) 14 புலமைப்பரிசில் நிதியங்களிலிருந்து செலுத்தப்பட்டிருந்த ரூபா 219,186 கூட்டுத்தொகையினை புலமைப்பரிசில் நிதியக் கணக்குகளிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் அத்தொகையால் இலாபம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான களஞ்சிய இருப்புக்களின் பெறுமதி ரூபா 19,970,817 ஆனதுடன், பட்டோலையின் படி அந்த மீதி ரூபா 19,334,611 ஆனமையால் ரூபா 636,206 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் படி, முடிவுறா வேலைகளின் பெறுமதி ரூபா 251,323,236 ஆன போதிலும், மூலதன நடவடிக்கைச் சேவைகள் பிரிவின் படி அந்த பெறுமதி ரூபா 235,915,252 ஆனமையால் ரூபா 15,407,985 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இண்மை

பெறுமதி இனங்காணப்பட முடியாத 07 மின்பிறப்பாக்கிகளுடன் தொடர்புடைய சொத்துப் பதிவேடு மற்றும் பேணுதல் கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் 11 பதவியணியினரிடமிருந்து அறவிடப்படாது காணப்படுகின்ற இடர் கடன் மீதி ரூபா 889,347 ஆக இருந்ததுடன், அதில் 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட மீதியான ரூபா 45,630 கூட்டுத்தொகையும் 05 ஆண்டுகளிற்கும் 10 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட மீதியான ரூபா 145,775 கூட்டுத்தொகையும் 1 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட மீதியான ரூபா 209,666 கூட்டுத்தொகையும் உள்ளடங்கியிருந்தது. அவ்வாறே சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறைகளை அங்கீகரிக்கையில் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.18.1 ஆம் பிரிவின் படி செயற்பட்டிராமை காரணமாக 07 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 613,508 தொகை மேற்படி கடன் மீதியில் உள்ளடங்கியிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) (i) கற்கை விடுமுறைகளைப் பெற்று வெளிநாடுகளிற்குச் சென்றிருந்த 31 விரிவுரையாளர்கள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் குறித்த உடன்படிக்கைகளை முறித்துக் கொண்டிருந்ததுடன், அவர்களில் இருவரினால் உடன்படிக்கைகள் முறிக்கப்பட்டு முறையே 21 மாதங்கள் மற்றும் 24 மாதங்கள் கடந்திருந்த போதிலும், அவர்களிடமிருந்து அறவிடவேண்டிய தொகை கணிப்பிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன், ரூபா 37,804,927 அறவிடப்பட வேண்டிய எஞ்சிய 29 விரிவுரையாளர்களிடையே 05 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 8,933,162 கூட்டுத்தொகையினை அறவிடுவதற்காக மாத்திரம் வழக்குத் தொடரப்பட்டிருந்ததுடன், எஞ்சிய 24 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 28,871,765 தொகையினை அறவிடுவதற்காக போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கற்கை விடுமுறைகளைப் பெற்று 1989 ஆம் ஆண்டில் வெளிநாடு சென்றிருந்த விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,122,267 இனை அறவிடுவதற்காக தொடரப்பட்டிருந்த வழக்குத் தீர்ப்பின்

பிரகாரம், பல்கலைக்கழகத்தினால் இரண்டாவது தடவையாக விரிவுரையாளர்களிற்கு வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்குகையில் உரியவாறு நிர்வாக நடைமுறைகளைப் பின்பற்றியிருக்காமை காரணமாக தண்டப்பணத்திற்கு உட்பட்டு முறைப்பாடு வலுவிழக்கச் செய்யப்பட்டிருந்தது. வழக்குத் தீர்ப்பின் பிரகாரம், உடன்படிக்கைகளை முறித்துக் கொண்டமை சம்பந்தமாக ரூபா 703,311 மற்றும் செலவிடப்பட்ட வழக்குக் கட்டணம் ரூபா 117,300 என்ற வகையில் ரூபா 820,611 இனை பல்கலைக்கழகத்திற்குச் செலுத்துதல் வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, நிதிப்பிரமாணம் 156 இன் பிரகாரம் உத்தியோகத்தாரின் கவனயீனம், தாமதம், தவறிழைப்பு காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்த இழப்பு தொடர்பில் அந்த உத்தியோகத்தர் தனிப்பட்ட முறையில் பொறுப்புக்கூற வேண்டிய போதிலும், பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவர்களிடமிருந்து அத் தொகையினை அறவிடுவதற்கு 2017 யூன் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட விரிவுரையாளர்களிடையே உடன்படிக்கைகளை முறித்துக்கொண்டிருந்த 10 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையினை பல்கலைக்கழக சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு, இணக்கம் தெரிவித்து கடிதங்கள் வழங்கியிருந்த போதிலும், அதற்குரித்தான ரூபா 8,136,685 கூட்டுத்தொகை 01 ஆண்டு முதல் 16 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அப் பணத்தினை அறவிடுவதற்கு 2017 யூன் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 756 மற்றும் தேசிய நூலகங்கள் ஆவணமாக்கல் சேவைகள் சபையினது தலைவரின் 2004/சுச/1 ஆம் இலக்க 2004 சனவரி 26 ஆந் திகதிய அறிவுறுத்தல் சுற்றிக்கை | நூலகப் புத்தகங்கள் தொடர்பில் 2013 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பொருள் மெய்மைய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | (i) குறித்த பணி நிறைவேற்றப்பட்டவுடன் முற்பணங்கள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 06 சந்தர்ப்பங்களில் பெறப்பட்டிருந்த ரூபா 197,829 கூட்டுத்தொகையான முற்பணங்களை தீர்ப்பதற்காக 13 முதல் 33 வரையிலான நாட்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தன. |

(ii) குறித்த பணிகளிற்காக எதிர்பார்க்கப்பட்ட செலவினத்தை சரியாக மதிப்பீடு செய்திருக்காமை காரணமாக 06 சந்தர்ப்பங்களில் தேவையான தொகையினை விஞ்சி ரூபா 206,704 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 229,602,809 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 220,259,676 ஆனமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டின் நிதிசார் விளைவு ரூபா 9,343,133 இனால் பின்னடைந்திருந்தது. வருமானம் ரூபா 449,233,561 இனால் அதிகரித்திருந்த போதிலும், செலவினம் ரூபா 458,576,694 இனால் அதிகரித்தமையே மேற்கூறப்பட்ட பின்னடைவிற்கு பிரதான காரணமாக காணப்பட்டது.

மீளாய்வாண்டு மற்றும் முன்யை 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது நிதி விளைவுகளில் தொடர்ச்சியான வீழ்ச்சி ஏற்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 64,407,671 தொகையான பற்றாக்குறை 2016 ஆம் ஆண்டில் ரூபா 229,602,809 ஆக மாற்றமடைந்திருந்தது. இருப்பினும், நிதி விளைவிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றை சீராக்கியதன் பின்னர் பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு சாதகமான பெறுமதியினைக் கொண்டிருந்ததுடன், 2012 ஆம் ஆண்டில் ரூபா 665,988,174 ஆகக் காணப்பட்ட அப் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,248,780,499 வரை வளர்ச்சியடைந்திருந்தது.

### 3.2 நிறுவனத்தினாலும் நிறுவனத்திற்கு எதிராகவும் ஆரம்பிக்கப்பட்டிருந்த சட்டரீதியான சம்பவங்கள்

பல்கலைக்கழகத்தினால் வெளிவாரி நிறுவனங்களிற்கு எதிராக ரூபா 05 மில்லியன் இழப்பீட்டினைக் கோரி மொரட்டுவ மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன், அந்த வழக்கின் எதிராளிகளால் அந்த வழக்குத் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, 05 வெளிவாரி மற்றும் உள்வாரி தரப்பினர்களால் பல்கலைக்கழகத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பல்கலைக்கழகத்தின் பிரதான குறிக்கோள்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- உயர் கல்வியில் சிறப்புமிக்க நிலையம் என்ற சர்வதேச ரீதியிலான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல்.
- தேசிய பொருத்தப்பாடுடைய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள், புத்தாக்கங்கள் மற்றும் புதிய படைப்புக்கள் மூலம் சிறந்த நிலையினைப் பெற்றுக்கொள்ளல்.

- தேசிய தேவைப்பாடுகள் மற்றும் தொழில்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் விதத்தில் கல்வியினை வழங்கும் முன்னனி பல்கலைக்கழகமொன்றாதல்.

- அதன் செயற்பாடுகளில் சிறந்த நிலையினை அடைந்துகொள்வதற்காக அறிவியல், பௌதீக மற்றும் சமூக சுற்றாடலொன்றை தோற்றுவித்தல்.

- மானிட உயர் சமூகம், ஒளிமயமான பல்கலைக்கழகம் மற்றும் மாற்றமடைகின்ற சமூகம் என்ற சவால்களை எதிர்கொள்வதற்கேற்ற மனோபாவமுடைய புத்தாக்க மற்றும் திருப்திமிக்க பதவியணியினரையும் மாணவர்களையும் உருவாக்குதல்.

- உயர் தொழில்நுட்பம் மற்றும் ஏனைய நிபுணத்துவ சேவைகள் தொடர்பில் முன்னனி உசாத்துணை சேவை வழங்குனராதல்.

- இலங்கையின் அனைத்து தொடர்புடைய துறைகள் மற்றும் உயர் / தொழிற் கல்வியில் கொள்கைகளை வகுக்கையிலும் தேசிய அபிவிருத்தியிலும் அரசாங்கத்திற்கு ஆலோசகராக உருவாகுதல்.

- தரக் கட்டுப்பாடு மற்றும் வினைத்திறனான நிறுவனக் கட்டுப்பாட்டிற்காக பொறிமுறையொன்றை நிறுவனமயமாக்குதல்.

மேற்படி குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் கீழ் கல்வி நடவடிக்கைகளை விரிவுபடுத்து விளையாட்டுத் தொகுதியினை நிர்மாணிப்பதற்காக இரண்டு காணிகளை சுவீகரிப்பதற்கு ரூபா 1,700 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அக் காணிகளை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013/2014 ஆம் கல்வியாண்டில் 7 பாடநெறிகளிற்கு 52 மாணவர்கள் வெற்றிடங்களும் 2014/2015 ஆம் கல்வியாண்டில் 8 பாடநெறிகளிற்கு 47 வெற்றிடங்களும் 2015/2016 ஆம் கல்வியாண்டில் 8 பாடநெறிகளிற்கு 57 வெற்றிடங்களும் காணப்பட்டன.

(இ) (i) 2016 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, புதிதாக பாடநெறிகளை ஆரம்பிப்பதற்காக பல்கலைக்கழகத்தின் 04 பீடங்களின் 07 துறைகளிற்கு ரூபா 155 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், பொறியியல் பீடத்தில் புதிய 02 உள்ளகப் பாடநெறி விடயங்கள் மாத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன், ஏனைய பீடங்களில் எந்தவொரு உள்ளகப் பாடநெறி விடயங்களும் மீளாய்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) பொறியியல், வாஸ்து விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் பட்டக் கல்வி ஆகிய 04 பீடங்களில் 07, 04, 02 மற்றும் ஒரு பட்டப் பின்படிப்பு பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் பொறியியல் பீடத்தில் மாத்திரம் ஒரு பட்டப்பின் படிப்பு பாடநெறி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மாணவர்களை மையமாகக் கொண்ட கல்வியினுள் மாணவர்களின் அறிவு ஆய்விற்குக் காணப்படுகின்ற வசதி வாய்ப்புக்களை விருத்தி செய்யும் நோக்கில் 2016 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நூலக இடவசதியினை மேம்படுத்தி, நூலகப் புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கும் இலத்திரனியல் கற்பித்தல் வசதிகளை முன்னேற்றுவதற்குமாக ரூபா 42 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், செய்யப்பட்டிருந்த உள்ளபடியான செலவினம் ரூபா 9.25 மில்லியனாகும். மேலும், ஏனைய நூலகங்களுடனான வலைப்பின்னல் தொடர்பினை முன்னேற்றுவதற்காக ரூபா 05 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், குறித்த பணி நிறைவேற்றப்பட்டிருக்காமை காரணமாக நூலக வசதியினை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த பங்களிப்பு குறைவான மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(உ) ஆராய்ச்சிகளை மேற்கொள்வதன் மூலம் புத்தாக்கங்களையும் பதிய படைப்புக்களையும் மேம்படுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் செயற்படு நிலையிலிருந்த 92 ஆய்வுகளிடையே ரூபா 12,001,110 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த 16 ஆய்வுகள் பூரணப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதி மீளாய்வாண்டுடன் முடிவடைந்திருந்தது. அத்துடன், 2016 ஆம் ஆண்டில் 63 ஆய்வுகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 45 மில்லியன் நிதி ஏற்பாட்டில் 77 சதவீதம் அல்லது ரூபா 34,709,255 அதற்காக செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) ஆய்வுகளை நடைமுறைப்படுத்துவதற்கு முடியாது போயிருந்தமையால் இரத்துச் செய்தல் அல்லது விலக்கிக்கொள்ளல் இடம்பெற்றிருந்த 03 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், அதற்காக 03 ஆண்டுகளிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட காலம் எடுக்கப்பட்டிருந்தமை காரணமாக அந்த ஆய்வுகளை மேற்கொள்வதற்கிருந்த சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்தன.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

நூலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் புத்தகங்களை குறித்த காலத்தில் மீண்டும் கையளித்திருக்காமையால் பல்கலைக்கழக பதவியணியினரிடமிருந்து தண்டப்பணம் அறவிடப்படாதிருந்ததுடன் புத்தகங்களை மீளக் கையளித்திருக்காத பதவியணியினருக்கு மீண்டும் புத்தகங்கள் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 4.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழக மாணவர்களிற்கு புலமைப்பரிசில் வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட ரூபா 5,259,288 கூட்டுத்தொகையினைக் கொண்ட 36 நிதியத்திலிருந்து எந்த ஒரு புலமைப்பரிசிலையும் கடந்த 05 ஆண்டுகளின் போது மாணவர்களிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், புலமைப்பரிசில் நிதியத்திலிருந்து நியாயமான அடிப்படையொன்றின் கீழ் புலமைப்பரிசில்களை வழங்குத் தேவையான நியதிகளை உள்ளடக்கிய நிரந்தர கொள்கையொன்றை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 26 திணைக்கள அபிவிருத்தி நிதியங்களில் 17 நிதியங்களிற்காக மீளாய்வாண்டில் எவ்வித நிதி ஏற்பாடுகளும் கிடைக்காதிருந்ததுடன், 09 நிதியங்களிற்காக ரூபா 8,642,678 கூட்டுத்தொகை கிடைத்திருந்தது. அதற்கமைய, 2016 திசெம்பர் 31 இல்

உள்ளவாறான மீதி ரூபா 14,359,476 ஆக காணப்பட்டதுடன், அந்த நிதியங்கள் திணைக்களத்தின் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காகவும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பதவியணியினர் மற்றும் மாணவர்களது செயற்பாடுகள். ஆய்வுகூட மற்றும் திணைக்கள உபகரணங்கள் அத்துடன் திணைக்கள வேலைகளின் கீழ் செலவு செய்யும் நோக்குடன் பேணிவரப்படுகின்ற 18 பாடநெறி அபிவிருத்தி நிதியங்களின் மீதிகளின் மொத்தம் ரூபா 5,056,707 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் 08 நிதியங்களிற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,605,399 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடுகள் கிடைத்திருந்தன. அதற்கமைய, 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,662,106 கூட்டுத்தொகையான மீதி காணப்பட்டதுடன், மீளாய்வாண்டில் அந்த நிதியங்கள் எந்தவொரு திணைக்கள அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காகவும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பேணுகைப் பிரிவின் கீழ் செயற்பாட்டு நிலையிலுள்ள பிரதான 07 மின்பிறப்பாக்கி இயந்திரங்களில் 04 இனை தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தியதில் சில மாதங்களில் உச்ச அளவில் மின்சாரம் நுகரப்பட்டிருந்த நாட்களில் செலவாகியிருந்த மின்சார அலகுகளை கருத்திற்கொள்ளாது சிறிய அளவில் மின்சார இயலளவு தேவைப்படுகின்ற இடங்களில் பாரிய இயலளவுடைய மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்தன. அதற்கமைய, 2016 ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்ப கட்டிடத்திற்காக பொருத்தப்பட்டிருந்த மின் பிறப்பாக்கியிலிருந்து 62 சதவீத மின்சார இயலளவும் புதிய விடுதிக்காக பொருத்தப்பட்டிருந்த மின் பிறப்பாக்கியிலிருந்து 83 சதவீத மின்சார இயலளவும் வேலைகள் பிரிவில் பொருத்தப்பட்டிருந்த மின் பிறப்பாக்கியிலிருந்து 29 சதவீத மின்சார இயலளவும் வீணாகியிருந்ததுடன், இந்த வீணாகின்ற இயலளவினை பயன்பாட்டிற்கு எடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பேணுகைப் பிரிவின் களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 274,387 பெறுமதியுடைய 356 லீற்றர் வர்ணப்பூச்சு மற்றும் பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்காத 110 லீற்றர் வர்ணப்பூச்சு காலாவதியாகியிருந்தன.

## 4.5 தாமதமடைந்த செயற்திட்டங்கள்

முடிவுறாத வேலைகளின் பெறுமதியில் உள்ளடங்கியிருந்த ரூபா 1,273,329 தொகையான "உத்தேச பன்நோக்கு கேட்போர்கூடம்" (Proposed Multipurpose Auditorium) இனை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

பல்கலைக்கழகத்தின் அங்கிகரிக்கப்பட்ட கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியில் முறையே 68 மற்றும் 56 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், ஒரு களஞ்சிய காப்பாளர் பதவி மேலதிகமாகக் காணப்பட்டது.

## 4.7 கொள்வனவு நடைமுறை

புதிய சிற்றுண்டிச்சாலை தொகுதி 2015 நவம்பர் 24 ஆந் திகதி திறந்துவைக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குத் தேவையான நாற்காலிகள் மற்றும் மேசைகள் என்பன அரசாங்க

கொள்வனவு வழிகாட்டல்களிலிருந்து விலகித் தெரிவு செய்யப்பட்டிருந்த நிறுவனத்திடமிருந்து வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்தன. அதன்படி, 2016 மார்ச் 23 ஆந் திகதி வரையிலான 04 மாதங்களிற்காக பிளாத்திக்கு நாற்காலி ஒன்று ரூபா 20 வீதம் 240 நாற்காலிகளையும் பிளாத்திக்கு மேசை ஒன்று ரூபா 40 வீதம் 50 மேசைகளையும் பெற்றுக்கொண்டமைக்காக தனியார் கம்பனிக்கு ரூபா 745,920 செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம், ஆண்டிற்குரிய நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனக்கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் விபரங்கள், குறித்த ஆண்டிற்கான பாதீடு கொள்வனவுத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வும் திட்டம் எனபன 2016 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர், கணக்காய்வு உதவியாளர், மூன்று கணக்காய்வு எழுதுவினைஞர், கணனி தரவு உள்ளீட்டாளர் மற்றும் தொழிலாளர் ஒருவர் ஆகியோரைக் கொண்டதாகக் காணப்பட்டது. இவர்களில் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் கணக்காய்வு உதவியாளர் தவிர்ந்த ஏனையோர் கணக்காய்வு தொடர்பான தொழில்சார் திறன் கொண்டோராகக் காணப்படவில்லை.

### 5.3 தீர்வு காணப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்

2014 நவம்பர் 20 ஆந் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் குழுவினால் பல்கலைக்கழகத்தில் தாபிக்கப்பட்டுள்ள யுனி கன்சல்டன்சி சேர்விஸ் கம்பனி 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்திற்கு முரணாக தாபிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்காக அமைச்சரவையின் ஒத்திசைவு பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அதற்கமைய, அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் இணங்கியிருந்த போதிலும், 2017 மே 29 ஆந் திகதி வரையிலும், அவ்வாறான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், பல்கலைக்கழகத்தினால் மீளாய்வாண்டில் முகாமைத்துவக் கட்டணமாக ரூபா 3,640,142 தொகையும் முகாமைத்துவ தொழில்நுட்ப வணிக நிர்வாக பட்டப்பின் படிப்பு பாடநெறிக்காக (MBA in Management Technology) ரூபா 299,415 தொகையும் என்ற வகையில் ரூபா 3,939,557 கன்சல்டன்சி சேர்விஸ் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 15 சதவீதம் முதல் 23 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) நிலையான சொத்துக்கள் பதிவேடு சரியான குறியீட்டு இலக்கங்களின் கீழ் பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிறுவனத்திற்குரிய சொத்துக்கள் பயனுள்ள விதத்தில் பயன்படுத்தப்பட்டிருக்காமை |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | ஒவ்வொரு பணிக்குமாக உரிய விதத்தில் திட்டமிடப்பட்ட பாதீட்டு எதிர்கூறல்கள் தயாரிக்கப்பட்டிருக்காமை |
| (இ) நிதியங்களின் முகாமைத்துவம் | நிதியங்களை ஏற்படுத்திய நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை. |
| (ஈ) களஞ்சிய கட்டுப்பாடு | (i) பொருட்களை கொள்வனவு செய்யும் நடைமுறையின் போது ஆரம்பம் முதல் இறுதியில் பொருட்கள் வழங்கப்படுதல் வரையிலான அனைத்துப் பொருட்களும் களஞ்சியக் காப்பாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தமை. |
| | (ii) களஞ்சியப் புத்தங்கள் மற்றும் கொள்கல அட்டைகளை நாளதுவரையாக பேணியிருக்காமை மற்றும் முறையான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்காமை. |
| | (iii) களஞ்சியக் காப்பாளருக்கு களஞ்சியத்திற்குரிய பணிகள் மாத்திரம் ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும், கடமைப் பட்டியலின் படி பொருட்களை கொள்வனவு செய்தலுடன் தொடர்புடைய பணிகளும் ஒப்படைக்கப்பட்டிருந்தமை |
| (உ) பதவியணியினர் நிர்வாகம் | வெற்றிடமான பதவிகளிற்காக ஆட்சேர்ப்பு இடம்பெற்றிருக்காமை |
| (ஊ) கொள்வனவு நடைமுறைகள் | கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் ஏற்பாடுகளை பின்பற்றியிருக்காமை |
| (எ) நூலக நிர்வாகம் | நூலகப் புத்தகங்கள் தொடர்பில் சுற்றறிக்கை ஏற்பாடுகளை பின்பற்றியிருக்காமை |

**ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

දුරකථන අංක
தொலைபேசி இல
Telephone Nos.

උප කුලපති
உப வேந்தர்
Vice-Chancellor } 2651259

කාර්යාලය
காரியாலயம்
Office } 2650188 2650301 2650340 2650441 2650534

Fax No' } 2650622 2651671

මොරටුව විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
மொறட்டுவைப் பல்கலைக்கழகம், இலங்கை
UNIVERSITY OF MORATUWA, SRI LANKA

මගේ අංකය
எனது இல
My No. }

ඔබේ අංකය
உமது இல
Your No. }

මොරටුව
மொறட்டுவை
Moratuwa


දිනය
திகதி
Date } 2018.06.11

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
இல. 306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்லை.

<u>மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் 2016 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி அறிக்கைகள் தொடர்பாக 1978 ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 108(1) உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.</u>

மேற்படி விடயம் சம்பந்தமாக தங்களது இலக்கம் எச்ஈடீ/சி/யூஓஎம்/6/16/22 மற்றும் 2017 நவம்பர் 10ஆம் திகதியும் கொண்ட கணக்காய்வு அறிக்கையுடன் தொடர்பானது.

மேற்படி அறிக்கை தொடர்பாக பல்கலைக்கழகத்தின் மூலம் இதுவரை எடுக்கப்பட்டுள்ள மற்றும் எடுப்பதற்கு உத்தேசித்துள்ள செயற்பாடுகளை கீழே குறிப்பிடுகின்றேன்.

2. **நிதிக்கூற்றுக்கள்**

2.2. **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.2.1 **இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம்**

(அ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் இல. 07

இந்த சொத்துக்கள் சார் மீள்மதிப்பீடு 2013.09.17 திகதி அரசாங்க விலை மதிப்புத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்களால் அம் மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டு பிரதான காணியை தவிர ஏனைய சொத்துக்கள் தொடர்பான இறுதி மீள்மதிப்பீட்டு அறிக்கை தற்போது வழங்கப்பட்டுள்ளது. அப் புதிய மீள்மதிப்பீட்டு பெறுமதிகளை கணக்குகளில் பதியும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ii) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 86 ஆவது பிரிவின் (உ) பந்திக்கேற்ப பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் தொடர்பான ஒப்பீட்டு உப அட்டவணையொன்றாக அரச கணக்காய்வுப் பிரிவிடம் 2017.02.28 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) காசுப் பாய்ச்சல் கூற்றில் ஏனைய விடயங்கள் (தலைப்பின்) கீழ் காட்டப்படவேண்டிய பெறுமதி இவ்வாறு காட்டப்பட்டுள்ளதுடன், சரியாக சீராக்கம் செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று 2017.09.15 திகதி அரசாங்க கணக்காய்வுப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) தங்களால் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு குறிப்பு இல. 14 இற்கு உரிய செலவிடப்படாத மூலதன கணக்கை சீராக்கும் வகையில் காட்டப்பட்டுள்ள பெறுமதியாகும். ஆனாலும், மூலதன மானியமாக கிடைத்துள்ள ரூ. 1,353,500,000 பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றிலும் நிதி விநியோக அட்டவணையிலும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. கணக்கு குறிப்பு இல.14 செலவிடப்படாத மூலதன கணக்கை வெளிப்படுத்தும் முறையானது முந்திய வருடத்திலிருந்து பயன்படுத்தப்பட்ட மாதிரி என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஆ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் இல. 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டு எடுகோள்களில் ஒன்றான தொடர்ந்திருத்தல் பற்றிய எண்ணக்கரு மற்றும் நிதி அறிக்கையிடலில் அடிப்படை தரம் சார் இயல்பொன்றான தோற்றத்திலும் பார்க்க் கருத்து முக்கியமெனும் எண்ணக்கரு ஆகியவற்றுக்கேற்ப மூலதன மானியத்தை விட மேலதிகமாக செலவிடப்பட்ட தொகை இவ்வாறு திறைசேரியிலிருந்து கிடைக்க வேண்டிய பெறுமதியொன்றாக காட்டப்பட்டுள்ளது. நிதி அறிக்கையிடல் மூலம் கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார கொடுக்கல் வாங்கல் மற்றும் நிகழ்வுகளின் பெறுபேறுகள் வெளிப்படுத்தப்படுவதுடன், அதற்கிணங்க இப் பெறுமதி கிடைக்கவேண்டிய பெறுமதியொன்றாக காட்டப்பட்டுள்ளது. எனவே தங்களது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உண்மையற்ற வெளிப்படுத்தல் அதன் மூலம் வெளிக்காட்டப்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(இ) 03 வருடங்களாக செயல்பாடின்றி காணப்படும் நிதியங்கள் கணக்கு 03 இன் இறுதி செலவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூ. 772,525/-.

இக் கணக்குகள் 03 இல், 02 கணக்குகளுக்குரிய மீதிகள் தற்போது செலுத்தி தீர்க்கப்பட்டுள்ளது. அதேபோல் இற்குரிய OA-ZK-62 இற்குரிய Training Programme on Designing Main & Troubleshooting of Automated Sys. Based on Programme Logic Control பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 2017 ஆண்டில் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதாக அப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளதால் அக் கணக்கு தீர்க்கப்படவில்லை.

10 வருடங்களுக்கும் மேற்பட்ட காலப்பகுதி முதல் செயல்பாடின்றி காணப்படும் நிதியங்கள் கணக்கு 02 இன் இறுதி செலவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூ. 1,940,487/-

கணக்குகள் 02 இற்குரிய ரூ. 1,940,487/- மீதிகள் என தங்களது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தாலும் அது ஒரு கணக்குக்குரிய மீதி என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். தற்போது அம் மீதியும் தீர்க்கப்பட்டுள்ளது.

(ஈ) 2017 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளது. 2016 ஆண்டின் இறுதிக் கணக்குகள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தினாலும் அதன் கணியரீதியான தன்மை மிகவும் குறைவு என்பதை தொிவித்துக்கொள்கின்றேன்.

2.2.3 தெளிவுபடுத்தப்படாத வேறுபாடுகள்

(அ) 2017.01.01 திகதி முதல் இருப்பு கணக்கெடுப்பு மேற்கொள்ப்பட்ட திகதி வரை வழங்கப்பட்ட ஆனாலும் 2016.12.31 திகதிய இருப்பில் உள்ளடக்கப்படவேண்டிய பொருட்கள் (இருப்பு) பெறுமதி கணக்காய்வுச் பிரிவினருக்கு வழங்கப்பட்டிருந்த இருப்பு அறிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்ததே இவ் வேறுபாட்டுக்கான காரணமாக இருந்ததுடன், அப் பெறுமதியையும் உள்ளடக்கிய இருப்பு கணிப்பீட்டு அறிக்கை 2017.09.15 ஆம் திகதி அரசாங்க கணக்காய்வுப் பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டிலிருந்து சகல சீராக்கல்களும் செய்யப்பட்டதன் பின்பு இறுதி கணிப்பீட்டு அறிக்கையை அரசாங்க கணக்காய்வுப் பிரிவினருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) Faculty of Architecture (phase II) கருத்திட்டத்திற்குரிய முடிவுறாத வேலைகளின் பெறுமதியைத் தவிர ஏனைய கருத்திட்டங்களின் முடிவுறாத வேலைகளின் பெறுமதி சரியாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன. Faculty of Architecture (phase II) கருத்திட்டத்தின் முடிவுறாத வேலைகளின் பெறுமதியில் ரூ. 2,963,472 கூடுதலாக கணிப்பிடப்பட்டிருந்ததுடன், தற்போது அது திருத்தப்பட்டுள்ளது.

2.2.4 **கணக்காய்வுக்கான சான்றுகள் இல்லாமை**

இக் கோவைகளை மிக விரைவாக கணக்காய்வுப் பிரிவினருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன், எதிர்காலத்தில் இது தொடர்பாக சரியான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

2.3. பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

(அ) இவ் உத்தியோகத்தர்கள் 11 போிில், ஒருவரிடமிருந்து பெறவேண்டிய ரூ. 145,775 ஆன நிலுவை தற்போது முழுமையாக அறவிடப்பட்டுள்ளது. மேலும் இருவர் தற்போது மீண்டும் சேவைக்கு வருகை தந்துள்ளதுடன், அதற்கிணங்க அவர்களிடமிருந்து அறவிடவேண்டிய நிலுவைகள் மாதாந்த தவணை அடிப்படையில் குறைத்துக் கொள்ளப்படுகின்றது. மிகுதி உத்தியோகத்தர்கள் 8 போிில், மூவர் சம்பளமற்ற விடுமுறையில் இருப்பதுடன், அவர்கள் மீண்டும் சேவைக்கு வருகை

தந்ததன் பின்பு சம்பளம் தயாரிக்கும்போது அந் நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன், மிகுதி உத்தியோகத்தர்களில் இரண்டு உத்தியோகத்தர்கள் சேவையை விட்டு விலகிச் சென்றுள்ளதாக கருதப்பட்டுள்ளதுடன், இன்னும் இரு உத்தியோகத்தர்களின் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஏனைய உத்தியோகத்தர் சேவையிலிருந்து விலகியுள்ளார்.

மேற்படி உத்தியோகத்தரின் பல்கலைக்கழக சேமலாப நிதி விடுவிப்புச் செய்யப்படாததுடன், அதை விடுவிப்புச் செய்யும் சந்தர்ப்பத்தில் இந் நிலுவையை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், தற்போது சம்பளமற்ற விடுமுறை அங்கீகரிக்கப்படும் போது தாபனக்கோவையின் XXIV பிரிக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ)(i) உடன்படிக்கையை மீறிய விரிவுரையாளர்கள் இருவரிடமிருந்து அறவிடவேண்டிய பெறுமதிகள் கணக்கிடப்படாமையானது திருத்தப்பட்டுள்ளதுடன், அப் பெறுமதி ரூ.6,850,964.68 என மதிப்பிடப்பட்டுள்ளது. இது தவிர மிகுதி விரிவுரையாளர்கள் 29 பேரில், ஐந்து பேருக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், மிகுதி 24 பேரிடமிருந்து இன்னும் அறவீடு செய்ய எஞ்சியுள்ளது ரூ. 28 மில்லியனுக்கு கிட்டிய தொகை மாத்திரம் என்பதுடன், அவற்றையும் விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

(ii) பொறுப்புக்கூறவேண்டிய தரப்பினர் தற்போது பல்கலைக்கழக முறைமையிலிருந்து விலகிச் சென்றுள்ளதுடன், தற்போது அவ் விரிவுரையாளரும் மனநோயினால் பாதிக்கப்பட்டுள்ளதனால், அறவிடவேண்டிய ஒப்பந்தப் பெறுமதியை நீக்கி விடுவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படுகின்றது.

(iii) பல்கலைக்கழக சேமலாப நிதியிலிருந்து அறவீடு செய்வதற்கு இணக்கத்தை தெரிவித்து கடிதங்களை வழங்கியுள்ள விரிவுரையாளர்கள் 11 பேரிடமிருந்து அறவிடவேண்டிய ரூ. 18,282,652 தொகையில், 2018.03.31 ஆம் திகதி வரை ரூ. 8,902,267 ஆன தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், மிகுதி ரூ. 9,380,385 ஆன தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

**2.4. சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணங்காதிருத்தல்.**

(அ) நூலகத்தின் வசமுள்ள மீள்மதிப்பீடு செய்யப்பட்ட புத்தகங்கள் வருடாந்தம் கணக்கெடுப்பு செய்யப்படவேண்டியுள்ள போதிலும், அக் கணக்கெடுப்பை செய்வதற்காக நூலகத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்கு மூடிவைப்பது அத்தியாவசியமான விடயமாகும். எனினும் மாணவர்களது கல்வி நடவடிக்கைகள், பரீட்சை நடவடிக்கைகள் மற்றும் வாசிப்பு வாரம் (Reading Week) போன்றவற்றினால் நூலகத்தை தொடர்ச்சியாக திறந்து வைக்கவேண்டியேற்பட்டுள்ளதால் கணக்கெடுப்பை மேற்கொள்வதற்காக காலப்பகுதியொன்றை பெற்றுக்கொள்வது கடினமான விடயமொன்றாக ஆகியுள்ளது.

அதனால், பல்கலைக்கழக கல்விசார் கால அட்டவணையில்(Academic Calender) அதற்காக குறைந்தபட்சம் ஒரு மாத குறிப்பிட்ட காலப்பகுதியையாவது பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறான வசதி ஏற்படுத்தப்பட்டதும் புத்தகம் சம்பந்தமான கணக்கெடுப்பைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ)(i) முற்பணத்தை 14 நாட்களில் கொடுத்து தீர்க்குமாறு உத்தியோகத்தர்களுக்கும் பணியாளர்களுக்கும் வேண்டிய ஆலோனைகள் வழங்கப்பட்டுள்ளது. தற்போது முழுமையான வகையில் முற்பணங்களை செலுத்தி தீர்ப்பதில் தாமதம் இல்லையென்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(ii) இது தொடர்பாக உரிய பணியாளர்களுக்கு அறிவூட்டப்பட்டுள்ளதுடன், அவ்வாறான நிலைமையின் போது அதற்கான காரணத்தை தெளிவுபடுத்தி உரிய பிரிவுத் தலைவரது சிபாரிசு மற்றும் உப வேந்தர் அவர்களது அங்கீகாரம் ஆகியவற்றை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் அத்தகைய நிலைமைகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

(i) இணங்குகின்றேன்.

**3.2 நிறுவகத்தின் மூலம் மற்றும் நிறுவகத்திற்கு எதிராக தொடரப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்**

பல்கலைக்கழகம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சட்டம்சார் நடவடிக்கைகள் எழாதவாறு செயலாற்றுவதுடன், இருப்பினும் இவ்வாறான சட்டம்சார்ந்த சம்பவங்கள் எழுந்துள்ளன. இந்த வழக்கு அலுவல்களை முடிவுக்கு கொண்டுவருவதற்கு அதிக காலம் செல்கின்றது. எனினும் தற்போது ஒரு வழக்கு முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. ஒரு வழக்கு தொடாந்து நடாத்திச்செல்ல இயலாத வழக்காகும். ஒரு வழக்கு உயர் நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதுடன், இரண்டு வழக்கு நடவடிக்கைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1. செயலாற்றல்.**

(அ) ரூ. 1700 மில்லியன் பெறுமதிக்கு மதிப்பிடப்பட்டிருந்த காணி, உரிமையாளரினால் தற்போது இலங்கை முதலீட்டுச் சபையுடன் இணைந்து இந்த இடத்தில் வேறு வியாபார நடவடிக்கையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதனால் மேற்படி காணியை பல்கலைக்கழகத்திற்கு வழங்க முடியாதென தெரிவிக்கப்பட்டுள்ளது. (வாய்மூலம்) இந்தக் காணியை பெற்றுக்கொள்வதற்கு பல்கலைக்கழகம் இயலுமான எல்லா முயற்சிகளையும் எடுத்ததுடன், அதற்காக சனாதிபதியின் செயலகம் தலையிட்டபோதிலும் விலைமதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் இக் காணிக்கு வழங்கப்பட்ட விலைமதிப்பு பெறுமதிக்கு அதன் உரிமையாளரான கொரியா நாட்டு கம்பனி இணங்காததனால் கொள்வனவு சார் அலுவல்களை மேற்கொண்டு எடுத்துச்செல்ல முடியாதுள்ளது. எனினும், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் இக் காணியை கையேற்பதற்கான பணிகள் செயற்படுத்தப்பட்டு வருவதுடன்,

பல்கலைக்கழகத்தின் மூலமும் அது தொடர்பாக உச்சபட்ச முயற்சிகள் எடுக்கப்படுகின்றது.

ரூ. 200 மில்லியன் பெறுமதியான காணியை அடையாளம் கண்டு கொள்வனவு செய்வதற்காக விலைமதிப்பு திணைக்களத்தின் மூலம் விலைமதிப்பு பெறுமதி தற்போது கிடைத்துள்ளதுடன், எதிர்வரும் காலத்தில் மூலதன மானியங்கள் கிடைப்பதைப் பொருத்து அதனை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் அனுப்பிவைக்கப்பட்ட பட்டியல்களுக்கு ஏற்ப பாடநெறிகளுக்கான மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். எனினும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு On Line Registration முறைமையை கடைப்பிடிக்கின்றபடியால் எதிர்காலத்தில் இவ் வெற்றிடங்களின் எண்ணிக்கை பெருமளவு குறைவடையக்கூடும். பல்கலைக்கழகத்தினாலும் இந் நிலைமையை குறைப்பதற்குத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.

(இ)(i) இப் பாடநெறிகள் 07 இல் தற்போது 06 பாடநெறிகள் நடைமுறைப்படுத்தப் படுவதுடன், ஏனைய பாடநெறியின் அவசியம் பற்றி மீளாய்வு செய்யப்படுகின்றது.

(ii) பொறியியல் பீடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள 7 பாடநெறிகளில் இரண்டு பாடநெறிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. ஒன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இரண்டு சார்பாக ஆயத்தப்படுத்தல்கள் நடைபெற்று வருவதுடன், ஏனைய பாடநெறிகள் 02 சார்பான அவசியம் பற்றி மீளாய்வு செய்யப்படுகின்றது.

கட்டடக்கலை பீடத்தின் பாடநெறிகள் நான்கில், இரண்டு ஆய்வுப் பட்ட பாடநெறிகள் என்பதுடன், அவை நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஏனைய பாடநெறிகள் இரண்டு பணியாட்தொகுதியினர் போதுமானளவு இல்லாததனால் ஆரம்பிப்பதற்கு இயலாதுள்ளது.

தகவல் தொழில்நுட்ப பீடத்தின் பாடநெறிகள் இரண்டை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினது அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பட்டமேற்படிப்பு கற்கை பீடத்தின் பிரதான பணி ஆய்வுசார் பட்டங்களை வழங்குவது என்பதனால் இப் பாடநெறியை ஆரம்பிப்பது ஆய்வு பட்ட பாடநெறிகளின் நிலையை மேம்படுத்தியதன் பின்பு நடைமுறைப்படுத்தப்படும்.

(ஈ) 2016 மீளாய்வு ஆண்டினுள் நூலக வசதிகளை மேம்படுத்துதல் சார் பணிகளுக்காக வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தில் ரூ. 47 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் 2016 மூலதன மானியங்களுக்கு ஏற்ப உள்ளபடியாக நூலகம் சார்பாக ரூ. 10.5 மில்லியன் மாத்திரமே ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) இவ் ஆராய்ச்சிகள் 16 இல், 10 ஆய்வுகள் பூர்த்திசெய்யப்பட்டு இறுதி அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2 ஆய்வுகளின் காலம் நீடிக்கப்பட்டுள்ளதுடன், 2 ஆய்வுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. மிகுதி 2 ஆய்வுகளில் ஒரு ஆய்வுக்கான மதிப்பீட்டு அறிக்கையொன்று வழங்கப்பட்டுள்ளதுடன், ஏனைய ஆய்வு தொடர்பாக இறுதி அறிக்கையொன்றை வழங்குமாறு அல்லது காலத்தை நீடித்துக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும், ஆய்வுகளை மேற்கொள்ளும் போது இவ்வாறான வேறுபாடுகள் ஏற்படுவதை தவிர்க்க முடியாது.

(ஊ) ஆய்வுகளை மேற்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் அவற்றை விரைவாக இரத்துச் செய்துகொள்வதற்கு அல்லது விலகிக் கொள்வதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன. ஆராய்ச்சி உதவியாளர்களை தக்கவைத்துக் கொள்வதிலுள்ள சிரமத்தின் அடிப்படையில் இவ் ஆய்வுகள் இரத்துச்செய்யப்படவேண்டியுள்ளன.

4.2. புத்தகங்களை உரிய காலப்பகுதியினுள் மீண்டும் ஒப்படைக்காமை சார்பாக பணியாட்தொகுதியினரிடமிருந்து தண்டப்பண அறவீடு மேற்கொள்ளப்படுவதில்லை.

4.3. **நிதியங்களின் குறைவான பயன்பாடு**

(அ) புலமைப்பரிசில் வழங்கும் போது உரிய பாடங்கள் தொடர்பாக எதிர்பார்க்கப்படும் தகைமை மட்டங்களை அடைந்திருக்கவேண்டியதுடன், அவ்வாறு இல்லாதவிடத்து புலமைப்பரிசில் வழங்கப்படுவதில்லை. எனினும், இச் செயலாற்றலற்ற புலமைப்பரிசில் நிதியங்கள் 36 சம்பந்தமாக மேலதிகமாக ஆராய்ந்து பார்ப்பதற்கும், நிருவாக சபைக்கு அறிவித்து பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் கவனம் செலுத்தப்படுகின்றது.

அத்துடன், புலமைப்பரிசில் வழங்கும் போது உரிய நியதிகள் புலமைப்பரிசில் நிதியளிக்கும் நிறுவனம் அல்லது நபரின் இணக்கப்பாட்டிற்கு ஏற்ப முடிவுசெய்யப் படுகின்றது. அவ் நியதிகளுக்கு இணங்க பல்கலைகழகமானது புலமைப்பரிசிலை வழங்க நடவடிக்கை எடுக்கின்றது.

(ஆ) திணைக்கள அபிவிருத்தி நிதியத்திற்கான நிதி கிடைப்பது சம்பந்தப்பட்ட திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் சுய ஈட்டல் தொழில்பாட்டு வருமானத்தின் மூலம் என்பதுடன், அது உரிய வருடத்தினுள் செலுத்தப்படுகின்ற பாதீட்டு (Budgets) அளவின் பெறுமதிக்கேற்ப தீர்மானிக்கப்படுகின்றது. இந் நிதியக் கணக்கு ஓராண்டுக்காக மாத்திரமன்றி எதிர்வரும் ஆண்டுகளிலும் செயற்படுத்தப்படும் கணக்கு வகையாகும். அதனால், ஓராண்டினுள் இந் நிதியத்திற்கான நிதி கிடைக்காமை அல்லது அதன் மூலம் செலவு செய்யப்படாமை சம்பந்தமாக இந் நிதியத்தை உருவாக்கிய குறிக்கோள்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. மேலும், சம்பந்தப்பட்ட திணைக்களத்தினது தேவைப்பாடுகள் எழுகின்றவாறு அதற்கேற்ப இந்

நிதியத்தின் கணக்கு அத் திணைக்களத்தின் மூலம் பயன்படுத்தப்படுகின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஆ) இப் பாடநெறி அபிவிருத்தி நிதியம் சார்பாக நிதி கிடைப்பது சம்பந்தபட்ட திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பாடநெறிகள் தொடர்பான பாதீட்டு (Budgets) நிதியளிப்பு வழங்கப்படும் சந்தர்ப்பத்திலாகும். அதேபோல். அப் பாடநெறிகளை மேம்படுத்துதல் சார்பான செயற்பாடுகளை இனம்கண்டு கொள்ளும் சந்தர்ப்பத்தின் போது சம்பந்தப்பட்ட செலவுகளை ஏற்றல் நடைபெறுகின்றது. அதனால், இந் நிதியம் ஓராண்டில் செயற்படாமை சம்பந்தமாக அல்லது அதன் மூலம் செலவு செய்யப்படாமை தொடர்பாக இந் நிதியத்தை உருவாக்கிய குறிக்கோளுக்கு பாதிப்பு ஏற்படுத்தப்போவதில்லை.

4.4. பயன்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்.

(அ) பாரிய திறனுள்ள மின் உற்பத்தி இயந்திரம் பொருத்தப்பட்டிருப்பது புதிதாக நிர்மாணிக்கப்படுகின்ற மின் திறன் தேவைப்பாட்டையும் கவனத்தில் கொண்டாகும். அதற்கிணங்க, தகவல் தொழில்நுட்ப பீட கட்டடத்தில் பொருத்தப்பட்டுள்ள மின் பிறப்பாக்கியின் மூலம் TCP - புதிய கட்டடம், கட்டடக்கலை பீட புதிய கட்டடம், வகுப்பறைகள் கட்டடம் இல. 1, கட்டடக்கலை கைத்தொழில் பிரிவு, வகுப்பறை கட்டடம் இல. 2 போன்ற கட்டடங்களின் மின்சார தேவைப்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு ஏற்கனவே மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

புதிய விடுதிக்காக பொருத்தப்பட்டுள்ள மின் பிறப்பாக்கி இயந்திரம் மூலம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள விடுதிக்காகவும், போல்கொட குளத்தின் அருகாமையிலுள்ள காணியில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள விடுதிக்காகவும் மின் வழங்கலை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

வேலை பிரிவில் பொருத்தப்பட்டுள்ள மின் பிறப்பாக்கியின் மூலம் புதிய நிருவாக கட்டடம், ஜேம்ஸ் ஜோர்ஜ் மண்டபம், பழைய விளையாட்டுத்திடல் என்பவற்றுக்காக மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) தற்போது பயன்பாட்டுக்கு எடுக்கக்கூடிய வர்ணப்பூச்சு 200 லீற்றர் அளவு பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டுள்ளதுடன், அது சம்பந்தப்பட்ட இடங்களில் பூசப்பட்டுள்ளதுடன், மிகுதி தொகையும் பூசப்படவுள்ளது.

4.5. தாமதமான கருத்திட்டங்கள்

இக் கருத்திட்டம் சார்பாக மானியத்தை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்த நிறுவனம் அம் மானியத்தை வழங்காததுடன், தற்போது அது தொடர்பான ஆரம்ப திட்டங்களுக்காக செலவிடப்பட்ட இப் பெறுமதி முடிவுறாத வேலைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. எவ்வாறிருப்பினும், பின்பு வந்த காலப்பகுதியில் முழு பல்கலைக்கழகம் சார்பாக பிரதான திட்டமொன்று (Master Plan) தயாரிக்கப்பட்டதுடன், அதனால் இக் கருத்திட்டத்தை

முன்னோக்கி எடுத்துச்செல்வதற்கான அவசியமொன்று எழவில்லை. இப் பெறுமதியை ஏடுகளிலிருந்து நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

4.6. **பணியாட்தொகுதி நிர்வாகம்**

கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாட்தொகுதியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பல்கலைக்கழகம் உச்சபட்ச நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். எனினும், சில பதவிகள் சார்பாக பொருத்தமான ஆட்கள் விண்ணப்பிக்காமை மற்றும் சில பதவிகள் சார்பாக காணப்படும் ஆட்சேர்ப்பு நடைமுறை சார் சிக்கல் தன்மை ஆகியவற்றினால் இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதுள்ளது. எதிர்காலத்தில் இதற்கான தடைகளை நீக்கிக்கொண்டு இவ் வெற்றிடங்களை நிரப்புவததற்கு நடவடிக்கைகளை எடுக்கின்றேன் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். 2017 புதிய அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதி மதிப்பீட்டின் படி களஞ்சிய பொறுப்பாளர் பதவி வழங்கல் பிரிவுடன் இணைப்புச் செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க, களஞ்சிய பொறுப்பாளர் சார்பாக மிகையொன்று எழவில்லை.

4.7. **கொள்வனவு நடைமுறைகள்**

**புதிய சிற்றுண்டிச்சாலை தொகுதிக்குத் தேவையான கதிரைகளும் மேசைகளும் சார் தேவைப்பாடு ஆரம்பத்தில் இனங்காணப்பட்டிருந்ததுடன், அக் கதிரைகள் மற்றும் மேசைகளை கொள்வனவு செய்யும் (வாங்கும்) செயற்பாட்டின் ஆரம்ப நடவடிக்கைகளான சம்பந்தப்பட்ட வடிவமைப்புக்கள் (Designs) மற்றும் விவரணப்பட்டியல் (Specification) தயாரித்தல் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் சிலரிடம் ஒப்படைக்கப்பட்டன. எனினும், அப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் வேளையில் புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், இருந்த சிற்றுண்டிச்சாலையின் இடவசதிகள் அப்போதிருந்த மற்றும் புதிய மாணவர்களுக்கு எவ்வகையிலும் போதுமானதாக இருக்கவில்லை. அதன் காரணமாக இப் புதிய சிற்றுண்டிச்சாலைத் தொகுதியை திறப்பது சம்பந்தமாக கதிரைகளும் மேசைகளும் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வரை பிளாஸ்டிக் கதிரைகள் மற்றும் மேசைகள் வாடகை அடிப்படையில் வாங்கவேண்டியேற்பட்டன.**

5. **வகை கூறுதல் மற்றும் நல்லாட்சி**

5.1 **வருடாந்த செயற்பாட்டுத் திட்டம்**

நிறுவகத்தின் ஒழுங்கமைப்பு முறைமை, அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியினர் மற்றும் தற்போதுள்ள பணியாட்தொகுதியினர் பற்றிய விபரம் சம்பந்தப்பட்ட ஆண்டுக்கான பாதீட்டு ஆவணம், கொள்வனவு திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம், 2016 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத்திட்டம் ஆகியவற்றில் உள்ளடக்கப்படாவிட்டாலும் அவை தனித் தனியாக தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

5.2 **உள்ளகக் கணக்காய்வு**

2017 ஆண்டுக்கான அங்கீக ரிக்கப்பட்ட பணியாட்தொகுதியினரின் படி உள்ளக கணக்காய்வுப் பிரிவுக்கு உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்றும் கணக்காய்வு உதவியாளர் பதவிகள் 04 உம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் காலத்தில் அப் பதவிகள் தொடர்பான ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

5.3 **தீர்வு காணப்படாத கணக்காய்வு பிரிவுகள்**

கம்பனி பதிவாளரினால் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பதிவுக்குறிப்பு தொடர்பான திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கிணங்க தயாரிக்கப்பட்ட பதிவுக்குறிப்பு ஆவணம் தற்போது நிறுவகத்தின் நிறுவன பதிவாளர் மூலம் அங்கீகாரத்திற்காக கம்பனி பதிவாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

5.4 **பாதீட்டு ஆவணம் சார் கட்டுப்பாடு**

2016 ஆண்டுக்கான விரிவான பாதீட்டு ஆவணமொன்று தயார் செய்யப்பட்டுள்ளதுடன், அது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் பொது திறைசேரி ஆகியவற்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரதி கணக்காய்வு பிரிவுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, 2016 ஆண்டுக்கான நிகழ்ச்சித்திட்ட பாதீட்டு ஆவணமொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரதியொன்றும் அரசாங்க கணக்காய்வுப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

6. **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

(அ)(i) பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ தகவல் முறைமை மூலம் உருவாக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் அட்டவணையில் சம்பந்தப்பட்ட வகைப்படுத்தல்கள் செய்யப்படுகின்றன.

(ii) நிறுவகத்தின் வசமுள்ள சொத்துக்கள் உச்ச பயன்பாட்டுடன் பயன்படுத்தப் படுவதனால் தங்களது அவதானிப்புடன் இணங்க முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) வருடாந்த பாதீட்டு ஆவணம் தயாரிக்கப்படுவதுடன், அதற்கிணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும், உள்ளபடியான செலவினம் ஏற்படும் போது ஏதேனும் மாறிகள் ஏற்படலாம்.

(இ) நிதியங்கள் உருவாக்கப்பட்டிருப்பது நீண்டகால நோக்கங்களுடன் என்பதால் அவதானிப்புடன் இணங்க முடியாது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஈ)(i) பொருட்கள் கொள்வனவு செய்யும் செயற்பாட்டின் ஆரம்பம் முதல் இறுதியில் பொருட்களை வழங்குதல் வரையான சகல பொறுப்புக்களும் களஞ்சியப் பொறுப்பாளர் மூலம் நிறைவேற்றப்படுவதில்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். இத் தவறான புரிந்துணர்வு ஏற்பட்டமைக்கு காரணமாக அமைந்த கடமைகள் பற்றிய பட்டியல் தற்போது திருத்தப்பட்டுள்ளது.

(ii) களஞ்சிய ஏடுகள் மற்றும் பந்தாய் அட்டை ஆகியவற்றை இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு வருவதுடன், அவை உயர் அதிகாரிகளின் கண்காணிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றன என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(iv) களஞ்சியப் பொறுப்பாளருக்கு சம்பந்தப்பட்ட கடமைகள் பற்றிய விபரம் வழங்கப்பட்டுள்ளது.

(உ) வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

(ஊ) பல்கலைக்கழகம் எப்போதும் கொள்வனவு வழிகாட்டிக்கிணங்க கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேராசிரியர் கே. கபில சி.கே. பெரேரா
உப வேந்தர்

பிரதிகள்: (1) செயலாளர், உயர் கல்வி மற்றும் கலாசார அமைச்சு.
(2) செயலாளர், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.
(3) தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

## 21.8 சட்ட நியாயாதிக்க சபை நிதிசார் முன்னேற்றம் – 2016

1 நிறுவகத்தின் பெயரும் முகவரியும் - மொறட்டுவைப் பல்கலைக்கழகம், கட்டுபெத்த, மொறட்டுவை

2 செயற்பணி -

- உலக சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் ஆராய்ந்தறியும் மனோபாவத்தையும் அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்வதனையும் போசிக்கக் கூடியதான தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் கல்வியை வழங்குதல்;
- கல்வி வரையறைகளை விருத்திசெய்வதற்காக மற்றும் தேசிய தொழில்நுட்பத் திறமைகளை உயர்வடையச்செய்வதற்காக தேசிய ரீதியில் பொருத்தமான மற்றும் உயர் விளைவுகள் கொண்ட ஆய்வினை மேற்கொள்ளுதல்;
- சர்வதேச ரீதியிலான இடத்தைக் கொண்டதொரு தேசிய பல்கலைக்கழகமாக நாட்டிற்கும் கைத்தொழில் துறைக்கும் சமூகத்திற்கும் நிபுணத்துவ சேவைகளை வழங்குதல்; மற்றும்
- இலங்கையின் நிலைத்திருக்கும், விஞ்ஞான, தொழில்நுட்ப, சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் பங்குபற்றுதல்- என்பன மூலமாக தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் அதிகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கல்வி நிறுவகமாக தென் ஆசியாவில்

3 பிரதான செயற்பாடுகள் - இயந்திரவியல், கட்டடக்கலை, தகவல் துறைகளில் கற்பித்தல், ஆராய்ச்சி, ஆலோசனை மற்றும் ஏனைய தொழில்சார் செயற்பாடுகளை வழங்குதல்.

4 செயலாற்றல் போக்கு

| இல. | விபரம் | அலகு | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமானம் மற்றும் செலவினம்** | | | | | | | |
| 1 | அரசாங்க மானியம் - மீண்டெழும் | ரூ.'000 | 875,881 | 945,205 | 1,048,903 | 1,280,000 | 1,579,000 | 1,724,000 |
| 2 | சொந்த வருமானம் - மீண்டெழும் | ரூ.'000 | 18,221 | 24,981 | 34,424 | 31,944 | 25,995 | 50,735 |
| 3 | பிற மீண்.மானி. (ம.பொல. உ.பண,போன்றன) | ரூ.'000 | 15,368 | 8,958 | 11,150 | 11,915 | 45,538 | 84,937 |
| 4 | மொத்த வருமானம் – மீண்டெழும் (1+2+3) | ரூ.'000 | 909,470 | 979,144 | 1,094,477 | 1,323,859 | 1,650,533 | 1,859,672 |
| 5 | மொத்த ஊழியர் கிரயம் | ரூ.'000 | 617,004 | 687,158 | 873,416 | 1,107,032 | 1,328,679 | 1,466,230 |
| 6 | பிற மீண்டெ. செலவு (பெறு.தேய்வு நீங்கலாக) | ரூ.'000 | 294,102 | 313,154 | 376,413 | 426,263 | 506,352 | 613,618 |
| 7 | மிகை / பற்றாக்குறை {3-(4+5)} | ரூ.'000 | (1,636) | (21,168) | (155,352) | (209,436) | (184,498) | (220,176) |
| 8 | அர.மானி.–மூல.(2015 இல் திறை.பெ.வே.உட்பட) | ரூ.'000 | 252,478 | 269,146 | 304,690 | 714,000 | 640,000 | 1,353,500 |
| 9 | பிற மானியம் – மூலதன செலவினம் | ரூ.'000 | 20,439 | 17,952 | 7,181 | 10,766 | 3,548 | 119,913 |
| 10 | ஏற்பாட்டு நிதியம் – மூலதன செலவினம் | ரூ.'000 | 23,791 | 23,791 | 23,517 | 15,588 | 14,678 | 34,812 |
| 11 | மூலதன செலவினம் – அரச. மானியம் | ரூ.'000 | 262,321 | 269,146 | 304,690 | 718,573 | 663,466 | 1,363,959 |
| 12 | கிரய மீளளிப்பு செயற்பாட்டு பெறுவனவு | ரூ.'000 | 261,015 | 234,953 | 425,648 | 370,228 | 382,955 | 587,443 |
| 13 | கிரய மீளளிப்பு செயற்பாட்டு செலவினம் | ரூ.'000 | 231,307 | 241,199 | 342,850 | 346,728 | 341,515 | 482,398 |
| | **சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்** | | | | | | | |
| 14 | முதலீடுகள் | ரூ.'000 | 343,018 | 334,593 | 331,258 | 341,242 | 349,288 | 359,219 |
| 15 | நடைமுறையல்லா சொத்துக்கள் | ரூ.'000 | 2,077,375 | 2,251,544 | 2,394,147 | 2,885,034 | 3,259,853 | 4,232,292 |
| 16 | நடைமுறை சொத்துக்கள் | ரூ.'000 | 264,805 | 238,864 | 262,614 | 230,425 | 243,835 | 341,867 |
| 17 | நடைமுறை பொறுப்புக்கள் | ரூ.'000 | 414,807 | 502,958 | 419,863 | 497,703 | 577,163 | 673,730 |
| 18 | நடைமுறையல்லா பொறுப்புக்கள் | ரூ.'000 | 350,120 | 373,030 | 652,129 | 759,682 | 774,262 | 878,162 |
| 19 | நன்கொடைகள்/வெளிநாட்டுதவி (திரட்டிய) | ரூ.'000 | 972,338 | 1,059,786 | 1,066,968 | 1,077,734 | 1,081,282 | 1,201,196 |
| 20 | திரட்டு நிதி | ரூ.'000 | 947,933 | 889,227 | 759,122 | 1,034,572 | 1,420,270 | 2,180,290 |
| 21 | ஊழியர்களின் எண்ணிக்கை - கல்விசார் | (எண்.) | 400 | 434 | 508 | 535 | 496 | 422 |
| 22 | மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை | (எண்.) | 993 | 1,005 | 1,274 | 1,178 | 1,089 | 1,100 |
| 23 | மாணவர்களின் எண்ணிக்கை | (எண்.) | 4,745 | 4,956 | 6,328 | 6,841 | 7,601 | 7,922 |
| | **முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள்** | | | | | | | |
| i | மொத்த வருமானத்தில் சொந்த வருமானம் | % | 2.00 | 2.55 | 3.15 | 2.41 | 1.57 | 2.73 |
| ii | ஊழியரொருவ. மொத்த உழைப்பு கிரயம் | ரூ.'000 | 621 | 684 | 765 | 940 | 1,220 | 1,333 |
| iii | மாணவரொருவ. மொத்த உழைப்பு கிரயம் | ரூ.'000 | 130 | 139 | 125 | 162 | 175 | 185 |
| iv | மீண். மானியம் - மாணவருக்கு/ஆண்டிற்கு | ரூ.'000 | 192 | 198 | 157 | 187 | 208 | 218 |
| v | ஒரு பட்டதாரிக்கான மொத்த கிரயம் | ரூ.'000 | 657 | 693 | 692 | 734 | 750 | 769 |
| vi | தொழிலாக்கம் (3 மாதப் பெறுபேற்றில்) | % | 96 | 98 | 98 | 95 | 94 | 94 |
| vii | ஊழியர் ஒருவருக்கான மாணவர் | (எண்.) | 5:01 | 5:01 | 5:01 | 6:01 | 07:01 | 07:01 |
| viii | கல்விசார் ஆளணி. ஒருவ. மாணவர் (உண்மை) | (எண்.) | 12:01 | 11:01 | 12:01 | 12:01 | 15:01 | 19:01 |
| ix | வாகனம் ஒன்றுக்கான மாணவர் | (எண்.) | 164.01 | 160.01 | 198:01 | 180:01 | 185:01 | 180:01 |